# தொழில் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2016 – 2017

## மானியக் கோரிக்கை எண்.27


**எம்.சி. சம்பத்**
தொழில் துறை அமைச்சர்



©
**தமிழ்நாடு அரசு**
**2016**

# தொழில் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2016 – 2017

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–16 |
| 2. | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 17–38 |
| 3. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 39–60 |
| 4. | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | 61–84 |
| 5. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 85–102 |
| 6. | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | 103–130 |
| 7. | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 131–158 |
| 8. | தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் | 159–170 |
| 9. | தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் | 171–182 |
| 10. | தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் | 183–190 |
| 11. | தமிழ்நாடு கனிம நிறுவனம் | 191–210 |
| 12. | புவியியல் மற்றும் சுரங்கத்துறை | 211–222 |
| 13. | சர்க்கரைத் துறை | 223–232 |
| 14. | நிறைவுரை | 233–235 |

# தொழில் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2016–2017

## 1. முன்னுரை

தொழில் மயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடு பல ஆண்டுகளாக முன்னிலையில் திகழ்ந்து வருவதோடு, மோட்டார் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள், ஜவுளி, தோல் பொருட்கள், இலகு ரக பொறியியல் இயந்திரங்கள், பம்புகள் மற்றும் மோட்டார்கள், மின்னணு வன்பொருள், கனரக பொறியியல், மற்றும் இதர பொருட்கள் உற்பத்தியில் தனக்கென ஒரு சிறப்பிடத்தையும் பெற்றுள்ளது. ஜூலை திங்கள் 1991ஆம் ஆண்டில் தாராளமயமாக்கல் கொள்கை நடைமுறைப் படுத்தப்பட்ட பிறகு, நடைமுறைக்கு சாத்தியமான மற்றும் தொலை நோக்குடைய தொழில் கொள்கை 1992 ஒன்றினை தமிழ்நாடு வெளியிட்டதன் விளைவாக, ஃபோர்டு மற்றும் ஹுண்டாய் போன்ற உலகளவில் முன்னணியிலுள்ள பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஈர்க்கப்பட்டன. இது வாகன உற்பத்தி தொழிலில் ஒரு புரட்சி ஏற்பட வழி வகுத்தது. மேலும், 2003ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு

நடைமுறைப்படுத்திய சிறப்பான தொழில் கொள்கையால், நோக்கியா, பிளக்ஸ்ட்ரானிக்ஸ் ஃபாக்ஸ்கான் போன்ற பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு ஈர்க்கப்பட்டன. இக்கொள்கை மின்னணுவியியல் துறையில் ஒரு புரட்சி ஏற்பட தூண்டுகோலாக அமைந்தது. தொலைநோக்குத் திட்டம் 2023, தொழில் கொள்கை 2014 மற்றும் அதன் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015 ஆகியவற்றின் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதாரம் புதிய வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருவதால் தமிழ்நாடு முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக விளங்குகிறது.

தற்போது, தமிழ்நாடு பின் வரும் பல்வேறு முக்கிய காரணிகளில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | காரணிகள் | எண்ணிக்கை / மதிப்பு | தமிழகம் வகிக்கும் இடம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSDP) நிலையான மதிப்பு 2014–15ன் அடிப்படையில் * | ரூ.5,15,458 கோடி | இரண்டாமிடம் |
| 2. | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் (2013–14) $ | 37,455 (16.60%) | முதலிடம் |
| 3. | தொழிற்சாலை துறையில் செய்யப்பட்ட நிலையான மூலதன முதலீடு (2013–14) $ | ரூ.2,70,816.48 கோடி | மூன்றாமிடம் |

| | | | |
|---|---|---|---|
| 4. | வேலை வாய்ப்பு பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை (2013–14) $ | 20,46,553 நபர்கள் | முதலிடம் |
| 5. | தொழில்துறையின் உற்பத்தி மதிப்பு (2013–14) $ | ரூ.6,76,957.33 கோடி | மூன்றாமிடம் |
| 6. | தொழில்துறையின் நிகரமதிப்பு கூடுதல் (2013–14) $ | ரூ.87,212.68 கோடி | மூன்றாமிடம் |
| 7. | புதிய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (2014–15) @ | 1,43,104 | முதலிடம் |
| 8. | அந்நிய நேரடி முதலீடு (ஏப்ரல் 2011 முதல் மார்ச் 2016 வரை) # | ரூ.85,523 கோடி | மூன்றாமிடம் |

*(ஆதாரம்: *http://www.niti.gov.in;*
*$-http://mospi.nic.in; # http://dipp.nic.in;*
*@ MSME Department Policy Note 2015-16)*

உலக வங்கி, “உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள்” என்ற தலைப்பில் ஜுன் 2016ல் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகப் பொருளாதாரம் தொடர்ந்து மிகவும் மந்தமான நிலையில் உள்ளது என தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையின்படி, மொத்த உலக பொருளாதார (Real GDP) வளர்ச்சி 2015ஆம் ஆண்டில் 2.4 சதவீதமாக இருந்தது என தெரிவித்ததோடு மட்டுமின்றி, இந்த மந்தமான நிலை 2016ஆம் ஆண்டிலும் தொடரும் எனவும், மொத்த உலக பொருளாதார (Real GDP) வளர்ச்சி விகிதம் தொடர்ந்து 2.4 சதவீதமாக இருக்குமெனவும் கணித்துள்ளது.

மேலும், மொத்த உலக பொருளாதார வளர்ச்சி விகிதமானது 2017ஆம் ஆண்டில் 2.8 சதவீதமாக உயரும் எனவும் கணித்துள்ளது.

உலக வங்கியால் 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில், இந்தியா, உலகில் உள்ள பெரிய நாடுகளில் மிக அதிகபட்ச வளர்ச்சியாக 7.6 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளதாகவும், அடுத்த இடத்தில் சீனா 6.9 சதவீத வளர்ச்சியுடன் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது. மேலும், 2016லும் இந்தியாவின் வளர்ச்சி வீதம் 7.6% ஆக தொடர்ந்து இருக்கும் எனவும் தெரிவித்துள்ளது. இந்திய மாநிலங்களில் பொருளாதார ரீதியாக இரண்டாவது பெரிய மாநிலமான தமிழ்நாடு, தொடர்ந்து சிறப்பாக செயலாற்றி 2015–16ஆம் ஆண்டில் 8.79 சதவீதம் வளர்ச்சியை எட்டியுள்ளது.

தமிழகத்தின் உற்பத்தித் துறையானது, முக்கியமாக ஏற்றுமதியை சார்ந்துள்ளது. தமிழகத்தில் உள்ள தொழில்களான மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள், தோல் பொருட்கள், ஜவுளி, மென்பொருள் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் (ITES) பொருட்கள் உற்பத்தி போன்ற தொழில்கள் அதிகளவில் ஏற்றுமதியினை சார்ந்து உள்ளன. 2013–14ம் ஆண்டில், தமிழகத்தின் ஏற்றுமதி மதிப்பு ரூ.2,15,400

கோடியாகவும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு **11.5** சதவீதமாகவும் உள்ளது. இதன்படி, தமிழ்நாடு ஏற்றுமதியில் இந்திய மாநிலங்களில் மூன்றாம் இடம் வகிக்கிறது.

**2016** ஜூன் திங்கள் இறுதிவரை ஒப்புதல்கள் அளிக்கப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (SEZ) குறித்த நிலை பின்வருமாறு:

| **சிறப்பு பொருளாதார மண்டல (SEZ) ஒப்புதல்களின் வகை** | **ஒப்புதல் அளிக்கப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| கொள்கையளவிலான ஒப்புதல்கள் | **4** |
| முறை சார்ந்த ஒப்புதல்கள் | **48** |
| அறிவிக்கை செய்யப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | **46** |
| ஏற்றுமதி செய்யும் (ம) இயக்கத்திலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | **36** |

*(ஆதாரம்: (i) http://sezindia.nic.in.;*
*(ii) Report of Development Commissioner, MEPZ)*

ஏற்றுமதி செய்யும் மற்றும் இயக்கத்திலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களைப் (Export and operational SEZs) பொருத்தவரை, **தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் முதலிடத்தில் உள்ளது.** தமிழ்நாட்டில் இயங்கும் சிறப்பு பொருளாதார மண்டலத்திலிருந்து **2015–16**ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஏற்றுமதியின் மதிப்பு ரூ.**82,717** கோடியாகும். சிறப்பு பொருளாதார மண்டலங்களிலிருந்து அதிகளவில் ஏற்றுமதி செய்யும் இந்திய மாநிலங்களில் **தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.**

## 1.1. தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015

உற்பத்தி, உட்கட்டமைப்பு மற்றும் சேவைத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை விரைவுப்படுத்த, **2015**ஆம் ஆண்டு, செப்டம்பர் **9** மற்றும் **10** ஆகிய தேதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் **உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015** ஒன்றினை வெற்றிகரமாக தமிழ்நாடு அரசு நடத்தியது. இது மாநில அரசால், முதன் முறையாக நடத்தப்பட்ட மாபெரும் தொழில் முதலீடு மேம்பாட்டிற்கான நிகழ்வாகும். இந்நிகழ்வில், **9** நாடுகள் **3** மண்டல அரசுகள், **23** வணிக கழகங்கள் மற்றும் கூட்டு வர்த்தக குழுக்கள் ஆகியவை பங்குதாரர்களாக இடம் பெற்றன. இந்த

உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015ல், 7000 உள்நாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டது மட்டுமல்லாமல், 1200 வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்துக் கொண்டனர். இதுவரை இந்தியாவில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்களின் மாநாடுகளிலேயே, தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015 தான் மிகச் சிறப்பானதாக அமைந்தது என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015ல், துவக்கத்தில், ரூபாய் ஒரு இலட்சம் கோடி வரை முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், ஒரே ஆண்டில் 98 திட்டங்கள் மூலம் ரூ.2,42,160 கோடி அளவிற்கு அதிகபட்ச முதலீட்டினை ஈர்த்தது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். இதில் தொழில் துறையின் மூலம் கையொப்பமான 50 நிறுவனங்களின் உறுதியளிக்கப்பட்ட முதலீடான ரூ.1,04,286 கோடியும் அடங்கும். எனவே, உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015 ஒரு மாபெரும் வெற்றியாகும்.

உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015ல் செய்து கொள்ளப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்த திட்டங்களை, நடைமுறைப்படுத்துவதை அரசு தீவிரமாக கண்காணித்து, இதுவரை, இதற்காக ஒவ்வொரு புரிந்துணர்வுத் திட்டத்திற்கும்

ஒரு மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரை ஒருங்கிணைப்பு அலுவலராக நியமித்து முதலீட்டுத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்த ஆணையிட்டுள்ளது. இந்த நடவடிக்கை, முதலீட்டுத் திட்டங்களை செயலாக்கத்திற்குக் கொண்டுவர மிகவும் உதவிகரமாக அமைந்து, இதன் பயனாக ஏற்கனவே 64 முதலீட்டுத் திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் நடைமுறையில் உள்ளன.

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) போன்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் மைய அரசின் வணிகம் (ம) தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த தொழில் கொள்கை மேம்பாட்டுத்துறை வெளியிட்டுள்ள வெவ்வேறு வெளியீடுகளில், தமிழ்நாடு தொடர்ந்து அதிகளவில் முதலீடுகளை ஈர்க்கும் மாநிலமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் அறிக்கையின்படி, 2016 ஜூன் வரை (i) அறிவிப்புகள், (ii) திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை துவக்கப்பட்டுள்ள திட்டங்களில் உத்தேசிக்கப்பட்ட முதலீடுகள், (iii) நடைமுறையில் உள்ள முதலீடுகள் ஆகிய பல்வேறு கட்டங்களில் தமிழ்நாடு முதலீடுகளாக ரூ.11,09,628.36 கோடியளவிற்கு ஈர்த்துள்ளது. இந்திய பொருளாதார

கண்காணிப்பு மையத்தின் புள்ளி விவரப்படி, **1.4.2011** முதல் **30.6.2016** வரையிலான கால கட்டத்தில் தமிழ்நாடு ஈர்த்த கூடுதல் முதலீடு ரூ.**3,75,908.55** கோடி ஆகும். [*ஆதாரம்: CMIE Report (this includes both domestic and foreign investments in pipeline)]*

## 1.2. ஒற்றைச் சாளர முறையில் முதலீடுகளை ஈர்த்தல்

உலக மூதலீட்டாளர்கள் சந்திப்பு **2015**ல், **98** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக பெறப்படும் மூதலீட்டுடன் கூடுதலாக, தொழில்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தொழில் வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau) மூலமாக **2011** ஏப்ரல் முதல் **2016** ஜூலை வரையிலான காலகட்டத்தில் **56** புரிந்துணர்வு அல்லாத திட்டங்களுக்கு ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கியதால் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்பட்ட முதலீடு ரூ.**11,282.52** கோடியாகும்.

## 1.3. அந்நிய நேரடி முதலீடுகள்

மைய அரசின் வணிகம் மற்றும் தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த தொழில் கொள்கை மேம்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, ஏப்ரல் **2011** இறுதியில், தமிழ்நாட்டில் செய்யப்பட்ட அந்நிய நேரடி முதலீடு

ரூ.33,024 கோடி ஆகும். இந்த முதலீட்டு மதிப்பில் தமிழ்நாடு நான்காம் இடத்தில் இருந்தது. இந்நிலையில், மார்ச் 2016 இறுதியில், அந்நிய நேரடி முதலீடு ரூ.1,18,547 கோடியாக அதிகரித்ததால் தமிழ்நாடு மூன்றாவது இடத்திற்கு முன்னேறியது. இதன்படி, ஏப்ரல் 2011 முதல் மார்ச் 2016 வரையிலான காலக்கட்டத்தில் கூடுதலாக ஈர்க்கப்பட்ட அந்நிய முதலீடு ரூ.85,523 கோடி ஆகும். **மே 2011 மார்ச் 2016 வரையிலான காலகட்டத்தில் அந்நிய நேரடி முதலீட்டின் வளர்ச்சி இதுவரை இல்லாத அளவிற்கு 193.45 சதவீதத்தை எட்டி புதிய சாதனை படைக்கப்பட்டது.** *(ஆதாரம்: http://dipp.nic.in)*

இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் மற்றும் இந்திய அரசின் வணிகம் மற்றும் தொழில் அமைச்சகத்தைச் சேர்ந்த தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத்துறை வெளியிட்ட பல்வேறு புள்ளி விவரங்களின்படி, **இந்திய மாநிலங்களில், முதலீட்டுக்கு உகந்த சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.**

தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023ல், ரூ.15 இலட்சம் கோடி முதலீட்டினை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி, உட்கட்டமைப்பு மற்றும் சேவைத் துறைகளில் செய்யப்படும் முதலீட்டுத் திட்டங்கள்

ஆகியவை அடங்கும். இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின் ஜூன் 2016 புள்ளி விவரப்படி, தமிழ்நாட்டில் தற்போது ரூ.11.09 இலட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகள் பல்வேறு கட்டங்களில் செயல்பாட்டில் உள்ளன (Investments in Pipeline) என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மேலும் முதலீடுகளை ஊக்குவிக்கவும், உட்கட்டமைப்புத் திட்டங்களை அரசு, தனியார் பங்களிப்பு வழியாக (Public Private Partnership mode) தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே, “தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சிச் சட்டம் 2012”–ஐ இயற்றி, அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் உட்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்தவும் மற்றும் ஊக்குவிக்கவும் “தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்” (TNIDB) ஒன்றினை அமைத்துள்ளது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023ல் பட்டியல் இடப்பட்டுள்ள 217 உட்கட்டமைப்பு திட்டங்களில் 88 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனைய திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும்போது, தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம்–2023ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் அடையப்படும்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு தேவையான கொள்கை கட்டமைப்பை உருவாக்க புதிய தொழில் கொள்கை,

மோட்டார் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் கொள்கை மற்றும் தமிழ்நாடு உயிரி தொழில் நுட்பக் கொள்கை ஆகியவற்றை தமிழ்நாடு அரசு, 2014ஆம் ஆண்டு வகுத்துள்ளது. மாநிலத்தின் வலிமையாக குறிப்பாக கருதப்படும் திறன்மிக்க தொழிலாளர் அமைப்பு, நான்கு முக்கிய துறைமுகங்கள், நான்கு பன்னாட்டு விமான தளங்கள், அடர்ந்த சாலை இணைப்பு வசதி போன்ற உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு ஆகியவற்றால், விவசாய தொழில் நுட்பம் முதல் வான்வெளி தொழில் நுட்பம் வரை பன்முக துறைகளில் மாநிலம், உலகின் சிறந்த நிறுவனங்களின் உறைவிடமாக திகழ்ந்து வருகிறது.

மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் தொழில் மயமாக்கலை பரவலாக்குவதின் தேவையை உணர்ந்து, அரசு தனது புதிய தொழில் கொள்கை 2014ல் தென் மாவட்டங்களில் முதலீடுகளை ஊக்குவிக்கும் சலுகைகளையும் உள்ளடக்கியதாகும். மதுரை–தூத்துக்குடி தொழில் பெரு வழிச்சாலை, இராமநாதபுரம் தேசிய முதலீட்டு மண்டலம் மற்றும் உற்பத்தி மண்டலம் ஆகிய திட்டங்கள் தென் மாவட்டங்களில் அமைவதன் மூலம் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப் பட்டுள்ளது. மேலும், உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் திட்டங்களில் ஏறக்குறைய 50 சதவீதம் தொழிற்சாலைகள் தென்

மாவட்டங்களில் அமைக்கப்படுவதாகும். இந்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழக மக்களின் தனி நபர் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரம் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக உயரும்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10.09.2015 அன்று நடைபெற்ற தமிழ்நாடு உலக முதலீட்டாளர்களின் சந்திப்பு 2015 நிறைவு விழாவில் பேருரையாற்றினார்கள்.

## 2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் தொழில் வளாகங்கள் மற்றும் தொழில் பூங்காக்களை அமைத்தும் கடந்த 2000ஆம் ஆண்டு வரை தொழில் நிறுவனங்களுக்கான நிதி உதவியையும் வழங்கி வந்தது. எனினும், 2001ஆம் ஆண்டிலிருந்து, தொழில் வளர்ச்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணியில் அதிக கவனம் செலுத்தும் வகையில் தொழில் வளாகங்கள் / பூங்காக்களை உருவாக்கி அவற்றைப் பராமரிப்பு செய்யும் பணியை மட்டும் செய்து வருகிறது.

சிப்காட் நிறுவனம் இதுவரை, மாநிலத்தின் 12 மாவட்டங்களில் 31,645 ஏக்கரில், 20 தொழில் வளாகங்கள் / பூங்காக்கள் / வளர்ச்சி மையங்களை (6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட) உருவாக்கியுள்ளது. இதுவரை ஒதுக்கீட்டிற்குரிய 24,100 ஏக்கர் நிலப்பரப்பில், 2,325 தொழில் நிறுவனங்களுக்கு 20,037 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் ரூ.1,04,247 கோடி முதலீடும் சுமார் 6.17 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் வழிகாட்டுதலோடு சிப்காட் நிறுவனத்தின் முற்போக்கு செயல்பாடுகளால் திருவாளர்கள் ரெனால்ட் நிசான், டேய்ம்லர், ஹூண்டாய், செய்ன்ட் கோபைன், சாம்சங், டெல், அசோக் லேலண்ட், குரோத் லிங்க், அப்பலோ டயர்ஸ், மிஷ்லின் டயர்ஸ், இந்தியா யமஹா, போன்ற பல பெருந்தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிற்கூடங்களை சிப்காட் தொழில் வளாகங்களில் ஏற்கனவே நிறுவியுள்ளன. இது மாநிலத்தின் பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றத்திற்கு ஒரு சிறந்த சான்றாக அமைகிறது.

தமிழகத்தில் பசுமையுடன் கூடிய தொழில் பூங்காக்கள் அமையும் வண்ணம் சிப்காட் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மேலும், சிறப்பு திட்டங்களான சிறப்பு தொழில் பெருவழிச்சாலை, சிறப்பு பொருளாதார மண்டலங்கள், ஆடைகள் தயாரிப்பு பூங்கா, காலணி பாகங்கள் தயாரிக்கும் பூங்கா, திறன் மேம்பாட்டு மையங்கள், தங்குமிடங்கள் கட்டித்தருதல், நீர் பெருக்குத் திட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சரக்கு வாகன முனையம் அமைத்தல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

சிப்காட் நிறுவனம், தொகுப்பு சலுகைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் தமிழ்நாடு அரசின் முகவாண்மை அமைப்பாகவும் (Nodal Agency) செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், அதிக முதலீடு மற்றும் பெருமளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் பெருந்தொழில் (Mega Industries), மிகப்பெருந்தொழில் (Super Mega Industries) மற்றும் மிகமிகப் பெருந்தொழில் (Ultra Mega Industries) நிறுவனங்களுக்கு அரசு பல்வேறு ஊக்க நிதியுதவிகளை வழங்கி வருகிறது.

## 2.1. நிறுவன செயல்பாடு

### 2.1.1. புதிதாக உருவாக்கப்பட்டு வரும் தொழில் வளாகங்கள்

தற்போது, தென்மாவட்டங்களில் உருவாகிவரும் 9 தொழில் பூங்காக்களை தவிர்த்து, மேலும் 12 தொழில் பூங்காக்களை அதாவது 10 புதிய தொழில் பூங்காக்கள் மற்றும் 2 விரிவாக்கத் திட்டங்களை உருவாக்குவதற்காக, சுமார் 12,762.32 ஏக்கர் பரப்பளவில் கீழ்குறிப்பிட்டுள்ள தொழில் பூங்காக்களுக்கான நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. மதுரை தொழில் பூங்கா (1478.71 ஏக்கர்)
2. திண்டிவனம் தொழில் பூங்கா (720.27 ஏக்கர்)
3. மணப்பாறை தொழில் பூங்கா (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) (1077.05 ஏக்கர்)
4. பனப்பாக்கம் தொழில் பூங்கா (வேலூர் மாவட்டம்) (1112.41 ஏக்கர்)

5. குருபரபள்ளி (கிருஷ்ணகிரி மாவட்டம்) தொழில் பூங்கா (200.45 ஏக்கர்)

6. தருமபுரி தொழில் பூங்கா (1733.40 ஏக்கர்)

7. மாநல்லூர் (திருவள்ளூர் ) தொழில் பூங்கா (706.57 ஏக்கர்)

8. ஒசூர் தொழில் வளாகம் – நிலை III (834.57 ஏக்கர்)

9. ஒசூர் தொழில் வளாகம் – நிலை IV (1882.36 ஏக்கர்)

10. ஒரகடம் தொழில் வளர்ச்சி மையம் விரிவாக்கம்–II (வைப்பூர்–மாத்தூார்) (616.30 ஏக்கர்)

11. செய்யாறு தொழில் வளாக விரிவாக்கம் (2300.57 ஏக்கர்)

12. பெரம்பலூார் ஜவுளிப் பூங்கா (99.66 ஏக்கர்)

### 2.1.2. தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துதல்

தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவித்துள்ளபடி, சிப்காட் நிறுவனம் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 9 தென்மாவட்டங்களில் புதிய தொழில் பூங்காக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி, கீழ்க்காணும் ஆறு மாவட்டங்களில் ஏழு தொழில்

பூங்காக்களுக்காக சுமார் **8,561.92** ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. சிவகங்கை தொழிற்பூங்கா **(1451.28** ஏக்கர்**)**
2. காரைக்குடி தொழிற்பூங்கா **(1253.24** ஏக்கர்**)**
3. விருதுநகர் தொழிற்பூங்கா **(2540.40** ஏக்கர்**)**
4. இராமநாதபுரம் தொழிற்பூங்கா **(224.65** ஏக்கர்**)**
5. தேனி தொழிற்பூங்கா **(1623.01** ஏக்கர்**)**
6. புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வ–கோட்டை தொழிற்பூங்கா **(1234.29** ஏக்கர்**)**
7. கன்னியாகுமரி தொழிற்பூங்கா **(235.05** ஏக்கர்**)**

எஞ்சிய, மூன்று மாவட்டங்களில் நிலம் கையகப்படுத்துவதற்கான நிர்வாக அனுமதி கோரும் முன்மொழிவுகள் பல்வேறு நிலைகளில் பரிசீலனையில் உள்ளன.

**2.1.3. சிறப்பு ஊக்க உதவித் திட்டங்கள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தென் மாவட்டங்களில் தற்போது அமைந்துள்ள மற்றும் அமையவுள்ள சிப்காட் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் தொழிற்சாலைகளை அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்காணும் சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

1. சிப்காட் நிறுவனத்தால் 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். (இம்மானியம் சிப்காட் நிறுவனத்திற்கு அரசால் நேரடியாக திரும்ப அளிக்கப்படும்.)
2. நிலம் பத்திர பதிவுக்கான முத்திரைத் தாள் கட்டணத்தில் 100 சதவிகித விலக்கு அளிக்கப்படும்.
3. மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிக்கப்படும்.
4. தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.
5. மதிப்புக் கூட்டிய வரி, அதாவது VAT அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச முதலீட்டுத் தொகையான ரூ.50 கோடி என்பது ரூ.10 கோடியாக குறைக்கப்படும்.

மேற்காணும் சிறப்பு சலுகைகளின் கீழ், சிப்காட் நிறுவனம் இதுவரையில் நிலக்கோட்டை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, மானாமதுரை மற்றும் கங்கை கொண்டான் தொழில் வளாகங்கள் / வளர்ச்சி மையங்களில் 42 நிறுவனங்களுக்கு 75.39 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் சுமார் ரூ.93.91 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதோடு 1,422 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 2.2. சிறப்பு பொருளாதார மண்டலங்கள்

அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காகவும், ஏற்றுமதியை அதிகரிப்பதோடு பெருமளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், சிப்காட் நிறுவனம் அதன் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் கீழ்க்கண்ட ‘குறிப்பிட்ட வகை தொழில் சார்ந்த’ ஆறு சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.

- திருப்பெரும்புதூரில் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் **(486.03** ஏக்கர்**)**
- ஒரகடத்தில் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் **(347.66** ஏக்கர்**)**
- பெருந்துறையில் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் **(263.19** ஏக்கர்**)**
- கங்கைகொண்டானில் போக்குவரத்து பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் **(255.00** ஏக்கர்**)**
- இராணிப்பேட்டையில் பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம் **(133.76** ஏக்கர்**)**
- பர்கூரில் கிரானைட் தொழில்கள் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் **(235.98** ஏக்கர்**)**

பல பெருந்தொழில் நிறுவனங்களான திருவாளர்கள் டெல் இந்தியா பிரைவேட் லிமிடெட், சான்மினா, நோக்கியா நெட்வொர்க் சொல்யூசன்ஸ், ஏடிசி டயர்ஸ், விப்ரோ போன்றவை சிப்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் பெரும் முதலீட்டில் தங்களது தொழிற்கூடங்களை துவக்கியுள்ளன.

இதுவரை, 45 தொழில் நிறுவனங்களுக்கு 1,024.36 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன் வாயிலாக சுமார் 60,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**2.3. புரிந்துணர்வு ஒப்பந்த நிறுவனங்கள்**

தமிழக அரசால் 2015ல் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் சந்திப்புக்கு முன்பு வரை 62 முன்னணி தொழில் நிறுவனங்களுடன் கையெழுத்திடப்பட்ட, ரூ.77,551 கோடி முதலீட்டுக்கான 73 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (விரிவாக்கத் திட்டங்கள் உள்பட) 41 நிறுவனங்கள் சிப்காட் தொழில் வளாகங்களிலேயே நிறுவப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த 41 நிறுவனங்களில், 34 நிறுவனங்கள் தங்களது தொழிற் கூடங்களை சிப்காட் வளாகங்களில் நிறுவி உற்பத்தியை துவங்கிவிட்டன. மற்ற நிறுவனங்களும் தங்கள் தொழிற்கூடங்களை விரைந்து நிறுவி வருகின்றன. இவற்றின் மொத்த முதலீடு ரூ.51,000 கோடி ஆகும். இந்நிறுவனங்களின் மூலம் 53,585 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர, **2015**ல் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் தொழில் துறையின் சார்பில் **50** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. அவற்றுள், சிப்காட் தொழில் பூங்காக்களில் அமையப் பெறும் **18** நிறுவனங்களில் **12** நிறுவனங்கள் தங்களது தொழிற்கூடங்களை அமைத்தல் / விரிவாக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளன.

**2.4. சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை**

சிப்காட் நிறுவனம், கீழக்கண்ட தேசிய நெடுஞ்சாலைகளை ஒட்டி சிறப்புத் தொழில் பெருவழிச் சாலைகளை (**Industrial Corridor of Excellence**) உருவாக்குவதற்காக கலந்தறிதற்குரியர் (Consultant) மூலம் ஆயவறிக்கை தயாரித்துள்ளது.

1. சென்னை – பெங்களூரு தொழில் பெருவழிச் சாலை (CBIC) :

   இது மத்திய அரசின் திட்டம் – டிட்கோ இதன் முகவாண்மை செயல் நிறுவனமாக (NODAL AGENCY) செயல்பட்டு வருகிறது.

2. மதுரை – தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் – சேலம் தொழில் பெருவழிச் சாலை.

## 2.4.1. மதுரை – தூத்துக்குடி தொழில் பெருவழிச் சாலை

இச்சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை, தொழில துறையில் பின்தங்கிய தென்மாவட்டங்களில் சுற்றுச் சூழலை பாதுகாத்து மேம்பட்ட பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சியை உருவாக்கிட செயல்படுத்தப்பட உள்ளது. தரம் வாய்ந்த சாலைகள், இரயில் தொடர்பு வசதி, சிறப்பு நிதி பிராந்தியம், இதர தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளான நகரியங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் போன்ற பிற வசதிகளையும் இப்பெருவழிச்சாலை பெற்றிருக்கும்.

இத்திட்டம், 10 ஆண்டுகளில் ரூ.40,000 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலமாக ரூ.1,90,000 கோடி தொழில் முதலீட்டை ஈர்க்கும் எனவும் அதனால் 18 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை–தூத்துக்குடி தொழில் பெருவழிச் சாலைக்கான திட்டத்தை செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (Tamil Nadu Infrastructure Development Board) உயர்நிலை அமைப்பாகவும், சிப்காட் நிறுவனம் திட்ட ஒருங்கிணைப்பு

முகவராகவும் செயல்படும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, சிப்காட் நிறுவனம், மதுரை தூத்துக்குடி தொழில் பெருவழிச்சாலை மேம்பாட்டுக் கழகம் (Madurai Thoothukudi Industrial Corridor Development Corporation Limited) என்ற பெயரில் ரூ.10 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீட்டுடன் ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை 17.04.2015ல் உருவாக்கியுள்ளது. இப்பெருவழிச் சாலைப் திட்டப் பகுதியில் நில எடுப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் விரைவாக நடைபெற்று வருகின்றன.

**2.4.2. திருப்பெரும்புதூரில் – 10 MGD கொள்திறன் கொண்ட மூன்று கட்ட சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் பெறும் திட்டம் (TTRO Plant)**

சிப்காட் தொழில் பூங்காக்கள் விரிவாக்கம் செய்யப்பட்டதாலும், வல்லம்–வடகால் மற்றும் வைப்பூர்–மாத்தூர் ஆகிய புதிய திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாகவும், சிப்காட் நிறுவனத்தால் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழிற்பூங்காக்களின் தண்ணீர் தேவை 5 MGDலிருந்து 10 MGD ஆக உயர்ந்துள்ளது. இத்தேவையை நிறைவு செய்யும் பொருட்டு சிப்காட் நிறுவனம் 10 MGD கொள்திறன் கொண்ட மூன்று கட்ட சுத்திகரிப்பு மற்றும்

எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் பெறும் திட்டத்தை (TTRO Plant) சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலமாக கோயம்பேட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு நிர்வாக அனுமதியை தமிழக அரசு டிசம்பர் 2014ல் வழங்கியுள்ளது. மேலும், இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு (CMWSSB) ஆலோசனைக் கட்டணமாக ரூ.2.40 கோடியை சிப்காட் நிறுவனம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB), திருவாளர்கள் Wabag-IDE Consortium என்ற நிறுவனத்திற்கு ரூ.594 கோடிக்கு 3.3.2016ல் பணி ஆணையை வழங்கியுள்ளது. இந்நிறுவனம் முதற்கட்டமாக குழாய் அமைப்பதற்கான நில ஆய்வு பணிகள் மற்றும் மண்வள பரிசோதனைகள் இருங்காட்டுகோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடத்தில் முடிக்கப்பட்டு மற்ற பணிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் இத்திட்டம், 2018ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.5. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுக் கழிவுகளை தகுந்த முறையில் மாற்றி வெளியேற்ற அக்கழிவுகளை சுத்திகரித்து, சேமித்து அகற்றும் மிகப்பெரிய திட்டம் கும்மிடிப்பூண்டி ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற்பூங்காவில் 26.91 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை சங்கத்தினால் தமிழ்நாடு கழிவுகள் மேலாண்மை நிறுவனம் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இதேபோன்ற திட்டத்தை, தூத்துக்குடி சிப்காட் தொழில் வளாகத்தில் ஒன்றும், பெருந்துறை சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் மற்றொன்றும் என தலா 20 ஏக்கரில், தொழிற்சாலை கழிவுகள் மேலாண்மை சங்கத்தின் மூலம் செயல்படுத்திட சிப்காட் நிறுவனம் முனைந்துள்ளது.

### 2.5.1. திருப்பெரும்பூதூரில், வானூர்திப் பூங்கா

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், வல்லம் கிராமத்தில் சிப்காட் தொழில் பூங்காவில் 245 ஏக்கர் பரப்பளவில் வானூர்திப் பூங்கா அமைத்திட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இப்பூங்கா வானூர்திகளுக்கான உதிரிபாகங்கள் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டு

245 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.350 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் தொழில்களுக்கான பொது ஆய்வு மற்றும் தொழில்நுட்ப மையம் அமைய உள்ளது. இதுவரை 36.19 ஏக்கர் நிலம், 13 நிறுவனங்களுக்கு சிப்காட் நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பூங்காவில், ஐந்தாண்டுகளில் ரூ.1000 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு சுமார் 10,000 நபர்களுக்கு நேரடியாகவும் மற்றும் 25,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். இங்கு ரூ.30 கோடி மதிப்பீட்டில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான சாலைகள், தெருவிளக்குகள், மழைநீர் வடிகால் அமைப்புகள் உருவாக்கப்படவுள்ளது.

**2.6. மணக்குடியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா**

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டத்தில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா (Integrated Textile Processing Park) ஒன்று ரூ.150 கோடி மதிப்பில் சுமார் 224.65 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இப்பூங்காவில் நாளொன்றுக்கு ஒரு கோடி லிட்டர் திறனுள்ள (10 MLD) கடல் நீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்று நிறுவப்படும். இப்பூங்காவில் இடம் பெறும் 30 ஜவுளித்துறை தொழில் நிறுவனங்கள் மூலம் சுமார்

ரூ.450 கோடி முதலீடு ஈர்க்கப்படும். இவற்றின் மூலம் 6000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.மத்திய அரசின் மானியமாக ரூ.70 கோடியும், சிறப்பு நோக்க முகமையின் பங்கு தொகையாக ரூ.40 கோடியும், மாநில அரசு மற்றும் சிப்காட் நிறுவனத்தின் பங்குத் தொகையாக ரூ.40 கோடி திட்ட நிதியாக இருக்கும்.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், மணக்குடி கிராமத்தில் 224.65 ஏக்கரில் அமைக்கப்படவுள்ள ஜவுளிப் பூங்காவுக்காக முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டு, நிலம் சிப்காட் வசம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான திட்ட அனுமதி மற்றும் மத்திய அரசின் நிதியுதவி கோரும் கருத்துருக்கள், மத்திய அரசின் ஜவுளித் துறைக்கு அனுப்பப்பட்டு ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. Coastal Regulatory Zone Clearanceமற்றும் சுற்றுச் சூழல் அனுமதி பெறுவதற்கான கலந்தறிதற்குரியர் (Consultant) நியமிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனைக்குப் பின்னர் தி/ள். இட்காட் நிறுவனத்திற்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழக சுற்றுச் சூழல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மையத்தோடு இணைந்து கூட்டாக செயல்படுவதற்காக பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## 2.7. திறன் மேம்பாட்டு மையங்கள்

இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக, ஒரகடம் தொழில் வளர்ச்சி மையத்தில் ஏற்படுத்தப்பட்டது போல திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் தொழில் வளர்ச்சி மையத்தில் ஒன்றும், திருவள்ளூர் மாவட்டம், தேர்வாய்க்கண்டிகை தொழில் பூங்காவில் மற்றொன்றும் என இரண்டு திறன் மேம்பாட்டு மையங்களை அமைத்திட சிப்காட் நிறுவனம் முனைந்துள்ளது. இம்மையங்களில் பயிற்சி பெறும் இளைஞர்கள் தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்கு வழி வகை செய்யப்படும்.

## 2.8. தங்குமிட வசதி


காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான தங்குமிடங்களை ஏற்படுத்தும் நோக்கில் அவர்கள் தங்குவதற்காக அனைத்து வசதிகளுடன் கூடிய இரண்டு தங்குமிடங்களை (Dormitories) ஆண்கள் (400 நபர்கள்) மற்றும் பெண்களுக்காக (600 நபர்கள்) தனித்தனியாக திருப்பெரும்புதூரில் சிப்காட் நிறுவனம் கட்டி முடித்து அவை பயன்பாட்டில் உள்ளன.

இதேபோன்று, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் உள்ள நெருப்பெரிச்சல் கிராமத்தில் இரண்டு தங்குமிடங்கள்

ஆண்கள் (400 நபர்கள்) மற்றும் பெண்களுக்காக (600 நபர்கள்) சுமார் ரூ.17 கோடி செலவில் அமைத்திட முடிவெடுக்கப்பட்டு, இதில் பெண்கள் தங்குமிடத்தின் கட்டிட கட்டுமானம் முடிவடைந்துள்ளது. பிறகு தரை அமைத்தல், மின்சார வசதிகள், நீர் வழங்கு வசதிகள், கழிவுநீர் அமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



வல்லம் – வடகாலிலுள்ள தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தில் அமைந்துள்ள தொழில் பூங்காவின் வான்வழிக் காட்சி.



தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்
நிதிச் செயல்பாடு
(ரூபாய் கோடியில்)
மொத்த வருவாய்
நிகர இலாபம்
அறிவிக்கப்பட்ட ஆதாயப் பங்கு (சதவீதத்தில்)
ஆதாயப் பங்கு
800
700
600
500
400
300
200
100
0
649.83
144.69
25%
14.48
711.17
182.32
25%
14.48
603.01
196.47
30%
17.37
688.09
87.21
45%
26.06
509.60
120.07
45%
26.06
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
(தற்காலிகமானது)

## 3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் **(டிட்கோ),** தனியார் தொழில் முனைவோருடன் கூட்டு சேர்ந்து, பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை நிறுவி, மாநிலத்தில் சமச்சீரான, விரைவான மற்றும் தொடர்ச்சியான தொழில் வளர்ச்சியை எய்துவதற்காக, தமிழ்நாடு அரசால் **1965**ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு முதன்மை தொழில் வளர்ச்சி முகமையாகும். மாநிலத்தின் பொருளாதாரமற்றும் சமுதாய வளர்ச்சியை மேம்படுத்தும் தொலைநோக்குடன் பெரும் முதலீடுகள் மற்றும் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பை நல்கும் பெருந்தொழில் மற்றும் உட்கட்டமைப்புத் திட்டங்களை தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் வழிவகை செய்து வருகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், இரசாயனம், உரம், மருந்துப்பொருட்கள், ஜவுளித்துறை, இரும்பு மற்றும் எஃகு, உணவு மற்றும் வேளாண், மலர்ச்செடி வளர்ப்பு, பொறியியல், பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலிய இரசாயனம் போன்ற பல முன்னோடி தொழிற் திட்டங்களையும் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், வேளாண் ஏற்றுமதி மண்டலம் மற்றும் உயிரி தொழில்நுட்ப

பூங்கா போன்ற உட்கட்டமைப்பு திட்டங்களையும் நிறுவியுள்ளது. டைட்டன் இன்டஸ்டீரிஸ், மகிந்திரா வேர்ல்டு சிட்டி, தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்டஸ், டைடல் பார்க், அசென்டாஸ் ஐ.டி. பார்க், டைசல் பயோ பார்க், தகவல் தொழில்நுட்ப விரைவு சாலை, சென்னை வர்த்தக மையம் மற்றும் எல்&டி ஷிப் பில்டிங் நிறுவனங்கள் போன்றவை டிட்கோ நிறுவனத்தின் முக்கிய கூட்டுத்துறை நிறுவனங்களாகும்.

டிட்கோ நிறுவனத்தின் முதலீட்டு மதிப்புத் தொகையான ரூ.476.59 கோடி (மார்ச் 2016 வரை) பெரும்பாலும் கூட்டு நிறுவனங்களில் பங்கு முதலீடுகளாகவும் மற்றும் நடப்புத் திட்டங்களில் முதலீடுகளாகவும் உள்ளது.

தற்போது, திருவள்ளூர் மாவட்டத்தில் திரவ நிலை எரிவாயு முனையம், கடலூரில் பெட்ரோலிய சுத்திகரிப்புத் திட்டம், தரமணியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு சிறப்பு முதலீட்டு மண்டலம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் டைசல் பயோபார்க்–III திட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் பாலிமர்ஸ் தொழில் வளாகம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பெட்ரோலியம், இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய

இரசாயனப் பொருட்களின் முதலீட்டுப் பகுதிக்கான திட்டம் மற்றும் சென்னைக்கு அருகில் பிள்ளைபாக்கத்தில் கதிர்வீச்சு மூலம் ஒருங்கிணைந்த உணவுப் பதப்படுத்தும் மையம் போன்ற திட்டங்களை டிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகின்றது.

மேலும், திருப்பெரும்புதூர் வானூர்தி பூங்காவில் வானூர்திகள் உற்பத்தி சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் கனரக பொறியியல் உதிரி பாகங்கள் மையம், இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய முதலீட்டு மற்றும் உற்பத்தி மண்டலம், சென்னை–பெங்களூரு தொழில் பெருவழிச்சாலையில் பொன்னேரி தொழில் முனையம் அமைக்கும் திட்டம் மற்றும் செங்கல்பட்டு அருகில் மருத்துவப் பூங்கா திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை டிட்கோ நிறுவனம் எடுத்து வருகிறது.

## 3.1. தற்போதைய திட்டங்கள்

### 3.1.1. திரவ நிலை எரிவாயு (LNG) இறக்குமதி முனையம் திட்டம், திருவள்ளூர் மாவட்டம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் இந்தியன் ஆயில் நிறுவனமும் இணைந்து திருவள்ளூர் மாவட்டம்,

காட்டுப்பள்ளி கிராமம், எண்ணூரில் காமராஜர் துறைமுகம் அருகில், சுமார் ரூ.5,170 கோடி முதலீட்டில், திரவநிலை எரிவாயு இறக்குமதி முனையத் திட்டம் ஒன்றினை நிறுவி வருகின்றன. இந்த முனையம் ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் திரவ நிலை எரிவாயுவை இறக்குமதி செய்து, அதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 180 இலட்சம் கனமீட்டர் எரிவாயுவை மாநிலத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள், உரத்தொழில் மற்றும் இதர தொழிற்சாலைகள், வீடுகளுக்கான எரிவாயு தேவைகள் மற்றும் போக்குவரத்து துறைகளுக்கு விநியோகம் செய்யும்.கடந்த மார்ச் 2012ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் டிட்கோவும் இந்தியன் ஆயில் நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான தொழில்நுட்பப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் சுற்று சூழல் மற்றும் வனத்துறை, இத்திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது. ஏற்கெனவே எண்ணூரில் காமராஜர் துறைமுகத்தின் விரிவாக்கத் திட்டங்களுக்காக டிட்கோ வழங்கிய நிலங்களிலிருந்து, 130 ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற இந்தியன் ஆயில் எல்.என்.ஜி பிரைவேட் லிமிடெட் (Indian Oil LNG Private Limited) என்ற கூட்டுத்துறை நிறுவனம்

உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த செப்டம்பர் 2015ல் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2018ஆம் ஆண்டில் செயல்பட துவங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 3.2. ட்ரில் இன்ஃபோ பார்க் லிமிடெட், தரமணி

தரமணியிலுள்ள 25.27 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையத்துடன் கூடிய தகவல் தொழில் நுட்பம் – தகவல் தொழில் நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலத்தை டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃபிராஸ்ட்ரக்சர் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத்துறையில் டிட்கோ செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட திட்ட மதிப்பு ஏறக்குறைய ரூ.4000 கோடியாகும்.

முதல் கட்டமாக, 3.4 மில்லியன் சதுர அடி பரப்புள்ள நான்கு கட்டிட அடுக்குகள் முடிக்கப்பட்டு, அதில் காக்னிஸென்ட், இன்ஃபோஸிஸ், மைண்ட் ட்ரீ, ஹெச்பி, டிசிஎஸ், சிஸ்கோ, விப்ரோ, சிட்டி பேங்க், ஃபிடிலிட்டி, பெர்ஷிங், சைன்டிபிக் பப்லிஷிங் சர்வீஸஸ், சைடெல், ஐநாடிக்ஸ் போன்ற முன்னணி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ட்ரில் இன்ஃபோ பார்க் லிமிடெட், 1.2 மில்லியன் சதுர அடி பரப்புள்ள

கூடுதல் தகவல் தொழில் நுட்ப இடத்தை விரிவுபடுத்துவது, ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையம் மற்றும் வசதிகளுடன் கூடிய 100 தங்கும் அறைகள் கட்டுவது போன்ற திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகளுக்கான கட்டிட பணிகளை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 18,000 நபர்களுக்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு உருவாகியுள்ளது.

### 3.3. டைசல் உயிரித் தொழில் நுட்பப் பூங்கா–III, கோயம்புத்தூர்

கோயம்புத்தூரில் ரூ.55 கோடி செலவில் டைசல் பயோபார்க்–IIIஐ டிட்கோ மற்றும் டைடல் பார்க் நிறுவனங்கள் இணைந்து அமைத்து வருகின்றன. இத்திட்டத்திற்கு மானியமாக ரூ.10 கோடி கடந்த 05.11.2015 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. பொறியியல் வடிவமைப்பாளர் மற்றும் கட்டுமான ஒப்பந்ததாரர் நியமிக்கப்பட்டுள்ளனர்.மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கு 29.01.2016 அன்று அடிக்கல் நாட்டினார்கள். இத்திட்டத்திற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.4. பாலிமர்ஸ் தொழில் வளாகம், திருவள்ளூர் மாவட்டம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள வாயலூர் கிராமத்தில் 306 ஏக்கர் பரப்பளவில் ரூ.264 கோடி திருத்திய திட்டமதிப்பில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி வளாகம் ஒன்றினை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இவ்வளாகம், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் 84 சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் அமைக்க ஏதுவான உள்கட்டமைப்பு வசதிகள் உடையதாக இருக்கும். இவ்வளாகம் முழுமையாக செயல்படும்போது சுமார் ரூ.2,100 கோடி முதலீட்டை ஈர்க்கும் என்றும், 32,000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத் துறையினால் அறிவிக்கப்பட்ட கொள்கையின்படி, இத்திட்டத்திற்கு திட்ட முதலீட்டு செலவில் ரூ.40 கோடி மத்திய அரசிடமிருந்து மானியமாக பெறலாம். இத்திட்டத்திற்கு மத்திய அரசு கடந்த ஏப்ரல் 2012ல் தனது முதல் நிலை ஒப்புதலை அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக, டிட்கோ மற்றும் சிப்காட்

நிறுவனம் இணைந்து ஒரு சிறப்பு நோக்கு நிறுவனமான (SPV) தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் எனப்படும் ஒரு கூட்டுத்துறை நிறுவனத்தை துவங்கியுள்ளனர். இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள **306** ஏக்கர் பரப்பளவு நிலங்களை, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திட்ட நிறுவனமான தமிழ்நாடு பாலிமர் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திடம் டிட்கோ ஒப்படைத்துள்ளது. இத்திட்டத்திற்கான இறுதி ஒப்புதலை மத்திய அரசின் இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறை கடந்த **30.10.2015**ல் அளித்துள்ளது.

## 3.5. கிருஷ்ணகிரி சிறப்பு பொருளாதார மண்டலம் / சிறப்பு முதலீட்டு மண்டல திட்டம்

திருவாளர்கள் ஜி.எம்.ஆர். இன்ஃப்ராஸ்டிரச்சர் நிறுவனம் மற்றும் டிட்கோ இணைந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் **2800** ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.**2,300** கோடி முதலீட்டில் ஒரு பல்பொருள் சிறப்பு பொருளாதார மண்டல திட்டத்தை ஜி.எம்.ஆர் கிருஷ்ணகிரி SEZ லிமிடெட் என்ற கூட்டுத்துறை நிறுவனம் மூலம் செயல்படுத்த திட்டமிட்டன. மத்திய அரசு, சிறப்பு பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு தேவையான குறைந்தபட்ச நிலப்பரப்பில் திருத்தம் மற்றும் கொள்கை ரீதியாக மாற்றங்கள் செய்ததினால், தற்போது GMR நிறுவனம் **2,101** ஏக்கர் நிலப்பரப்பில், சில குறிப்பிட்ட துறைகளுக்கான சிறப்பு

பொருளாதார மண்டலத்தை உள்ளடக்கிய ஒரு சிறப்பு முதலீட்டு மண்டலத்தை (Special Investment Region) பல கட்டங்களாக செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக, **633** ஏக்கர் நிலப்பரப்பில் நுண்ணிய தொழில் நுட்பம், மோட்டார் வாகன தொழில் நுட்பம் மற்றும் மின்னணுவியல் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களுக்கான சிறப்பு முதலீட்டு மண்டலத்தை செயல்படுத்த இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.

**3.6. கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பெட்ரோலியம், இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்களின் முதலீட்டுப் பகுதிக்கான திட்டம் (PCPIR)**

பெட்ரோலியம் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் பொருட்களின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிக்கான உற்பத்தி பிரிவுகளுக்கு தேவையான கட்டமைப்புகளை கொண்ட ஒரு முதலீட்டு பகுதியை **257** சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உருவாக்க டிட்கோ நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் பொருளாதார விவகாரத்திற்கான அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பில் **40** சதவீதம் **(10,400** ஹெக்டேர்) செயலாக்க பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான பிரத்தியேக கட்டமைப்பு திட்டங்களான சாலை மற்றும் இரயில்தடம் மேம்படுத்துவதற்கும், கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் மற்றும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம் ஆகியவற்றிற்கும் ரூ.**13,354** கோடி முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூ.**2,643** கோடி மத்திய அரசின் பங்களிப்பாகவும், ரூ.**866** கோடி மாநில அரசின் பங்களிப்பாகவும், ரூ.**9,845** கோடி தனியார் முதலீடாகவும் பெறப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோ மற்றும் நாகார்ஜுனா பெர்ட்டிலைசர்ஸ் & கெமிக்கல்ஸ் நிறுவனங்களின் கூட்டுத்துறை நிறுவனமான நாகார்ஜுனா ஆயில் கார்ப்ரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் **12** மில்லியன் டன் திறன் கொண்ட பெட்ரோலியம் சுத்திகரிப்பு திட்டம், இத்திட்டத்தினுடைய முக்கிய அலகுகளில் ஒன்றாகும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கடந்த **20.02.2014**ல் மத்திய அரசின் கெமிக்கல்ஸ் மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் துறை மற்றும் தமிழக அரசு இணைந்து ஒப்பந்தம் செய்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தவும் மற்றும் நிர்வகிக்கவும் ஒரு நிர்வாக குழுமம் விரைவில் அமைக்கப்படவுள்ளது. தமிழ்நாடு பெட்ரோலியம், இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய

இரசாயனப் பொருட்களின் முதலீட்டுப் பகுதி திட்டத்திற்கான இந்த பகுதியை, நகர் மற்றும் ஊர் அமைப்பு சட்டம் 1971ன் கீழ் ஒரு உள்ளூர் திட்டப் பகுதியாக தமிழக அரசு ஜனவரி 2016 அன்று அறிவித்துள்ளது.

## 3.7. வானூர்திகள் உற்பத்தி சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், காஞ்சிபுரம் மாவட்டம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டத்தில் அமைக்கப்படவுள்ள வானூர்தி பூங்காவில் வானூர்தி உதிரிப் பாகங்கள் தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு தொழில் நிறுவனங்களுக்கான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம் ஒன்றினை அமைக்க உள்ளது. இம்மையம் வானூர்தி உதிரிபாகங்கள் தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு தொழில் சார்ந்த நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்பு மையம், வானூர்தி மின்னணுவியல் உதிரிபாகங்கள் தயாரிப்பு மையம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இம்மையம் சுமார் 50 வானூர்தி உதிரிபாகங்கள் தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு தொழில் சார்ந்த நிறுவனங்கள் இடம்பெறும் வகையில் அமையும். டிட்கோவினால் அமைக்கப்பட உள்ள சென்னை ஏரோஸ்பேஸ்

பார்க் லிமிடெட் (Chennai Aerospace Park Ltd) என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

டிட்கோ இத்திட்டத்திற்கான முதல்நிலை சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்துள்ளது. மத்திய அரசின் ASIDE மானியமாக ரூ.50 கோடி பெறுவதற்கு கருத்துருவை அரசிடம் சமர்பித்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை ஆலோசகர் நிறுவனம் மூலம் தயாரிக்கும் பணியை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இவ்விரிவான திட்ட அறிக்கை நவம்பர் 2016க்குள் தயாரித்து முடிக்கப்படும்.

## 3.8. கனரக பொறியியல் உதிரிபாகங்கள் மையம், திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தின் பொன்னேரி வட்டத்தில் 700 ஏக்கர் பரப்பளவில் கனரக பொறியியல் உற்பத்தி மையம் ஒன்றினை அமைக்க டிட்கோ திட்டமிட்டுள்ளது. இந்த உற்பத்தி மையம் கப்பல் கட்டுமானத்திற்கு தேவையான பாகங்கள், மின்பொருட்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகன தொழில்களுக்கு தேவைப்படும் பாகங்களை தயாரிக்கும் தொழில் பிரிவுகளுக்கான ஒரு சிறப்பு முதலீட்டு மையமாக உருவாக்கப்படும். இத்தொழில் மையத்திற்காக

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகம் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களுடன் நேரடியாக இணைக்கும் சாலை வசதிகளை கொண்டுள்ளது. இந்த கனரக பொறியியல் உற்பத்தி மையத்தினை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தும் செலவு உட்பட ரூ.700 கோடி முதலீடு தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இம்மையம் 10 வருட கால கட்டத்தில் ரூ.3,000 கோடியளவில் முதலீட்டை ஈர்க்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு இம்மையத்தை அமைப்பதற்காக பொன்னேரி வட்டத்தில் உள்ள காட்டூர் மற்றும் இப்ரஹாம்புரம் கிராமங்களில் உள்ள 700 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்துவதற்கான நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கான ஒரு விரிவான அறிக்கையை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

### 3.9. இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் ஒன்றினை உருவாக்க டிட்கோ நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி

மண்டலம், மத்திய அரசின் தேசிய உற்பத்தி கொள்கையின் வழிகாட்டுதல்களின்படி அமைக்கப்படவுள்ளது.

இம்மண்டலத்தை உருவாக்குவதற்கு இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள தேவிப்பட்டினம், சித்தர் கோட்டை, புல்லங்குடி மற்றும் அத்தியூத்து கிராமங்களில் 5,468 ஹெக்டேர் நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழக அரசு, மேற்குறிப்பிட்ட தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைப்பதற்கான முதல் நிலை ஒப்புதலை மத்திய அரசிடமிருந்து கடந்த பிப்ரவரி 2015ல் பெற்றுள்ளது.

இம்மண்டலத்தில் சாலைகள் மற்றும் இரயில் போக்குவரத்து வசதிகளின் மேம்பாடு, கடல் நீரை நன்னீராக்கும் திட்டம் மற்றும் ஏனைய கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.7,090 கோடி முதலீடு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூ.6,940 கோடி மத்திய அரசின் நிதி ஆதாரங்களும், ரூ.150 கோடி தமிழக அரசின் நிதி ஆதாரங்களும் தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலத்தில் ஜவுளித்துறை, கடல்சார் உணவு பதப்படுத்தும் துறை, வேளாண் பொருள் பதப்படுத்தும் துறை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

துறைகளில் முதலீடுகள் ஈர்க்கப்படும். சுமார் 10 வருட கால கட்டத்தில் இம்மண்டலத்தின் மூலமாக ரூ.15,150 கோடி முதலீடு ஈர்க்கப்படும் எனவும், அதனால் சுமார் 1,30,000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்மண்டலத்தை உருவாக்குவதற்காக ஒரு திட்ட அறிக்கையை டிட்கோ நிறுவனம் தயாரித்துள்ளது. இம்மண்டலத்தை உருவாக்குவதற்கான இறுதி ஒப்புதலை பெறுவதற்கு மத்திய அரசின் தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையிடம் இவ்வறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

### 3.10. சென்னை–பெங்களூரு தொழில் பெருவழிச் சாலை (CBIC) – பொன்னேரி தொழில் முனைய மேம்பாட்டுத் திட்டம்

மார்ச் 2012ல் வெளியிடப்பட்ட “தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023”–ல் சென்னை–ராணிப்பேட்டை மற்றும் ராணிப்பேட்டை–ஓசூர் தொழில் பெருவழிச் சாலை திட்டங்கள் நட்சத்திர திட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு தொழில் வளாக வழித் திட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சென்னை–பெங்களூரு தொழில் பெருவழிச் சாலை திட்டமென தற்போது செயல்படுத்தப்பட இருக்கிறது.

சென்னை–பெங்களூரு தொழில் பெருவழிச் சாலை திட்டத்திற்கான விரிவான அறிக்கையை தயாரிக்க ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமை (JICA) என்ற நிறுவனத்தை மத்திய அரசின் தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டுத்துறை நியமித்தது. JICA நிறுவனம் சென்னை–பெங்களூரு தொழில் பெருவழிச் சாலை திட்டப் பகுதியில் பொன்னேரி தொழில் முனையம் உட்பட மூன்று தொழில் முனையங்களை தேர்ந்தெடுத்து அம்முனையங்களை மேம்படுத்துவதற்காக திட்ட அறிக்கைகளையும் தயாரித்துள்ளது. பொன்னேரி தொழில் முனைய மேம்பாட்டு திட்டத்திற்கான இறுதி அறிக்கையை JICA நிறுவனத்திடமிருந்து கடந்த 24.06.2015 அன்று பெறப்பட்டது.

பொன்னேரி தொழில் முனையம் 21,966 ஏக்கர் பரப்பளவு கொண்ட 10 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். JICA தயாரித்துள்ள பொன்னேரி தொழில் முனைய மேம்பாட்டு திட்ட அறிக்கையின்படி, இம்முனையத்தின் மேம்பாட்டிற்கான திட்டம் மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்படும். முதல் (2016–2019) மற்றும் இரண்டாவது (2020–2024) கட்டங்கள் சுமார் 4,500 ஏக்கர் பரப்பளவிலும் மற்றும் மூன்றாம் கட்ட மேம்பாடு (2025ல் இருந்து) மீதமுள்ள பரப்பளவிலும் செயல்படுத்தப்படும். பொன்னேரி தொழில் முனையத்தின் முதல் கட்ட மேம்பாட்டு

திட்ட செலவு ரூ.13,314 கோடி எனவும் மூன்று கட்டங்களின் மொத்த மேம்பாட்டு செலவு ரூ.32,713 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

பொன்னேரி தொழில் முனைய திட்டத்தை செயல்படுத்துவதற்காக மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையின் (DIPP) பரிந்துரையின்படி, ஒரு நிறுவன கட்டமைப்பு (Institutional Framework) இறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு, கடந்த செப்டம்பர் 2015–ல் சமர்பித்த விண்ணப்பத்தின் பேரில், மத்திய அரசின் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையின் உயர்மட்டக் குழு 10.12.2015ல் பொன்னேரி தொழில் முனைய திட்ட பகுதியை ஒரு தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலமாக உருவாக்க கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

## 3.11. கதிர்வீச்சு மூலம் ஒருங்கிணைந்த உணவுப் பதப்படுத்தும் மையம், காஞ்சிபுரம் மாவட்டம்

கதிர்வீச்சின் மூலம் ஒருங்கிணைந்த உணவுப் பதப்படுத்தும் மையம் (வசதி) ஒன்றினை சென்னைக்கு அருகில் ரூ.15 கோடி முதலீட்டில் ஐஸோராட் டெக் பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்துடன் இணைந்து ஒரு கூட்டுத் துறை நிறுவனமாக உருவாக்கி செயல்படுத்த டிட்கோ

உத்தேசித்துள்ளது. இந்த உணவு பதப்படுத்தும் மையம் காமா கதிர்வீச்சு மூலம் பதப்படுத்துதல், குளிரூட்டுதல் மூலம் பதப்படுத்துதல், வெப்ப ஆவிமுறை மூலம் பதப்படுத்துதல் மற்றும் நவீன ஆய்வகம், சேமிப்புக் கிடங்குகள் போன்ற வசதிகளைக் கொண்டிருக்கும்.

ஐஸோராட் டெக் பிரைவேட் லிமிடெட் சென்னை, ஒரு திட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. போர்டு ஆப் ரேடியேஷன் அண்டு ஐஸோடோப் டெக்னாலாஜி, மும்பை மற்றும் ஐஸோராட் டெக் பிரைவேட் லிமிடெட் (Board of Radiation & Isotope technology, Mumbai and M/s. Isorad Tech Private Limited) இடையே கதிர்வீச்சின் மூலம் பதப்படுத்தும் ஆலை அமைக்க தொழில்நுட்ப புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது. சிப்காட் நிறுவனம் இத்திட்டத்திற்காக பிள்ளைப்பாக்கம் தொழில் வளாகத்தில் 1.65 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. டிட்கோ மற்றும் ஐஸோராட் டெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.


## 3.12. உயிரி தொழில்நுட்ப தொழில் முதலீட்டு நிதி (Biotech Venture Capital Fund)

தமிழ்நாடு உயிரி தொழில்நுட்ப கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, ரூ.50 கோடி நிதியுடன் "உயிரி தொழில்நுட்ப தொழில் முதலீட்டு நிதி (Bio-tech Venture Capital Fund) ஒன்றினை உருவாக்க டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த நிதிக்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ.10 கோடியும், டைடல் மற்றும் டைசல் நிறுவனங்கள் இணைந்து ரூ.10 கோடியும், மாநில அரசு ரூ.5 கோடியும் அளிக்கும். தனியார் பங்களிப்பு மூலம் ரூ.25 கோடி நிதி பெறப்படும்.

டிட்கோ குழுமம், தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தை (Tamil Nadu Infrastructure Fund Management Corporation Limited) உயிரி தொழில்நுட்ப தொழில் முதலீட்டு நிதியை உருவாக்கவும், திரட்டவும் மற்றும் நிர்வகிக்கவும் நிதி மேலாளராக (Fund Manager) நியமனம் செய்ய அனுமதி அளித்துள்ளது. டிட்கோ மற்றும் தமிழ்நாடு கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்திற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

## 3.13. டிட்கோ நிதிச் செயல்பாடு

டிட்கோ நிறுவனம், **2014–15**ஆம் ஆண்டில் ரூ.**56.99** கோடியை நிகர இலாபமாக ஈட்டி, அரசுக்கு **30** சதவீத ஆதாய பங்கு தொகையான (Dividend) ரூ.**21.60** கோடியை அளித்துள்ளது.


தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்
ஆதாயப் பங்கு வருமானம் மற்றும் இலாபம்
( ரூபாய் கோடியில் )
ஆதாயப் பங்கு வருமானம்
வரிக்குப் பின் இலாபம்
8.92
3.07
11.07
1.79
16.59
32
16.96
25.08
24.83
34.07
38.76
13.42
49.37
75.4
60.35
48.69
65.15
56.99
122.29
115.27
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16

## 4. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்க தமிழக அரசால் 1979ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கரூர் மாவட்டம், புகளூரில் இந் நிறுவனத்தின் காகித ஆலை அமைந்துள்ளது. இந்த ஆலையின் உற்பத்தி, ஆண்டொன்றுக்கு 90,000 டன் உற்பத்தித் திறனுடன், 1985ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆலையின் ஆண்டு உற்பத்தித் திறன் நான்கு கட்டங்களில் 4,00,000 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகிதக்கூழ் உற்பத்தித் திறனும், நாளொன்றுக்கு 275 டன்னிலிருந்து, படிப்படியாக 1,180 டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் ரூ.1,650 கோடி முதலீட்டில் 874 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை ஆலையை 2016ஆம் ஆண்டு நிறுவி உள்ளது. இதனால், இந்நிறுவனத்தின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னிலிருந்து 6 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

இதன் மூலம், இந் நிறுவனம் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தியில் இந்திய அளவில் மூன்றாம் இடத்தை அடைந்துள்ளது.

## 4.1. குறிக்கோள்

**“புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, உலகத்தரம் வாய்ந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த, காகிதங்களைத் தயாரிப்பதில் முதன்மை நிறுவனமாகத் திகழுதல்”.**

இந்நிறுவனம், உலகிலேயே கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக உபயோகப்படுத்துவதில் முதலிடத்தையும், இந்தியாவில் அச்சு மற்றும் எழுது காகித உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. இந்நிறுவனத்தில் தமிழக அரசு **35.32** விழுக்காடு பங்கும், தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனங்கள் **4.06** விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பரநிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் வசமும் உள்ளது.

இந்நிறுவனம், காகிதம் உபயோகிப்பாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, பல்வேறு வகையான உயர்ரக காகிதங்கள் மற்றும் அடுக்கு காகித அட்டைகளை தயாரித்து வருகிறது. இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருட்களை

இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவீதத்தை உலகளவில் 40 நாடுகளுக்கு மேல் ஏற்றுமதி செய்து வருகிறது.

இந்நிறுவனம், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவி உள்ளது.மேலும், சுய தேவைக்காக மொத்தம் 103.62 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் 30 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப் பின் மீதமுள்ள உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிறுவனம் காகிதத் தயாரிப்பில் உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு கழிவு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 900 டன் உற்பத்தித் திறன் கொண்ட, சிமெண்ட் தொழிற்சாலையை காகித ஆலை வளாகத்திற்குள் நிறுவியுள்ளது.

### 4.1.1. 2015–16ஆம் ஆண்டில் உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு

2015–16ஆம் ஆண்டின் மொத்த காகித உற்பத்தி 4,03,430 டன்னாகும். உற்பத்தி பயன்பாட்டளவு 100.86

விழுக்காடாகும். நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து எட்டப்பட்ட மிக உயர்ந்த உற்பத்தி இதுவே ஆகும்.

### 4.1.2. 2015–16ஆம் ஆண்டிற்கான விற்பனை மற்றும் இலாபம்

2015–16ஆம் ஆண்டின் விற்பனை ரூ.2373.16 கோடி ஆகும். மற்றும் வரிக்கு முன் இலாபம் ரூ.317.23 கோடி ஆகும். கடந்த ஆண்டின் வரிக்கு முன் இலாபமான ரூ.230.13 கோடியை விட இது கூடுதலாகும். நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து ஈட்டப்பட்ட அதிகபட்ச இலாபம் இதுவே ஆகும்.

### 4.1.3. ஈவுத்தொகை

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் திறமையாகவும் இலாபகரமாகவும் இயங்கி, தனது பங்குதாரர்களுக்குத் தொடர்ந்து ஈவுத் தொகையை அளித்து வருகிறது. 2014–15ஆம் ஆண்டில், நிறுவனம் 60 விழுக்காடு ஈவுத் தொகையை வழங்கியுள்ளது. இதன்படி, இந்நிறுவனம் தமிழக அரசுக்கு 2014–15ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகையாக ரூ.14.67 கோடியினை வழங்கி உள்ளது. 2015–16ஆம் ஆண்டிற்கான ஈவுத்தொகை விகிதத்தை 75 விழுக்காடாக நிறுவனம் உயர்த்தியுள்ளது. இதன் காரணமாக, தமிழக அரசுக்கு

2015–16ஆம் ஆண்டிற்காக வழங்கப்படவுள்ள ஈவுத் தொகை ரூ.18.33 கோடியாக இருக்கும்.

### 4.1.4. ஏற்றுமதி

அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில், இந்நிறுவனம் இந்திய அளவில் முதன்மையாகத் திகழ்கிறது. 2015–16ஆம் ஆண்டில், இந்நிறுவனம் 72,719 டன் அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதி செய்துள்ளது.

### 4.1.5. வேலை வாய்ப்பு

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2,630 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் ஏறத்தாழ 3,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

## 4.2. 2015–16ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

❖ திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் ரூ.1650 கோடி முதலீட்டில் சுமார் 874 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் டன் திறன் கொண்ட இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை ஆலையை நிறுவி உள்ளது.

- ❖ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறனை, நாளொன்றுக்கு **600** டன்னிலிருந்து **900** டன்னாக ரூபாய் **50** கோடி செலவில் விரிவாக்கம் செய்து உள்ளது.
- ❖ மதிப்புக் கூட்டிய காகிதம் மற்றும் காகித அட்டை தயாரிக்கக் கூடிய சிறு தொழில் புரியும் நிறுவனங்களுக்கான மையம் (Centre for Conversion of Paper and Packaging Board Unit) ஒன்றினை ரூ.**30** கோடி செலவில் கரூர் மாவட்டம், மாயனூரில் அமைத்துள்ளது.
- ❖ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மென்பொருள் தொழில்நுட்பப் பிரிவின் (Information Technology Section) திறனை தற்போதைய தேவைக்கு ஏற்ப ரூ.**6.5** கோடி செலவில் மேம்படுத்தி உள்ளது.

## 4.3. 2016–17ஆம் ஆண்டில் செயலாக்கத்தில் உள்ள திட்டங்கள்

1. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சுற்றுச்சூழலை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, இரசாயன மீட்பு கொதிகலன் சாம்பலின் குளோரைடு உப்பின் அடர்த்தியை குறைக்க ‘‘குளோரைடு நீக்கும் திட்டத்தினையும்’’

(Chloride Removal System), மற்றும் இரசாயன மீட்பு கொதிகலனில் இருந்து வெளியேறும் வெண்புகையினை குளிர்விக்கும் திட்டத்தினையும் (Vapour Condensing System) ரூபாய் 20 கோடி செலவில் நிறுவி வருகிறது. இத்திட்டப் பணிகள் மார்ச் 2017க்குள் நிறைவு பெறும்.

2. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கரும்புச்சக்கையிலிருந்து காகித கூழ் தயாரிக்கும்போது வெளிப்படும் நுண்துகள்களை கொதிகலன்களில் முழுமையாக உபயோகப்படுத்தும் பொருட்டு, நுண்துகள்களின் ஈரத்தன்மையை குறைப்பதற்கான Screw Press ஒன்றையும், மரக்கூழ் தயாரிக்கும் பிரிவிற்கான ஒரு கூடுதல் அழுத்த உருளையையும், கரும்புச்சக்கையை கையாளுவதற்கு தேவையான கனரக இயந்திரங்களையும், ரூபாய் 7.50 கோடி செலவில் நிறுவி வருகிறது. இத்திட்டம் அக்டோபர் 2016ல் நிறைவுபெறும்.

## 4.4. கூட்டாண்மை சமூகப் பொறுப்பு (Corporate Social Responsibility)

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், நிறுவனத்தின் முந்தைய மூன்று ஆண்டுகளின் வரிக்கு

முந்தைய இலாபத்தின் சராசரியை கணக்கிட்டு, அதில் **2** சதவீத இலாபத் தொகையினை ஒவ்வொரு ஆண்டும் கல்வி, சுகாதாரம், கட்டுமானம், பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், குடிநீர் வசதி, கலாச்சாரம் மற்றும் மரபுகள் மேம்பாடு போன்ற சமுதாயப் பணிகளை, தொழிற்சாலையை சுற்றிலும் வசிக்கும் மக்களின் பயனுக்காக செலவிட்டு வருகிறது. இந்நிறுவனம், **2015–16**ஆம் ஆண்டில் ரூ.**3.69** கோடியினை பல்வேறு சமூக நலப் பணிகளுக்காகச் செலவிட்டுள்ளது.

**4.5. விருதுகள்**

1. மும்பையில் உள்ள 'டன் அண்ட் பிராட் ஸ்டிரீட்' என்ற அமெரிக்க நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு "இந்திய பேப்பர் துறையில் சிறந்த நிறுவனம்" என்ற விருதினை **2015–16**ஆம் ஆண்டு உட்பட, **5** ஆண்டுகளாக தொடர்ந்து வழங்கி வருகிறது.

2. இந்திய வர்த்தக கூட்டமைப்பு (Indian Chamber of Commerce), தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சிறந்த நீர் மேலாண்மைக்கான "Water Stewardship Award 2016" என்ற விருதை வழங்கியுள்ளது.



தொழில் துறையின் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **29.01.2016** அன்று துவக்கி வைத்தார்கள்.





தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவன தொழிற்சாலை (அலகு I) – காகிதபுரம், கரூர்




தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் இருபுறமும் மேல் பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் தொழிற்சாலையின் (அலகு II) – வான்வழிக் காட்சி.




தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் சிமெண்ட் தொழிற்சாலை, காகிதபுரம், கரூர்



தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
உற்பத்தி ( அளவு டன்னில் )
450000
300000
150000
0
231161
245471
254903
245008
265044
343306
371637
387714
373259
403430
2006 - 07
2007 - 08
2008 - 09
2009 - 10
2010 - 11
2011 - 12
2012 - 13
2013 - 14
2014 - 15
2015 - 16



தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
விற்பனை மற்றும் இதர வருமானம்
( ரூபாய் கோடியில் )
2400
1600
800
0
880.4
969.7
1100.3
1073.6
1225.0
1539.0
1881.2
2301.9
2152.4
2373.2
2006 - 07
2007 - 08
2008 - 09
2009 - 10
2010 - 11
2011 - 12
2012 - 13
2013 - 14
2014 - 15
2015 - 16



தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
வரிக்கு முன் இலாபம்
( ரூபாய் கோடியில் )
350
280
210
140
70
0
125.03
163.06
157.85
158.06
195.14
125.11
126.11
202.68
230.13
317.23
2006 - 07
2007 - 08
2008 - 09
2009 - 10
2010 - 11
2011 - 12
2012 - 13
2013 - 14
2014 - 15
2015 - 16


தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
வரிக்கு பின் இலாபம்
( ரூபாய் கோடியில்)
300
225
150
75
0
86.1
112.8
107.4
126.1
149.0
108.9
91.5
161.2
166.7
253.9
2006 - 07
2007 - 08
2008 - 09
2009 - 10
2010 - 11
2011 - 12
2012 - 13
2013 - 14
2014 - 15
2015 - 16

## 5. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளத்தை மேம்படுத்த, இந்திய கம்பெனிகளின் சட்டத்தின் கீழ் 1949ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியாவின் முன்னோடி மாநில நிதி நிறுவனமாகும். இக்கழகம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்கும் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க கடன் வழங்குவதில் இக்கழகம் முன் நிற்கிறது. இக்கழகம் அளித்து வரும் மொத்த நிதி உதவியில் 90 விழுக்காடுக்கு மேலாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் மொத்த நிதி உதவியில் 40 விழுக்காடு முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இந்நிறுவனம் 31.3.2016 வரை 1,19,767 நிறுவனங்களுக்கு ரூ.14,549.87 கோடி கடன் உதவி வழங்கியுள்ளது. 31.03.2016ஆம் தேதி நிலவரப்படி, இந்நிறுவனத்தின் கடன் நிலுவைத் தொகை ரூ.1,730.01 கோடியாகும்.

தமிழக அரசு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினாலும் மற்றும் இக்கழக பணியாளர்களின் சீரிய முயற்சியாலும், இக்கழகம் 2003–04ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த 13 வருடங்களாக நிகர இலாபம் ஈட்டி வருகிறது. மேலும் 2015–16ஆம் நிதியாண்டில் ரூ.15 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**5.1. பங்கு மூலதனம்**

31.03.2016 அன்றுள்ளவாறு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பங்கு மூலதனம் ரூ.321 கோடியாகும். அதன் விவரம் பின்வருமாறு :

| பங்குதாரர் (Share holder) | பங்கு மூலதனம் (Share Capital) | |
|---|---|---|
| | (ரூ.கோடியில்) | விழுக்காடு |
| தமிழ்நாடு அரசு | 303.52 | 94.55 |
| இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) | 17.00 | 5.30 |
| புதுச்சேரி மாநில அரசு | 0.15 | 0.05 |
| காப்பீட்டுக் கழகங்கள், வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் | 0.33 | 0.10 |
| மொத்தம் | **321.00** | **100.00** |

## 5.2. திட்டங்கள்

தொழில் முனைவோர்களின் பல்வேறு தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய இக்கழகத்தால் செயல்படுத்தப்படும் சில திட்டங்கள் புதிய தொழிற்சாலை தொடங்க மற்றும் ஏற்கனவே இயங்கும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்ய பொது காலக்கடன், தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS), தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், குறு மற்றும் சிறு தொழில் நிறுவன நிதித் திட்டம், காற்றாலைக் கடன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் / தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்காகித நிறுவனம்இவற்றிற்கான பட்டியல் நிதியுதவித் திட்டம், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட சேவை நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம்.

சிறப்புத் திட்டங்கள் பின்வருமாறு

### 5.2.1. பொது காலக்கடன் (General Term Loan)

இக்கழகம், புதிய உற்பத்தி மற்றும் சேவை துறைகளில், தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும்,

நவீனமயமாக்குவதற்கும், உற்பத்தியை பன்முனைப் படுத்துவதற்கும் நிதியுதவி வழங்குகிறது.

பொது / தனி நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூ.30 கோடி வரையிலும், கூட்டு நிறுவனங்கள் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டு நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூ.20 கோடி வரையிலும் மற்றும் தனி உரிம நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூ.15 கோடி வரையிலும் வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு, மொத்தத் தொழில் மதிப்பீட்டில் 33.33 சதவீதமாகும். கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் திட்டங்களின் அடிப்படையில் 7 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம். 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை கடன் அசல் தொகை திரும்ப செலுத்த விடுமுறை காலம் வழங்கப்படுகின்றது.

### 5.2.2. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme - NEEDS)

படித்த இளைஞர்களை, முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்குவதை குறிக்கோளாகக் கொண்டு, 2012–13ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு

(NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு திட்ட மதிப்பீட்டின் உச்சவரம்பு ரூ.1 கோடிக்கு மிகாத தொழில்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம், அதிகபட்சமாக ரூ.25 இலட்சம், மூலதன மானியமாக மாநில அரசு வழங்கும். மேலும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் வட்டியில் 3 சதவீதம் தள்ளுபடியும் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோரின் பங்களிப்பு சிறப்பு பிரிவினருக்கு 5 சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவீதமாகவும் உள்ளது. இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இத்திட்டத்தின் கீழ், 31.07.2016 வரை, 336 பயனீட்டாளர்களுக்கு ரூ.144.08 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.3. தொழில் முனைவோர் வளர்ச்சி திட்டம் (Entrepreneurs Development Scheme)

இந்நிறுவனம், பொருளாதாரம் மற்றும் சமுதாய அடிப்படையில் பின்தங்கிய, துணைப் பிணையம் அளிக்க இயலாத புதிய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக “தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்” **(Entrepreneurs Development Scheme)** என்ற திட்டத்தினை

அறிமுகப்படுத்தியுள்ளது. திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காட்டினை முனைவோரின் மூலதனமாகக் கொண்டு, ரூ.5 இலட்சம் வரை பிணையமில்லாமல், ஒன்று அல்லது இரண்டு நபர்களின் உத்தரவாதத்துடன், நிறுவனம் நிர்ணயத்துள்ள வரம்புக்குட்பட்டு கடன் வழங்கப்படும்.

### 5.2.4. போக்குவரத்து வாகனக்கடன் (Transport Operators Scheme)

பொது உபயோகத்திற்கான சரக்குப் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வழித்தட உரிமம் உள்ள பயணிகள் சீருந்துகள், பேருந்துகள் ஆகியவை வாங்க கடனுதவி வழங்கப்படும். தொழில் முனைவோரின் பங்களிப்பு 15லிருந்து 30 சதவீதமாகும்.

### 5.2.5. இயந்திர நிதியுதவித் திட்டம் (Equipment Finance Scheme)

நடைமுறையில் திறம்பட செயல்படும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கப்படும். திட்ட மதிப்பீட்டில் 15 விழுக்காட்டினை தொழில் முனைவோர் தங்கள் பங்காக அளிக்க வேண்டும்.

## 5.2.6. மின்னாக்கிகள் வாங்குவதற்கான கடன் திட்டம் (Generator Loan Scheme)

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) இத்திட்டத்தின் கீழ், மின்னாக்கிகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து 07.12.2012 முதல் இத்திட்டத்தின் கீழ் 25 சதவீதமாக இருந்த தொழில் முனைவோரின் பங்களிப்பு, 10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. மின்னாக்கி கடன்களை தொழில் முனைவோர் மேலும் எளிதாக பெறுவதற்கேற்ப, பிணையச் சொத்து விதிகளையும் இந்நிறுவனம் தளர்த்தியுள்ளது.

## 5.2.7. காற்றாலைத் திட்டம் (Wind Power Project)

இத்திட்டத்தில் தொழில் முனைவோர்கள் காற்றாலைகளை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்து அதனைத் தமது தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதோடு அல்லாமல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விற்பனை செய்யவும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ், நிலம், காற்றாலை மற்றும் மின் கருவிகள் வாங்குவதற்கும், காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படும்.

### 5.2.8. நவீன அரிசி ஆலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனத் திட்டம்(Working Capital Term Loan for Manufacturing Units / Rice Mill Units)

இத்திட்டத்தின் கீழ் இயங்கிவரும் நவீன அரிசி ஆலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் நடைமுறை மூலதனத் தேவைகளுக்கான நடைமுறைக் காலக் கடன் பெறலாம். இத்திட்டம், தொழில் நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் அரிசி ஆலைகளிலிருந்தும் சிறந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி வரை கடனுதவி அளிக்க இயலும். பொதுவாக, இந்த நடைமுறை காலக்கடனை 42 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

### 5.2.9. பட்டியல் நிதியுதவித் திட்டம் (Bill Financing Scheme)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் / தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவற்றின் சிறு குறு மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் நிதியுதவியினை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அந்நிறுவனங்களுடன் புரிந்துணர்வு

ஒப்பந்தம் (MoU) செய்துள்ளது. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் ஒப்பந்ததாரர்களும் இத்திட்டத்தின் மூலம் பிணைய சொத்து ஏதுமின்றி எளிதான விதிமுறைகளின் கீழ் இந்த பட்டியல் நிதியுதவி திட்டத்தில் விரைவில் கடன் பெறலாம்.

### 5.3. மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநில அரசு மற்றும் மத்திய அரசு வழங்கும் கீழ்க்காணும் மானியங்களுக்கான ஒருங்கிணைப்பு முகவராக செயல்பட்டு வருகிறது.

### 5.3.1. தமிழக அரசின் மானியம்

#### (i) பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள பின்தங்கிய வட்டாரங்களிலும், சிப்காட் / சிட்கோ தொழிற்பேட்டைகளிலும் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது 25 சதவீதம் அதாவது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும். தொழிற்சாலை விரிவாக்கத்திற்காக வாங்கப்படும் இயந்திரங்கள் மற்றும்

தளவாடங்களின் மதிப்பு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களின் மதிப்பில் **25** சதவீதத்திற்கு கூடுதலாக இருக்கும் பட்சத்திலும் கூடுதலாக வாங்கப்பட்ட இயந்திரங்களால் அந்நிறுவனத்தின் உற்பத்தி **25** சதவீதத்திற்கு குறையாமல் அதிகரிக்கும் பட்சத்தில், அத்தகைய விரிவாக்கங்களுக்கும் இந்த மானியம் வழங்கப்படுகிறது. **2015–16**ஆம் ஆண்டில் இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) ரூ.**17.87** கோடி பட்டுவாடா செய்துள்ளது.

**(ii) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்ட மானியம்**

இத்திட்டத்தின் மூலம் **2015–16**ஆம் ஆண்டில், இக்கழகம் மூலதன மானியமாக (Capital Subsidy) ரூ.**5.89** கோடி, **90** பயனீட்டாளர்களுக்கு பட்டுவாடா செய்துள்ளது.

**(iii) மின்னாக்கி மானியம்**

**125** KVA திறன் கொண்ட மின்னாக்கிகளுக்கு வரை மானியம் என்றிருந்ததை மாற்றி **320** KVA வரை திறன் கொண்ட மின்னாக்கிகளுக்கு, இயந்திர விலையில் **25** சதவீதம் மானியமாக, அதாவது அதிகபட்சமாக நிறுவனம் ஒன்றுக்கு

ரூ.1.5 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2015–16ஆம் ஆண்டில்ரூ.6.14 கோடி மின்னாக்கி மானியம், 455 பயனீட்டாளர்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

### (iv) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி சலுகை வழங்கும் திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் 03.09.2012 லிருந்து கடன் பெறும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 3 சதவீதம் வட்டி சலுகை வழங்கும் அரசு திட்டத்தின் மூலம், 03.09.2012 லிருந்து 31.03.2016 வரை ரூ.2,091.21 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு, 4,743 நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் அரசு, இதுவரை (30.06.2016) ரூ.30.28 கோடி வட்டி மானியமாக வழங்கியுள்ளது.

இந்த 3 சதவீதம் வட்டி சலுகை திட்டம் மேலும் மூன்று வருடங்களுக்கு, அதாவது 2018–19ஆம் நிதியாண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**5.3.2. மத்திய அரசின் மானியம்**

### (i) கடன் சார்ந்த மூலதன மானியம் (Credit Linked Capital Subsidy)

- ஒரு நிறுவனத்திற்கு இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் மீது **15** சதவீதம் மானியம் அதாவது அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வழங்கப்படும்.

**2015–16**ஆம் ஆண்டில் மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையிடம் இருந்து கடன் சார்ந்த மூலதன மானியத் திட்டத்தின் (Credit Linked Capital Subsidy Scheme) கீழ், இக்கழகம், ரூ.**2.03** கோடியினை பெற்று **25** நிறுவனங்களுக்கு பட்டுவாடா செய்துள்ளது.

### (ii) ஜவுளி மேம்பாட்டு நிதி மானியம் (Textile Upgradation Fund Subsidy)

**(அ) வட்டி மானியம் மற்றும் மூலதன மானியம்**

நெசவு பதனிடுதல், ஆயத்த ஆடைகள் மற்றும் நூற்பாலை, தொழில் நுட்பமுடைய நெசவு மற்றும் நாடா இல்லா புதிய நெசவுத்தறி (New shuttleless loom weaving units) போன்ற ஜவுளித் துறை பிரிவுகளுக்கு, குறிப்பிட்ட வகை

இயந்திரங்களுக்கு 2% / 5% / 6% வட்டி மானியம் மற்றும் 10% / 15% மூலதன மானியம் வழங்கப்படும். குறு, சிறு மற்றும் நடுத்தரம் அல்லாத நிறுவனங்களுக்கும் இச்சலுகை மத்திய அரசினால் வரையறைக்கு உட்பட்டு வழங்கப்படும்.

### (ஆ) விளிம்பு தொகைமானியம் (Margin Money Assistance Subsidy)

ஜவுளித் துறையில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், நிறுவும் விசைத்தறி இயந்திரங்களுக்கும் மற்றும் நூற்பாலை, நெசவு பதனிடுதல், ஆயத்த ஆடை, பின்னலாடை, நெசவு, சணல் பிரிவு, ஜமுக்காளம் தயாரிப்பு ஆகிய ஜவுளித் தொழில்களுக்கும் 8% / 15% / 20% விளிம்பு தொகை மானியம் (Margin Money Subsidy) குறிப்பிட்ட வகை இயந்திரங்களுக்கு வழங்கப்படும். இச்சலுகை மத்திய அரசினால் வரையறைக்கு உட்பட்டு வழங்கப்படும்.

**2015–16**ஆம் நிதியாண்டில், **27** நிறுவனங்கள் வட்டி மற்றும் மூலதன மானியம் பொருட்டுஎழுப்பிய **ரூ.78.20** இலட்சத்திற்கான உரிமை கோரிக்கைகள் (Claims) மத்திய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. **31.03.2016** வரை, இத்திட்டத்தின் கீழ் வட்டி மானியமாக **ரூ.12.60** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**13.01.2016** முதல் ஜவுளி மேம்பாட்டு நிதி மானியம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, வட்டி மானியம் நீக்கப்பட்டு, தகுதியுள்ளஇயந்திரங்களுக்கு 10% / 15% மூலதன மானியம் மட்டுமே வழங்கப்பட உள்ளது.

## 5.4. காப்பீடு

கடந்த நான்கு ஆண்டுகளாக, இக்கழகம் காப்பீட்டு முகவராக செயல்படத் தொடங்கியுள்ளது. காப்பீடு வர்த்தகம் மூலம் **2015–16**ஆம் ஆண்டில் ரூ.**18.88** இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

## 5.5. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் – தொழில் முனைவோர் அதிகம் விரும்பும் நிதிக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள், கிராமப்புறங்களில் வசிக்கும் தொழில் முனைவோர்கள் மற்றும் சமூக ஆதரவு குறைந்த தொழில் முனைவோர்கள் ஆகியோர்களின் முதல் தேர்வாக இருப்பதற்கு, இக்கழகத்தின் வெளிப்படையான நடைமுறை / செயல்பாடு, விரைந்து கடன் வழங்குதல், கடன் திருப்பிச் செலுத்துவதற்கு நீண்ட காலத் தவணை மற்றும்

தொழில் முனைவோர் கடன் மற்றும் மானியத்தை ஒரே இடத்திலேயே பெறுவதற்கு ஏதுவாக இயங்குவது போன்றவையே காரணங்களாகும்.

**5.5.1. செயல்பாடுகள்**

இக்கழகத்தின் முக்கிய செயல்பாடுகளான கடன் அனுமதித்தல், வழங்குதல் மற்றும் வசூலித்தல் ஆகிய துறைகளில் மே **2011** முதல் **31.03.2016** வரையிலான காலத்தில் செயல்பாடுகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

| **செயல்பாடுகள்** | **11.05.2011 – 31.03.2016 வரை** |
|---|---|
| கடன் அனுமதித்தது (பட்டியல் நிதியும் சேர்த்து) | **5900.59** |
| கடன் வழங்கியது | **4941.73** |
| கடன் வசூலித்தது | **5458.29** |

### 5.5.2. 2015–16ஆம் நிதியாண்டில் செயல்பாடு

(ரூ. கோடியில்)


| விபரம் | எய்தப்பட்டது 2015–16 | எய்தப்பட்டது 2014–2015 |
|---|---|---|
| கடன் அனுமதி தொகை | 1449.23 | 1478.15 |
| கடன் வழங்கும் தொகை | 1241.23 | 1220.18 |
| கடன் வசூல் தொகை | 1399.32 | 1320.85 |

2015–16ஆம் நிதியாண்டில், இக்கழகம் அளித்த நிதியுதவியில், அதிகமாக பொறியியல், போக்குவரத்து வாகன பாகங்கள், ஜவுளி, பிளாஸ்டிக் மற்றும் உணவு பதனிடும் துறைகளுக்குவழங்கப்பட்டுள்ளது.

### 5.5.3. 2016–17 மற்றும் 2017–18ஆம் ஆண்டுகளுக்கான தொழில் கடன் வழங்குவதற்கான செயல் திட்டங்கள்

(ரூ. கோடியில்)

| வருடம் | கடன் அனுமதி தொகை | வழங்கக்கூடிய தொகை | வசூல் செய்யக் கூடிய தொகை |
|---|---|---|---|
| 2016–17 | 1600 | 1400 | 1400 |
| 2017–18 | 1700 | 1500 | 1500 |


தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
செயல்பாட்டு விவரம்
(ரூபாய் கோடியில்)
அனுமதித்த தொகை
அளிக்கப்பட்ட தொகை
1600
1400
1200
1000
800
600
400
200
0
668.13
570.27
939.25
735.58
800.97
702.94
972.53
790.19
1236.87
1021.64
1478.15
1220.18
1449.23
1241.23
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16

## 6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

இந்தியா, ஆண்டு ஒன்றிற்கு **455** மில்லியன் டன் சிமெண்ட் உற்பத்தி என்ற அளவில் அதிக சிமெண்ட் உற்பத்தி செய்யும் நாடுகளில் சீனாவிற்கு அடுத்தபடியாக உலகில் இரண்டாவது இடத்தில் உள்ளது. தமிழ்நாடு ஆண்டு ஒன்றுக்கு **40.69** மில்லியன் டன் என்ற அளவில் அதிக சிமெண்ட் உற்பத்தி செய்து இந்திய அளவில் மூன்றாம் இடத்தில் உள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள பெரிய சிமெண்ட் ஆலைகள் :**20**
- தமிழ்நாட்டில் உள்ள சிறிய சிமெண்ட் ஆலைகள் :**4**
- மொத்த வருடாந்திர உற்பத்தி திறன் :**40.69** மில்லியன் டன்

**1969**ஆம் ஆண்டு ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நிறுவியதன் மூலம் இந்தியாவின் பொதுத்துறையில் சிமெண்ட் உற்பத்தியைத் துவக்கிய முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

**1976**ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் **11**ஆம் நாள், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு (டிட்கோ) சொந்தமான ஒரு துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தொடங்கப்பட்டது. பின் டிட்கோ தன்வசம் இருந்த பங்குகளை

அரசுக்கு மாற்றிவிட்டதால், **30.12.1994** ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 7 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தித் திறனுடன் தமிழ்நாட்டில் அதிக அளவில் சிமெண்ட் உற்பத்திசெய்யும் நிறுவனங்களில் ஒன்றாக டான்செம் நிறுவனம் விளங்குகிறது.

### 6.1. டான்செம் நிறுவனத்தின் செயல் திட்டங்கள்

### 6.1.1. டான்செம் நிறுவனத்தின் ஆலைகள்

1. அரியலூர் சிமெண்ட் ஆலை, அரியலூர் மாவட்டம்
2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்
3. தமிழ்நாடு கல்நார் ஆலை (தகடு), ஆலங்குளம், விருதுநகர் மாவட்டம்
4. தமிழ்நாடு கற்குழாய் ஆலை, விருத்தாசலம், கடலூர் மாவட்டம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், மேற்கண்ட ஆலைகள் மூலம் சிமெண்ட் மற்றும் சிமெண்ட் சார்ந்த பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

தற்பொழுது இந்நிறுவனத்தின் ஆண்டு விற்று முதல் (Annual Turn Over) ரூ.**625** கோடி ஆக உள்ளது.

இந்நிறுவனம், குத்தகை மற்றும் சொந்த நிலங்களின் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி சிமெண்ட் உற்பத்தி செய்து, அரசுத் துறைகளுக்கு குறிப்பாக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, கல்வித் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சலுகை விலையில் சிமெண்ட் வழங்கி வருகிறது.

இவையல்லாமல், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறைக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து சிமெண்ட் கொள்முதல் செய்து கொடுப்பதிலும், பல்வேறு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் கீழ் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான சிமெண்டினைக் குறிப்பிட்ட காலத்திற்குள் விநியோகம் செய்து முக்கியப் பங்காற்றி வருகிறது. இதுமட்டுமின்றி, மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்களான விருதுநகர் மற்றும் அரியலூரில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை தொடர்ந்து வழங்கி வருகிறது.

ஏழை மற்றும் நடுத்தரவர்க்க மக்களின் இன்னல்களை குறைக்கும் வகையில்“அம்மா சிமெண்ட்” என்னும் பயனுள்ள

திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பொதுமக்களின் பேராதரவைப் பெற்றுள்ளது. கட்டுமானப் பணிகளில் சிமெண்ட் பயன்பாட்டு செலவில் 50 சதவீதம் வரை சேமிக்க முடியும் என்பது இத்திட்டத்தின் பயனாகும்.

### 6.2. அரியலூர் சிமெண்ட் ஆலை

அரியலூர் சிமெண்ட் ஆலை, 1979ஆம் ஆண்டு உலர்பத தொழில் நுட்பத்தில் (Dry Process) ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தி திறனுடன் உருவாக்கப்பட்டது. இந்த ஆலையில் தற்போது 202 நிரந்தரப் பணியாளர்களும் 586 ஒப்பந்த தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.

### 6.3. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) 1969ஆம் ஆண்டு ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித்திறனுடன் ஈரப்பத தொழில் நுட்பத்தில் (Wet process) துவக்கப்பட்டது. டான்செம் நிறுவனம், 1976ஆம் ஆண்டு துவக்கப்பட்ட போது, ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை தன் வசம் எடுத்துக்கொண்டது. ஆலையின் தற்போதைய உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் மட்டுமே. மேலும், தற்போது புழக்கத்தில் இல்லாத

மிக பழமையான ஈரப்பத தொழில் நுட்பம் காரணமாக உற்பத்தி செலவு உலர்பத தொழில்நுட்பத்தை விட 30 முதல் 40 விழுக்காடு வரை அதிகரித்து, ஆலை தொடங்கப்பட்டதில் இருந்து ஒரு சில வருடங்களைத் தவிர ஏனைய ஆண்டுகளில் இவ்வாலை தொடர்ந்து நட்டத்தை ஈட்டி வந்தது. எனினும் மார்ச் 2015 முதல் உற்பத்தி மற்றும் விற்பனையை முழுமையான அளவு அதிகரித்ததின் மூலம் இவ்வாலை இலாபத்தில் இயங்கி வருகிறது.தற்போது இவ்வாலையில் 137 நிரந்தரப் பணியாளர்களும் 260 ஒப்பந்த தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.

### 6.3.1. தமிழ்நாடு கல்நார் தகடுஆலை, ஆலங்குளம்

டான்செம் நிறுவனம், ஆலங்குளத்தில் 1981ஆம் ஆண்டு கல்நார் தகடு ஆலை ஒன்றை அமைத்தது. தற்போது அதனுடைய ஆண்டு உற்பத்தித் திறன் 28,800 டன் ஆகும்.இதனுடைய முக்கிய மூலப்பொருட்கள் கல்நார் இழை மற்றும் சிமெண்ட் ஆகும். தற்போது இவ்வாலையில் 53 பணியாளர்கள் உள்ளனர். இருப்பில் உள்ள சிமெண்ட் கல்நார் தகடுகளை விற்கும் வகையில், கடந்த ஜூன் 2015 முதல் இந்த ஆலை இயக்கப்படவில்லை.

**6.4. தமிழ்நாடு கற்குழாய் ஆலை, விருத்தாசலம்**

அரசின் வழிகாட்டுதலின்படி, **1989**ஆம் ஆண்டு, டான்செம் நிறுவனம் டாசெல் நிறுவனத்திடமிருந்த கற்குழாய் ஆலையை தன்னுடன் இணைத்துக் கொண்டது. ஆலையின் ஆண்டு உற்பத்தித்திறன் 7,200 டன்னாகும். தற்போது இவ்வாலையில் 7 நிரந்தர பணியாளர்கள் மற்றும் சுமார் 70 ஒப்பந்த பணியாளர்கள் உள்ளனர். இன்னும் கூடுதலான இடங்களில் விற்பனை செய்ய ஏதுவாக இந்நிறுவனம் இந்த ஆலையை விரிவாக்கம் செய்ய திட்டமிட்டுள்ளது.

**6.5. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் வணிக செயல்பாடுகள்**

**(அ) அம்மா சிமெண்ட் விற்பனை திட்டம்**

ஏழை மற்றும் நடுத்தரவர்க்க மக்கள் தங்கள் சொந்த வீடு கட்டும் போது ஏற்படும் இன்னல்களை மட்டுப்படுத்தும் பொருட்டு, அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது. இதன் விற்பனை **05.01.2015** அன்று திருச்சி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கத்தில் துவக்கப்பட்டது. அம்மா சிமெண்ட் மூட்டை ஒன்றுக்கு ரூ.**190** என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும். மேலும், இத்திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள **470** கிட்டங்கிகளின் மூலம்

விரிவுபடுத்தப் பட்டுள்ளது. தற்போது, மாதம் ஒன்றுக்கு 2 இலட்சம் டன் வீதம் முறையே 7 தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, பொதுமக்கள் வீடு பழுது பார்க்க மற்றும் புதுப்பிக்க 10 மூட்டைகள் முதல் 100 மூட்டைகள் வரை பெற்றுக்கொள்ளலாம். 1500 சதுர அடிக்கு உட்பட்டு புதிய வீடு கட்டுபவர்கள், அதிகபட்சமாக 750 மூட்டைகள் வரை பெற்றுக்கொள்ள இயலும்.

இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் செயல்படுகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் துணை முகமைகளாக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைகள் முறையே தங்களின் 220 மற்றும் 250 கிட்டங்கிகள் மூலமாக செயல்படுகின்றன. இத்திட்டம் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது.

மேலும், இத்திட்டமானது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் மாவட்ட அளவிலான ஊராட்சித் துறையின் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அம்மா சிமெண்ட் திட்டத்தில் ஜூலை **2016** வரை **15,92,872** டன் **(3,18,57,440** மூட்டைகள்**)** விற்கப்பட்டுள்ளது. இதுவரை **5,00,479** பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

### (ஆ) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை திட்டங்களுக்கு சிமெண்ட் வழங்கும் திட்டம்

தமிழக அரசால் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சி திட்டங்களுக்கு ஆண்டுக்கு சுமார் **12** இலட்சம் டன் சிமெண்ட் தேவைப்படுகிறது. இதில், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழக அரசு நிர்ணயித்த விலையில் ஒவ்வொரு ஆண்டும் தனது ஆலைகளில் உற்பத்தியாகும் சுமார் **4** இலட்சம் டன் சிமெண்ட்டை விநியோகம் செய்து வருகிறது. மீதமுள்ள தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி மூலமாக தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து குறைந்த விலையில் சிமெண்ட் கொள்முதல் செய்து வழங்குகிறது.

**2011–12** முதல் **2015–16** மற்றும் **2016–17** (ஜூலை **2016** வரை) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைத் திட்டங்களுக்கு சிமெண்ட் விநியோகம் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு:

(மெட்ரிக் டன்னில்)

| ஆண்டு | மொத்தம் |
|---|---|
| 2011–12 | 6,22,848 |
| 2012–13 | 16,47,474 |
| 2013–14 | 11,87,821 |
| 2014–15 | 9,38,364 |
| 2015–16 | 9,74,696 |
| 2016–17 (ஜுலை 2016 வரை) | 1,74,019 |

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையால் செயல்படுத்தப்படும் பசுமை வீடு (Green House Scheme) மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு (IAY) திட்டங்களுக்கு, அம்மா சிமெண்ட் பயன்படுத்தப்படுகிறது.

**(இ) அரசுத்துறை / ஒப்பந்ததாரர்களுக்கு சிமெண்ட் விற்பனை**

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ஆண்டுதோறும் அரசு நிர்ணயிக்கும் விலையில் அரசு துறைகளுக்கு சிமெண்ட் விநியோகம் செய்வதோடு, பொதுப்பணித் துறையின் ஒப்பந்ததாரர்களால் முழு பணிபொறுப்பு அடிப்படையில் (Turn Key) செயல்படுத்தும் திட்டங்களுக்கு தொடங்கப்பட்டதிலிருந்து பொதுப்பணித் துறையால் நிர்ணயிக்கப்படும் விலையில் சிமெண்ட் விநியோகம் செய்து வருகிறது.

(மெட்ரிக் டன்னில்)

| ஆண்டு | சிமெண்ட் |
|---|---|
| 2011–12 | 62,128 |
| 2012–13 | 51,910 |
| 2013–14 | 25,601 |
| 2014–15 | 18,947 |
| 2015 –16 | 8,116 |
| 2016–17 (ஜுலை 2016 வரை) | 1,015 |

**(ஈ) திறந்தவெளிச் சந்தையில் சிமெண்ட் விற்பனை**

மாநிலத்திலுள்ள பொதுமக்களுக்கு பயன்படும் வகையில், அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்டினை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், திறந்த வெளிச் சந்தையில் முகவர்கள் மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. இவ்வாறு செய்வது சிமெண்ட் விலையேற்றத்தை கட்டுக்குள் வைக்க உதவுகிறது.

(மெட்ரிக் டன்னில்)

| ஆண்டு | சிமெண்ட் |
|---|---|
| 2011–12 | 22,381 |
| 2012–13 | 1,12,464 |
| 2013–14 | 1,80,499 |
| 2014–15 | 2,47,303 |
| 2015 –16 | 3,50,635 |
| 2016–17 (ஜுலை 2016 வரை) | 1,25,243 |

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், திறந்த வெளிச்சந்தையில் **2014–15**ஆம் ஆண்டு தனது **2.47** இலட்சம் டன்னாக இருந்த சிமெண்ட் விற்பனையை **2015–16**ஆம் ஆண்டு **3.50** இலட்சம் டன்னாக அதிகப்படுத்தியுள்ளது. இது கடந்து ஆண்டைவிட **40** விழுக்காடு அதிகமாகும்.மேலும் திறந்த வெளி சந்தை விற்பனையில் டான்செம் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளது.

## 6.6. மே 2011 முதல் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் சாதனைகள்

### 6.6.1. அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்

வெளிச்சந்தையில் விற்கப்படும் சிமெண்ட் விலையேற்றத்தினால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், சலுகை விலையில் சிமெண்ட் விற்பனை செய்யும் ‘‘அம்மா சிமெண்ட் திட்டம்’’ தமிழக அரசால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிமெண்ட் மூட்டை ஒன்றுக்கு ரூ.**190/–** என்ற சலுகை விலையில் விற்கப்பட்டு வருகிறது. அம்மா சிமெண்ட் திட்டத்தில் ஜுலை **2016** வரை **15,92,872** டன் **(3,18,57,440** மூட்டைகள்) விற்கப்பட்டுள்ளது. இதுவரை **5,00,479** பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

## 6.6.2. ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை இலாபகரமாக இயக்குதல்

1970ஆம் ஆண்டு 4 இலட்சம் டன் ஆண்டு உற்பத்தித் திறனுடன் ஈரப்பத தொழில் நுட்பத்தில் தொடங்கப்பட்ட ஆலங்குளம் சிமெண்ட் ஆலை 1990 முதல் கடந்த 25 ஆண்டுகளாக, தொடர்ந்து நட்டத்தையே ஈட்டி வந்தது. தற்பொழுது அரசு எடுத்த சீரிய முயற்சியினால் மார்ச் 2015 முதல் இவ்வாலை இலாபத்தில் இயங்கி வருகிறது. 2015–16ஆம் ஆண்டில் இந்த ஆலை ரூ.702.63 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## 6.6.3. டான்செம் நிறுவனத்தில் வேலைவாய்ப்புகள்

டான்செம் நிறுவனத்தில் 2011ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை 27 அதிகாரிகள், 21 அலுவலர்கள் மற்றும் 10 பணியாளர்கள் உட்பட 58 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 31.1.2013 அன்று நிலம் வழங்கிய வகையில் 7 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் 8 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

### 6.6.4. பணியாளர்களை ஊக்கப்படுத்துவதற்கான பதவி உயர்வுகள்

பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு டான்செம் சுமார் 100 பணியாளர்களுக்கு 2015–16ஆம் ஆண்டில் பதவி உயர்வு வழங்கியுள்ளது.

### 6.6.5. கணினி மென்பொருள் ERP செயல்படுத்துதல்

- டான்செம் நிறுவனம் 2011ஆம் ஆண்டு ரூ.1.97 கோடி செலவில் ERP மென்பொருளை (Enterprise Resource planning) செயல்படுத்தியது.

- டான்செம் தனது அனைத்து ஆலைகள் மற்றும் விற்பனைக்கூடங்களிலிருந்து சென்னை கூட்டாண்மை அலுவலகத்திற்கு உடனுக்குடன் தகவல்களை பரிமாற கணிணி மூலம் தகவல் பரிமாற்ற முறையை (Online Plant Data IntegrationSystem) ரூ.97 இலட்சம் செலவில் 2013ஆம் ஆண்டு செயல்படுத்தியது.

### 6.6.6. பணியாளர்களின் வருகையை பதிவு செய்யும் கருவி (Biometric Attendance System)நிறுவுதல்

டான்செம் தனது அனைத்து ஆலைகள் மற்றும் கூட்டாண்மை அலுவலகத்தில் பணியாளர்களின் வருகையை பதிவு செய்யும் கருவியை (Biometric) ரூ.4.05 இலட்சம் செலவில் 2013ஆம் ஆண்டு நிறுவியது.

### 6.6.7. வீடியோ கண்காணிப்பு (Video Surveillance System) நிறுவுதல்

2015–16ஆம் ஆண்டில், டான்செம் நிறுவனம், தனது கூட்டாண்மை அலுவலகம் மற்றும் அரியலூார் சிமெண்ட் ஆலையில் வீடியோ கண்காணிப்பு கருவியை ரூ.11.64 இலட்சம் செலவில் நிறுவியுள்ளது.

### 6.6.8. பசுமை மேம்பாடு திட்டத்தின்கீழ் மரம்வளர்ப்புத் திட்டம்

ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு சொந்தமான கோபாலபுரம் சுரங்கத்திலுள்ள 297 ஏக்கரில் மரம் நடும் திட்டத்தின் கீழ், சுமார் 2,96,000 தைல (யூகலிப்டஸ்) மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

### 6.6.9. ஏழாவது ஊதிய குழுமத்தின் 12/3 ஒப்பந்தத்தை செயல்படுத்துதல்

டான்செம் நிறுவனம், 2015–16ஆம் ஆண்டில் தனது பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழுமத்தின் பரிந்துரைகளை அமுல்படுத்தியது. இதனால் டான்செம் பணியாளர்கள் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ.1.36 கோடி அளவில் பயன் பெறுகின்றனர்.

## 6.6.10. திறனாய்வு (Energy Audit)

அரியலூர் சிமெண்ட் ஆலையின் உற்பத்திமுறையில் உள்ள குறைகளைக் கண்டுப்பிடித்துக் களைவதற்கு ஏதுவாக டான்செம் ரூ.25 இலட்சம் செலவில் செப்டம்பர் 2015 மாதத்தில் திருவாளர் FLsmidth என்ற நிறுவனத்தைக் கொண்டு திறனாய்வு நடத்தியது. இத்திறனாய்வு பரிந்துரைகளை தற்பொழுது டான்செம் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

## 6.6.11. அரியலூர் சிமெண்ட் ஆலை விரிவாக்கம் திட்டம்

டான்செம் நிறுவனம், ஒரு வருட காலத்திற்குள் அரியலூர் சிமெண்ட் ஆலை விரிவாக்கத்திற்கான ஒப்பந்தப் புள்ளி நடவடிக்கைகளை இறுதி செய்து சாதனை படைத்துள்ளது.

- டான்செம் தனது அரியலூர் ஆலை விரிவாக்கத்திற்கான மத்திய சுற்றுச்சுழல் மற்றும் வனத்துறை (MoEF) அமைச்சகம் வழங்கும் சுற்றுச்சூழல் தடை நீக்க சான்றிதழை (Environmental Clearance) 31.05.2016 அன்று இரண்டே அமர்வுகளைக் கொண்டு மிக விரைவாக பெற்றது.

**6.6.12. மருத்துவமனை, பள்ளிக்கூடம் ஆகிவற்றை புதுப்பித்தல் மற்றும் கழிவறை கட்டுதல்**

டான்செம் நிறுவனம் கடந்த 2014 முதல் 2016 வரை ரூ.98.79 இலட்சம் செலவில் கீழ்கண்ட புதுப்பித்தல் மற்றும் கூடுதல் கட்டிட பணிகளை மேற்கொண்டது.

- கூடுதலாக 12 வகுப்பறைகளும் 14 கழிப்பறைகளும் பள்ளிகளில் கட்டிக் கொடுக்கப்பட்டது.
- ஆலையின் மருத்துவமனை ரூ.10 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது.

**6.6.13. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் பள்ளிகளின் செயல்பாடுகள்**

டான்செம் நிறுவனம் அரியலூர் மற்றும் ஆலங்குளத்தில் நடத்திவரும் பள்ளிக்கூடங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு கீழ்கண்ட சாதனைகளை எட்டி உள்ளன:

- ஆலங்குளத்திலுள்ள டான்செம் மெட்ரிகுலேஷன் பள்ளி கடந்த 5 வருடங்களாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 விழுக்காடு பெற்று சாதனை படைத்து வருகிறது.
- அரியலூரில் உள்ள டான்செமின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி கடந்த 5 வருடங்களாக 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில்

100 விழுக்காடு பெற்று சாதனை படைத்து வருகிறது.

- அரியலூாரில் உள்ள இந்நிறுவனத்தின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி கடந்த 5 வருடங்களாக 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் தரவரிசையில் 1 முதல் 4 இடங்களை பெற்று சாதனை படைத்து வருகிறது.

### 6.6.14. வெளிச்சந்தை விற்பனையை மேம்படுத்துதல்

டான்செம் நிறுவனம் 2011–12ஆம் ஆண்டில் திறந்த வெளிச் சந்தையில் 22,381 டன்னாக இருந்த தனது பங்கை 2015–16ஆம் ஆண்டு 3,50,365 டன்னாக உயர்த்தியுள்ளது. இந்த உயர்வு, வெளிச்சந்தையில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தின் மதிப்பு உயரக் காரணமாக அமைந்துள்ளது.

### 6.6.15. ஆலங்குளம் ஆலையின் சுண்ணாம்புக்கல் இருப்பை மறு மதிப்பீடு செய்தல்

டான்செம் நிறுவனம், ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனமயமாக்குவதற்கு முக்கிய காரணியான, ஆலங்குளம் சுரங்கங்களில் உள்ள சுண்ணாம்புகல் இருப்பை மறு மதிப்பீடு செய்துள்ளது.

## 6.7 2016–17 மற்றும் 2017–18 ஆண்டுகளுக்கான செயல் திட்டங்கள்

### 6.7.1. உற்பத்தித்திட்டம்

டான்செம் நிறுவனம் **2016–17**ஆம் ஆண்டிற்கான உற்பத்தித் திட்டம் பின்வருமாறு:

| விபரங்கள் | 2016–17 | | |
|---|---|---|---|
| | உற்பத்தி மெ.டன் | விற்பனை மெ.டன் | நிகர இலபாம் / நட்டம் ரூ. இலட்சத்தில் |
| அரியலூார் சிமெண்ட் ஆலை | **5,20,000** | **5,20,000** | **3,003.79** |
| ஆலங்குளம் சிமெண்ட் ஆலை | **2,00,000** | **2,00,000** | **707.68** |
| கல்நார் தகடு ஆலை | **–** | **–** | **– 264.43** |
| கற்குழாய் ஆலை | **5,400** | **5,400** | **25.92** |

### 6.8. மேம்பாட்டிற்கான செயல்பாடுகள்

### 6.8.1. அரியலூார் சிமெண்ட் ஆலை

**(அ) மின்கட்டண செலவைக் குறைக்க இரண்டு பெல்ட் பக்கெட் எலிவேட்டர் நிறுவுதல்**

**2016–17**ல், தற்பொழுதுள்ள சுண்ணாம்புத் தூளை காற்றழுத்த பம்ப் மூலம் கொண்டு செல்லும் முறைக்குப் பதிலாக

ரூ.**2.44** கோடி செலவில் இரண்டு பெல்ட் பக்கெட் எலிவேட்டர்களை நிறுவ டான்செம் நிறுவனம், உத்தேசித்துள்ளது. இதன் மூலம் கணிசமான மின்சக்தி சேமிக்கப்படும்.

**(ஆ) வெளியேற்றப்படும் துகள்களின் அளவைக் குறைக்க நிலக்கரி அரவைஇயந்திரத்தின் புகை சுத்திகரிப்பானை (ESP) மேம்படுத்துதல்**

டான்செம் நிறுவனம், **2016–17**ல், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தற்போதைய அளவுகோலுக்கேற்ப வெளியேற்றப்படும் துகள்களின் நிலையை கட்டுப்படுத்த நிலக்கரி அரவை இயந்திரத்தின் புகை சுத்திகரிப்பானை (ESP) ரூ.**2** கோடி செலவில் மாற்றியமைத்தல் அல்லது புதிய Bag House நிறுவுதல் மூலம் மேம்படுத்த உத்தேசித்துள்ளது.

**(இ) உற்பத்தித்திறனைப் பெருக்க பைரோ சிஸ்டத்தை மேம்படுத்துதல்**

டான்செம் நிறுவனத்தால் ரூ.**306** இலட்சம் செலவில் தற்பொழுதுள்ள Pyro System கீழ்கண்டவாறு மேம்படுத்தப்படும்.

- தற்பொழுதுள்ள நுழைவாயில் / கடைவாயில் seal-களை நவீன seal-கள் மூலம் மாற்றி அமைத்தல்.

- தேய்மானம் அடைந்த கிலன் உருளிப்பட்டை மற்றும் உருளையை (Kiln tyre with shell) மாற்றுதல்.
- தேய்மானம் அடைந்த தாங்கு உருளைகளை (Support Roller) மாற்றுதல்.
- சுழலும் சூளை (Kiln)–I&II ல் உள்ள Primary Air Fanக்கு பதிலாக, காற்றூதி (Blower) நிறுவுதல்.

**(ஈ) சிமெண்ட் அரவை இயந்திரத்தை பலப்படுத்துதல்**

சிமெண்ட் அரவை இயந்திரத்தில் தற்பொழுது சேதமடைந்துள்ள Plain Mill Head (PMH)-க்கு பதிலாக புதிய Plain Mill Head மாற்றி பலப்படுத்தப்படும்.

**(உ) அரியலூர் சிமெண்ட் ஆலையை 0.5 மில்லியன் டன்னிலிருந்து 1.5 மில்லியன் டன்னாக விரிவாக்கம் செய்தல்**

அரியலூர் சிமெண்ட் ஆலை விரிவாக்கப் பணிகளுக்கான அரசாணை **14.08.2014** அன்று வழங்கப்பட்டது. திருத்திய திட்ட மதிப்பீடு **ரூ.750** கோடியாகும். இதன் தொடர்ச்சியாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முக்கிய இயந்திரங்களுக்கான பணி ஆணை **22.04.2016** அன்று M/s. Larsen & Toubro Ltd. Construction division, Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் **110** KV துணை மின் நிலையம்

அமைப்பதற்கான பணி ஆணை **24.05.2016** அன்று M/s. Larsen & Toubro Limited Electrical and Automation C & A Division நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மே 2018ல் புதிய ஆலை இயக்கி வைக்கப்படும்.

**(ஊ) புதிய பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை பணியமர்த்தும் கொள்கை**

ஏற்கனவே, விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கும் பணி தொடங்கப்பட்ட நிலையில், அதன் தேவைக்கு ஏற்ப தொழில் நுட்பம், செயல் பிரிவு (Process), பண்டக சாலை (Materials/ Stores), உற்பத்தி மற்றும் பராமரிப்பு மற்றும் சுரங்கம் ஆகிய பிரிவுகளில் உள்ள பணியாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும்பொருட்டு, குழு அமைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேவைப்படுகின்ற பணியாளர்கள் மற்றும் அலுவலர்களை பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரியலூர் சிமெண்ட் ஆலைவிரிவாக்கத்திற்காக தொடக்கத்தில் **20** நபர்களும் இதனைத் தொடர்ந்து மே **2018**க்குள் **192** நபர்களும் பணியமர்த்தப்படுவர்.

**6.9. ஆலங்குளம் சிமெண்ட் ஆலை**

**(அ) மின் கட்டணத்தை சேமிக்க இயந்திரத்தின் மூலம் சிமெண்ட் கொண்டு செல்லும் அமைப்பு (Mechanical Conveying Sytem) நிறுவுதல்**

தற்பொழுள்ள காற்றழுத்த பம்ப் மூலம் சிமெண்ட் அரவை இயந்திரத்திலிருந்து சைலோவிற்கு சிமெண்ட் கொண்டு செல்லும் முறைக்குப் பதிலாக ரூ.1.48 கோடி செலவில் இயந்திரத்தின் மூலம் சிமெண்ட் கொண்டு செல்லும் அமைப்பு (Mechanical Conveying Sytem) ஒன்றை நிறுவ டான்செம் நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதன் மூலம் ஒரு மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்வதில் 5 யூனிட் மின்சக்தி சேமிக்கப்படும்.

**(ஆ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நவீனமயமாக்கல்**

2011–12ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், ரூ.165 கோடி செலவில் ஆலங்குளம் ஆலை நவீனப்படுத்தப்படும் என அரசு அறிவித்தது. திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு 2009ஆம் ஆண்டு கணக்கிடப்பட்டது. மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையில், 2012ஆம் ஆண்டில் தொடக்க சுரங்க மேம்பாட்டிற்கான செலவு ரூ.50 கோடி உட்பட, திட்ட மதிப்பீடு ரூ.195 கோடியாக உயர்ந்தது. இதன் தொடர்ச்சியாக, டான்செமின் இயக்குநர் குழும வழிகாட்டுதலின்படி, சுரங்கத்தில்

உள்ள சுண்ணாம்புக்கல் இருப்பின் அளவீடுகளை மறு ஆய்வு செய்யும் பணிகள் முடிக்கப்பட்டு, இதன் அறிக்கை **09.06.2016** அன்று நடைபெற்ற இயக்குநர் குழும கூட்டத்தில் சமர்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின்படி, நவீனமயமாக்குப்பின் ஆலையை **30** வருடங்களுக்கு மேல் இயக்க தேவையான சுண்ணாம்புக்கல் இருப்பு உள்ளது எனவும், சுரங்க மேம்பாட்டிற்கான செலவு ரூ.**57.79** கோடி ஆகும் எனவும் டான்செம் கண்டறிந்துள்ளது.

மேற்கூறிய குறிப்புகள், ஆலையை நவீனப்படுத்துவதற்கு சாதகமானதாக உள்ளதால், இயக்குநர் குழும அறிவுறித்தலின்படி, ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்துவதில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித (TNPL) நிறுவனத்தின் பங்களிப்பை டான்செம் கோரியுள்ளது. TNPL–ன் பதிலுக்கு ஏற்றவாறு அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 6.10. விற்பனை செயல்பாட்டு கொள்கை

தமிழ்நாட்டின் மொத்த சிமெண்ட் தேவைசுமார் **209** இலட்சம் டன்னாகும். இதில் தமிழ்நாடு தனியார் உற்பத்தியாளர்களின் மூலம் **145.60 (69.65%)** இலட்சம் டன்னும்,

அண்டை மாநில உற்பத்தியாளர்களின் மூலம் **55.80 (26.53%)** இலட்சம் டன்னும், டான்செம் நிறுவனத்தின் மூலம் **6.00 (3.02%)** இலட்சம் டன்னும், மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மூலம் **1.60 (0.80%)** இலட்சம் டன்னும் சிமெண்ட் விநியோகம் செய்யப்பட்டு தமிழ்நாட்டின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

டான்செம் நிறுவனம் **2016–17**ஆம் ஆண்டில், முகவர்களின் மூலமாக விற்பனையை அதிகரிப்பதின் மூலம் வெளிச்சந்தை விற்பனையை அதிகரிக்கவும், வடமாவட்டங்களான சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ஆகிய மாவட்ட மக்களின் சிமெண்ட் தேவைகளை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளது. மேலும் விரைவில் இம்மாவட்டங்களின் சிமெண்ட் இருப்பு வைக்கும் இடங்களை (Stock Points) திறக்க திட்டமிட்டுள்ளது. இவ்வாறு செய்வது சிறிய பயனீட்டாளர்களுக்கும் சிமெண்ட் கிடைக்க வழிவகுக்கும்.



தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை, விருதுநகர் மாவட்டம்


தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்
விற்றுமுதல் மற்றும் நிகர இலாபம்
(ரூபாய் கோடியில்)
விற்றுமுதல்
நிகர இலாபம்
700
600
500
400
300
200
100
0
-100
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
187.26
197.16
177.28
249.23
230.33
188.99
209.87
207.75
283.94
626.67
6.33
15.39
2.58
27.78
8.21
-4.76
-6.97
-9.66
2.94
26.37

## 7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி, அம்மக்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் நோக்கில் 1974ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அரசுக்கு சொந்தமான 5520 ஏக்கர் நிலம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டு வணிக உற்பத்தியினை தொடங்கிய இந்நிறுவனம் படிப்படியாக தனது உற்பத்தியினை விரிவாக்கம் செய்து வருகிறது. முதலில் தொழிலக தர உப்பு உற்பத்தியை தொடங்கி, பின்னர் பலவகை செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்து வருகின்றது. 1990–91 முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் இந்நிறுவனம் இதுவரை ரூ.3.25 கோடி ஈவுத் தொகையினையும் ரூ.15.45 கோடி உரிமைத் தொகையினையும் அரசுக்கு வழங்கியுள்ளது. தற்போது இந்நிறுவனத்தின் விற்றுமுதல் 32 கோடி வரை உயர்ந்துள்ளது. இத்திட்டம் 15 கிராமங்களை சேர்ந்த 1350 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் 300 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கி வருகின்றது.

### 7.1. நிறுவனத்தின் குறிக்கோள்

பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்ட பகுதியினை மேம்படுத்திட உத்வேகம் அளித்தல், சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி வழங்குதல், அப்பகுதியின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்துதல், அப்பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதற்கு ஏதுவான சூழல் நிலவுவதால், இயற்கையாக கிடைக்கின்ற கடல் நீரை பயன்படுத்தி, உப்பு, உப்பின் உடன் விளை பொருட்கள் மற்றும் உப்பு சார்ந்த பொருட்களை மிக அதிக அளவில் உற்பத்தி செய்தல், பள்ளி செல்லும் மாணவர்கள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் இடையே பரவலாக காணப்படுகின்ற நுண்ணூட்டச் சத்து, அதாவது இரும்பு சத்து மற்றும் அயோடின் சத்து குறைபாட்டினை கட்டுப்படுத்தி, அவைகளை களையும் பொருட்டு, மேற்கூறிய நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கிய இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை வழங்குதல்.

### 7.2. நிறுவனத்தின் செயல்பாடுகள்

#### 7.2.1. அம்மா உப்பு விற்பனை அறிமுகம்

ஊட்டச் சத்துக்கள் அடங்கிய **அம்மா உப்பு,** மூன்று வகைகளில் அதாவது இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, குறைந்த

அளவு சோடியம் கொண்ட உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு ஆகியவற்றின் வெளிச்சந்தை விற்பனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11.06.2014 அன்று துவக்கி வைத்தார்கள். பொதுமக்களுக்கு மலிவு விலையில் இவ்வகை உப்புக்கள் அதாவது, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு கிலோ ஒன்றுக்கு ரூ.14, குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு கிலோ ஒன்றுக்கு ரூ.21 மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு கிலோ ஒன்று ரூ.10–க்கு கிடைத்திடும் பொருட்டு, இத்திட்டம் துவங்கப்பட்டது. இது வெளிச் சந்தை விலையை விட ரூ.6 லிருந்து ரூ.8 வரை குறைவாகும்.

மேற்கூறிய அம்மா உப்பு வகைகளுக்கு பொது மக்களிடையே காணப்பட்ட வரவேற்பினை தொடர்ந்து, இந்நிறுவனம் நவம்பர் மாதம் 2014–லிருந்து அம்மா உப்பின் மற்றொரு வகையான அயோடின் கலந்த கல் உப்பினை மலிவு விலையில் கிலோ ஒன்று ரூ.8க்கு அறிமுகம் செய்தது. பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு, மேற்கூறிய நான்கு வகையான அம்மா உப்புக்கள் பிப்ரவரி 2015லிருந்து அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 31.07.2016 வரை 27,068 டன் அம்மா உப்பு வெளிச்சந்தை மற்றும்

பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், உத்திரபிரதேசம் மற்றும் கேரளா மாநிலங்களில் அம்மா உப்பு விற்பனையை அறிமுகம் செய்துள்ளது. அதுமட்டுமல்லாமல், அம்மா உப்பு விற்பனையினை மற்ற அனைத்து மாநிலங்களிலும் அறிமுகம் செய்திட இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. மேலும், தமிழ்நாடு உப்பு நிறுவனம், மருத்துவமனைகள், விடுதிகள் மற்றும் உணவகங்கள் போன்றவற்றின் பயன்பாட்டிற்காக **5** கிலோ மற்றும் **25** கிலோ சிப்பங்களில் அம்மா உப்பினை விநியோகம் செய்து வருகிறது.

### 7.2.2. தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி

தமிழ்நாடு உப்பு நிறுவனம், ஆண்டிற்கு சுமார் **1.5** இலட்சம் டன் சிறந்த தரத்தில், தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்ற உப்பு, தமிழ்நாடு மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் அமைந்துள்ள குளோர் அல்கலி தொழிற்சாலைகளால் தரமுடையதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்ற தொழிலக தரமுடைய உப்பிற்கு மிகப் பெரிய அளவில் சந்தை வாய்ப்புக்கள் உள்ளது. இந்நிறுவனத்தின் மொத்த உப்பு

உற்பத்தியில் **70** சதவீதம் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.மீதம் **30** சதவீதம் சமையல் உப்பு உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகிறது.

### 7.2.3. விரிவாக்க நடவடிக்கைகள்

இந்நிறுவனத்திற்கு அரசு வழங்கிய **5520** ஏக்கர் நிலத்தில், **2010–11**ஆம் ஆண்டு வரையில் **3200** ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் மட்டுமே மேம்படுத்தப்பட்டு உப்பு உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டது. மீதமுள்ள **2200** ஏக்கர் நிலம் மேம்படுத்தும் பணி சுமார் ரூ.**7** கோடி மதிப்பீட்டில் **2012–13**ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது. இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்ற உப்பின் தரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு, ஒரு மணி நேரத்திற்கு **100** டன் திறனுடைய உப்புக் கழுவும் இயந்திரம் ஒன்றினை ரூ.**2.61** கோடி செலவீட்டுத் தொகையில் நிறுவியுள்ளது. இந்நிறுவனம், உப்பின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாகிய சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு உற்பத்தி செய்வதற்காக, ஆண்டிற்கு **40,000** டன் உற்பத்தித் திறனுடைய உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

### 7.2.4. செறிவூட்டப்பட்ட சமையல் உப்பு உற்பத்தி

இந்நிறுவனம், துவக்கத்தில் தொழிலக தரமுடைய உப்பினை மட்டுமே உற்பத்தி செய்து வந்தது. ஒரு காலகட்டத்திற்குப் பிறகு, இந்நிறுவனம் இதன் செயல்பாட்டினை விரிவுபடுத்தி, சமையலுக்கு பயன்படுத்தக் கூடிய நுண்ணூட்டச் சத்து செறிந்த அயோடின் கலந்த உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு மற்றும் யானைக்கால் நோயினை கட்டுப்படுத்தக்கூடிய டை ஈதைல் கார்போமைசின் சிட்ரேட் என்ற மருந்து கலந்த உப்பு ஆகியவற்றினை உற்பத்தி செய்ய துவங்கியது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், இரும்புச் சத்துக் கலந்த உப்பு உற்பத்தியினை, 1987ஆம் ஆண்டு முதல் துவங்கியது. இரும்புச் சத்து கலந்த உப்பு உற்பத்தியில் தமிழ்நாடு உப்பு நிறுவனம், ஒரு முன்னோடி நிறுவனமாகும். தற்போது, தமிழ் நாடு உப்பு நிறுவனம், பள்ளி செல்லும் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு, நுண்ணூட்டச் சத்துக்கள் செறிவூட்டப்பட்ட உப்பினை தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களின் பொது விநியோகத் திட்டம் மற்றும் மதிய உணவு திட்டத்திற்கும் வழங்கி வருகிறது.

### 7.2.5. அயோடின் கலந்த உப்பு

தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் கலந்த உப்பினை அத்தியாவசியமான உணவுப் பொருளாக பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக வழங்குவதற்கான அரசின் ஆணையினை பெற்று, வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களிடையே காணப்படும் அயோடின் பற்றாக்குறையால் உண்டாகும் நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு, மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும், மலைப்பிரதேசங்கள் உட்பட, அயோடின் கலந்த உப்பினை மலிவு விலையில் வழங்கி வருகிறது. இதன் மூலமாக, வறுமைக் கோட்டிற்கும் கீழ் வாழும் மக்களிடையே, அயோடின் கலந்த உப்பு உபயோகிப்போரின் சதவிகிதம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. கடந்த 2015–16ஆம் ஆண்டு 29,493 டன் அயோடின் கலந்த உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 7.2.6. இருவித செறிவூட்டப்பட்ட உப்பு

இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (இரும்பு மற்றும் அயோடின் சத்து) உற்பத்தியில், தமிழ் நாடு உப்பு நிறுவனம் ஒரு முன்னோடி நிறுவனமாகும். இந்நிறுவனம், ஐதராபாத்திலுள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் உருவாக்கியுள்ள அளவீட்டின்படி, இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை உற்பத்தி செய்கிறது. இந்த

அளவீட்டின்படி, நுண்ணூட்டச்சத்து காரணியாக ஃபெரஸ் சல்பேட் என்ற வேதிப்பொருளும், அதனை நிலைநிறுத்தும் காரணியாக சோடியம் எக்ஸா மெட்டா பாஸ்பேட் என்ற வேதிபொருளும் பயன்படுத்தப்படுகிறது.

இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, தமிழ் நாடு மற்றும் கர்நாடகா மாநில அரசுகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. சராசரியாக, ஆண்டிற்கு சுமார் 3,000 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு இத்திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. மேலும், இந்த ஆண்டு 270 டன் இருவித செறிவூட்டப்பட்ட அம்மா உப்பு, உத்திரபிரதேச மாநில அரசின் அக்ஷரதசா திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 7.2.7. இருவித செறிவூட்டப்பட்ட உப்பின் பயன்கள்

இரத்த சோகை நோய் உண்டாக, இரும்புச் சத்து குறைபாடு ஒரு முக்கிய காரணமாகும். இந்தியாவில் 25 சதவீதம் ஆண்கள், 55 சதவீதம் பெண்கள் மற்றும் 73 சதவீதம் குழந்தைகள், இரும்புச் சத்து குறைபாடு உள்ளவர்களாக உள்ளனர். இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உட்கொள்வதன் மூலம் இரத்த சோகை நோயினை கட்டுப்படுத்தலாம்.

### 7.2.8. குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு

இதய நோயாளிகளின் பயன்பாட்டிற்காக, இந்நிறுவனம் குறைந்த அளவு சோடியம் கொண்ட அம்மா உப்பினை உற்பத்தி செய்கிறது. குறைந்த அளவு சோடியம் கொண்ட அம்மா உப்பின் வெளிச்சந்தை விற்பனையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **11.06.2014** அன்று துவக்கி வைத்தார்கள். கடந்த **2015–16**ஆம் ஆண்டு **38** டன் குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 7.2.9. டைஈத்தைல் கார்போமைசின் சிட்ரேட் உப்பு (DEC SALT)

தமிழ்நாடு உப்பு நிறுவனம், டை ஈத்தைல் கார்போமைசின் சிட்ரேட் செறிவூட்டப்பட்ட உப்பை உற்பத்தி செய்து, யானைக்கால் நோயினை களையும் பொருட்டு, சுகாதாரத் துறையின் மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வழங்கி வந்தது. **2015–16**ஆம் ஆண்டில், இந்திய அரசின் வெக்டார் கட்டுப்பாட்டு துறையின் மூலமாக, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு **24** டன் டை ஈத்தைல் கார்போமைசின் சிட்ரேட் செறிவூட்டப்பட்ட உப்பை வழங்கியுள்ளது.

## 7.3. அனைவரும் அயோடின் உப்பினை பயன்படுத்தும் திட்டம் (Universal Salt Iodisation Programme)

உலக சுகாதார நிறுவனத்தின் மேற்படி திட்டத்தில் தமிழ்நாடு உப்பு நிறுவனம், முக்கிய பங்காற்றியுள்ளது. இந்நிறுவனம், பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு, 1991 முதல் **2015–16** வரை மொத்தம் **5,76,678** டன் செறிவூட்டப்பட்ட உப்பினை வழங்கியுள்ளது.

## 7.4. நிறுவனத்தின் இதர நடவடிக்கைகள்

### 7.4.1. புரோமின் உற்பத்தி

உப்பின் உடன் விளை பொருளாகிய பிட்டனிலிருந்து (கழிவு நீர்) புரோமின் என்ற வேதிப்பொருள் தயாரிப்பதற்காக சௌத் இந்தியா புரோமின் & அலைடு கெமிக்கல்ஸ் (SIBAC), தூத்துக்குடி என்ற நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அந்நிறுவனத்திற்கு பிட்டன் எனப்படும் கழிவு நீரை வழங்குவதன் மூலம் ஆண்டுக்கு ரூ.8 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை கூடுதல் வருவாய் ஈட்டி வருகிறது.

### 7.4.2. மின் ஆளுமை (e-Governance)

நல்லாட்சி மற்றும் சிறந்த நடைமுறைகள் திட்டத்தின் கீழ், தமிழ் நாடு உப்பு நிறுவனம் அதன் நடவடிக்கைகளை கணினிமயமாக்கும் பொருட்டு, இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப துறை ரூ.76 இலட்சத்தினை வழங்கியுள்ளது. இத்திட்ட பணிகள் நிறைவடைந்து விரைவில் செயல்படுத்தபட உள்ளது.

### 7.4.3. உப்புத் தொழிற்சாலை விரிவாக்கம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், அதன் உப்பு உற்பத்தியின் அளவை அதிகரித்திட காஞ்சிபுரம், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசுக்கு சொந்தமான உப்பு உற்பத்திக்கு ஏற்ற இடங்களை பெற்று, அப்பகுதிகளில் உப்பு உற்பத்தி மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக மேற்கண்ட மாவட்டங்களில் சுமார் 7,300 ஏக்கர் நிலப்பரப்பினை பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 7.5. முக்கிய சாதனைகள்

அ. இந்நிறுவனம், இந்தியாவில் முதன் முறையாக இரும்பு சத்துக் கலந்த உப்பினை உற்பத்தி செய்து, 1991ஆம் ஆண்டு முதல் மதிய உணவு திட்டத்திற்கு வழங்கி வருகிறது.

ஆ. **2001**ஆம் ஆண்டு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை (இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பு) அறிமுகம் செய்தது.

இ. தமிழ்நாடு உப்பு நிறுவனம், இந்தியாவிலேயே குறைந்த விலையில், பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக, அயோடின் கலந்த கல் உப்பினை விநியோகம் செய்து வருகிறது.

ஈ. தமிழ்நாடு உப்பு நிறுவனம், **2012**ஆம் ஆண்டு, **1,78,675** டன் தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

உ. தமிழ்நாடு உப்பு நிறுவனம், புதிதாக மேம்படுத்தப்பட்ட **2,200** ஏக்கர் நிலப்பரப்பில் உப்பு உற்பத்தி மேற்கொள்வதன் மூலம் இந்நிறுவனத்தின் ஆண்டு தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி திறன் **1.75** இலட்சம் டன்னிலிருந்து **3** இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

ஊ. நான்கு வகையான அம்மா உப்புக்களை, அதாவது, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, குறைந்த அளவு சோடியம் கொண்ட உப்பு மற்றும் அயோடின் கலந்த கல் உப்பு ஆகியவற்றை மிகக் குறைந்த விலையில் திறந்த வெளிச் சந்தையில் அறிமுகம் செய்துள்ளது.

எ. தமிழ்நாடு உப்பு நிறுவனம், உற்பத்தி செய்யும் உப்பின் தரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு, ஒரு மணி நேரத்திற்கு 100 டன் திறனுடைய உப்புக் கழுவும் இயந்திரம் ஒன்றினை மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் நிறுவியுள்ளது. இத்தகைய உயர் திறனுடைய உப்புக் கழுவும் இயந்திரம் தமிழகத்தில் முதன் முறையாக நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் தரம் மேம்படுத்தப்பட்ட உப்பினை நல்ல விலைக்கு விற்பதோடு மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்களும் உள்ளது.

## 7.6. தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் தகைமை

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி மற்றும் செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றின் தரமான நிர்வாக அமைப்பிற்காக ஐஎஸ்ஓ 9001:2008 தரச்சான்றிதழினை பெற்றுள்ளது. அயோடின் உப்பினை உற்பத்தி செய்வதற்கு இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் IS 7224:2006 சான்றிதழ் பெற்றுள்ளது. இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்வதற்கு இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் IS 12981:1991 சான்றிதழ் பெற்றுள்ளது. மேலும், இந்நிறுவனம் தரமான முறையில் அயோடின் கலந்த உப்பு

உற்பத்தி செய்வதற்காக, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் சான்றிதழ் பெற்றுள்ளது.

## 7.7. அயோடின் கலந்த உப்பு பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம்

அயோடின் கலந்த உப்பின் உபயோகம் மற்றும் பயன்பாடு ஆகியவை குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே உருவாக்க, பல்வேறு வழிகளில் அதாவது, துண்டு பிரசுரங்கள் வழங்குதல், கடைகளில் தோரணங்கள் கட்டுதல் மற்றும் வானொலி ஆகியவற்றின் வாயிலாக, தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அம்மா உப்பு விற்பனையை ஊக்குவித்திட, தமிழ்நாடு உப்பு நிறுவனம், மக்களை ஈர்க்கத்தக்க வகையில் ஆடியோ மற்றும் வீடியோ மூலமாக விளம்பரங்கள் செய்ய உள்ளது.

## 7.8. யுனிசெப் நிறுவனத்தின் உதவி

யுனிசெப் என்ற சர்வதேச தொண்டு நிறுவனம், தமிழ் நாடு உப்பு நிறுவனத்திற்கு வழங்கிய ரூ.102 இலட்சம் நிதியினைப் பயன்படுத்தி, நியாயவிலைக் கடை விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளித்தல், வானொலியில் நேரலை மூலமாக அயோடின் உப்பு பற்றிய விழிப்புணர்வு உருவாக்குதல் மற்றும் கிராமப்புறங்களில் தெருக்கூத்துகளின்

மூலமாக அயோடின் உப்பு பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டதன் மூலம் அயோடின் கலந்த உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் உப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வினை மேற்கொள்வதற்காக யுனிசெப் நிறுவனம் தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகிறது. நடப்பாண்டிற்கும் தேவைப்படும் நிதியினை வழங்குவதற்கு யுனிசெப் நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

## 7.9. டாடா அறக்கட்டளையின் உதவி

இருவித செறிவூட்டப்பட்ட உப்பின் உற்பத்தி மற்றும் விற்பனையினை அதிகரித்திடும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனம் நிறுவிட உள்ள உப்பு சுத்திகரிப்பு ஆலைக்கு தேவைப்படும் நிதியில் ரூ.4 கோடியினை டாடா அறக்கட்டளை வழங்கியுள்ளது. இது மட்டுமல்லாது, இருவித செறிவூட்டப்பட்ட உப்பின் விற்பனையினை அதிகரித்திட, இவ்வுப்பின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்துவதற்கு தேவைப்படும் நிதி உதவியினை வழங்கவும் மேற்கூறிய நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

## 7.10. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் அதன் உற்பத்தி பொருட்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் எல்லா உற்பத்தி பொருட்களும், கடுமையான தரக்கட்டுப்பாட்டு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, தரக்கட்டுப்பாட்டு நிபந்தனைகளை பூர்த்தி செய்யும்பட்சத்தில் மட்டுமே விற்பனைக்கு அனுமதிக்கப் படுகிறது. உற்பத்தி பொருட்களின் தரத்தினை பரிசோதனை செய்திட, GAIN என்ற சர்வதேச தொண்டு நிறுவனம் வழங்கிய நிதி உதவி ரூ.25 இலட்சத்தில், வாலிநோக்கத்தில் அமைந்துள்ள தொழிற்சாலை மற்றும் சென்னையில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் ஆகிய இரு இடங்களில் நவீன ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. தலைமை அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள ஆய்வு கூடத்தில், இந்நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் தரம் மற்றும் அதற்கு தேவைப்படும் மூலப்பொருட்களின் தரம் ஆகியவை பரிசோதிக்கப்படுகிறது.

## 7.11. 2016–17ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்

அ. 2,50,000 டன் தொழிலக தரமுடைய உப்பு மற்றும் 50,050 டன் செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. ஒரு மணி நேரத்திற்கு 7 டன் உற்பத்தித் திறனுடைய உப்பு சுத்திகரிப்பு ஆலையினை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகிறது இப்பணிகள் நவம்பர் 2016ல் விரைவு பெறும். இதன் மூலம் இந்நிறுவனம் ஆண்டிற்கு 30,000 டன் சுத்திகரிப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் 10,000 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்திட இயலும்.

இ. பொது மக்கள் பயன்பெறும் பொருட்டு, சுமார் 1000 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு, மலிவு விலையில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகம் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

ஈ. தமிழ்நாடு உப்பு நிறுவனம், உப்பு உற்பத்தியில் முதன்மையாக திகழும் குஜராத் மாநிலத்தில், உப்பு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சமீபத்திய

தொழில் நுட்பம் மற்றும் தரமான உப்பு உற்பத்தி செய்வது ஆகியவை குறித்த பயிற்சியினை, நமது தொழிலாளர்களுக்கு அளித்திட உத்தேசித்துள்ளது.

## 7.12. தொழிலாளர் நல நடவடிக்கைகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், இந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, தூய்மைப்படுத்தப்பட்ட குடிநீர், பிஸ்கட் மற்றும் டீ ஆகியவை அவர்கள் பணிபுரியும் இடங்களிலேயே வழங்கி வருகிறது. மேலும், உப்பளத்தில் நிலவும் வெப்பத்திலிருந்து தொழிலாளர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, கருப்பு நிற கண்ணாடிகள் மற்றும் முழங்கால் வரை நீளமுள்ள, குறைந்த எடையுள்ள காலணிகள் ஆகியவை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.


இந்நிறுவனம், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சட்டப்படியான பயன்கள் அனைத்தையும் வழங்கி வருகிறது. அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் உடல் நலனை பேணும் பொருட்டு, மருத்துவ பரிசோதனை செய்திட, குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களைக் கொண்டு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

## 7.13. கூட்டாண்மை சமூகப் பொறுப்பு


இந்நிறுவனம் கூட்டாண்மை சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக, தொழிற்சாலையைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் உள்ள அரசு பள்ளிகளுக்கு மேசை மற்றும் நாற்காலிகள் வழங்கியுள்ளது. **2015–16**ஆம் ஆண்டில், இராமநாதபுரத்தில் புத்தக விழா நடத்துவதற்கு, தமிழ்நாடு உப்பு நிறுவனம், ரூ.2 இலட்சம் நிதியினை இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கியுள்ளது.




இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கத்திலுள்ள தமிழ்நாடு
உப்பு நிறுவனத்தின் ஒரு மணி நேரத்திற்கு 100 டன் திறனுள்ள
உப்பு கழுவும் இயந்திரம் நிறுவும் பணிகள்



தமிழ்நாடு உப்பு நிறுவனம்
விற்பனை மற்றும் நிகர இலாபம்
(ரூபாய் கோடியில்)
விற்பனை
நிகர இலாபம்
35
30
25
20
15
10
5
0
17.60
21.37
16.86
17.64
21.72
21.88
23.36
32.96
30.43
29.11
1.30
1.01
1.92
1.81
3.26
4.34
1.64
1.01
0.43
0.70
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16




| | 2006–07 | 2007–08 | 2008–09 | 2009–10 | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | 139692 | 129805 | 81630 | 160920 | 135450 | 147845 | 178675 | 166370 | 142008 | 146400 |
| விற்பனை | 94557 | 123884 | 80867 | 97236 | 160800 | 138350 | 118197 | 155739 | 147888 | 138517 |


தமிழ்நாடு உப்பு நிறுவனம்
பொது விநியோகத் திட்டத்திற்கு விநியோகிக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பு
(அளவு டன்னில்)
60000
50000
40000
30000
20000
10000
0
56075
46248
23769
25234
27295
24476
32619
42910
36769
31736
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16

## 8. தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான புதிய முதலீட்டு திட்டங்களை ஈர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசால் **1992**ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (சுருக்கமாக தொழில் வழிகாட்டி என அழைக்கப்படுவது) அமைக்கப்பட்டது. மேலும் தொழில் திட்டங்களுக்கு அனுமதிகளை பெற்றுத் தருகின்ற ஒற்றைச் சாளர ஆவண மையமாக செயல்படுதல் மற்றும் ஏற்றுமதி சம்பந்தமாக உட்கட்டமைப்பு முதலானவற்றை மேம்படுத்த ASIDE திட்டத்தினை செயல்படுத்துதல் ஆகியவை வழிகாட்டி நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆகும்.

தமிழ்நாடு அரசு, உற்பத்தி, உட்கட்டமைப்பு மற்றும் சேவைத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் தொழில் வளர்ச்சியினை விரைவுப்படுத்த, **2015**ஆம் ஆண்டு, செப்டம்பர் **9** மற்றும் **10** ஆகிய தேதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் **உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015** ஒன்றினை நடத்தியது. இது மாநில அரசால், முதன் முறையாக நடத்தப்பட்ட மாபெரும் தொழில் முதலீடு மேம்பாட்டிற்கான நிகழ்வாகும். இந்நிகழ்வில், **9** நாடுகள் **3** மண்டல அரசுகள், **23** வணிக சபைகள் & கூட்டு

வர்த்தக குழுக்கள் ஆகியவை பங்குதாரர்களாக இருந்தன. இந்த உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015ல், 7,000 உள்நாட்டு பிரதிநிதிகள் கலந்துக் கொண்டது மட்டுமல்லாமல், 1,200 வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்துக் கொண்டனர். ஒரு மாநில அரசால் நடத்தப்பட்ட இந்நிகழ்வானது சிறந்த அங்கீகாரத்தைப் பெற்றதோடு, மற்ற மாநிலங்கள் வியக்கும் வகையில் ஒரு வெற்றிகரமான முதலீடு மேம்பாட்டிற்கான நிகழ்வாகவும் அமைந்தது. முதலீடுகளை ஈர்ப்பதற்கும், இந்த மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தொழில் வழிகாட்டி நிறுவனம் பணிக்கப்பட்டது.

2015–16ஆம் ஆண்டு, தொழில் வழிகாட்டி நிறுவனம் ரூ.1,05,759.18 கோடி அளவிலான 62 பெரிய தொழில் திட்டங்களை வெற்றிகரமாக ஈர்த்துள்ளது. இதில் ரூ.1,04,286 கோடி அளவிலான முதலீடுகள் உலக முதலீட்டாளர்கள் சந்திப்பின்போது தொழில் துறை கையொப்பமிட்ட 50 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக ஈர்க்கப்பட்டவை ஆகும். மேலும், வழிகாட்டி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அல்லாத 12 திட்டங்களை ஒற்றைச் சாளர முறையின் கீழ் ஈர்க்கப்பட்டுள்ளது. இவற்றில் உத்தேசிக்கப்பட்ட முதலீடு ரூ.1,473.18 கோடி ஆகும். தொழில் வழிகாட்டி நிறுவனம்

இத்தகைய முதலீடுகளை ஈர்த்திட பெறும் முயற்சிகள் மேற்கொண்டது.

இந்த தொழில் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

**8.1. உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு 2015ல் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த திட்டங்கள்**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | உறுதியளிக்கப்பட்டவை | |
|---|---|---|---|
| | | முதலீடு (ரூ. கோடியில்) | நேரடி வேலைவாய்ப்பு |
| 1. | TNPL | 1,600 | 600 |
| 2. | குரோத் லிங்க் ஓவர்சீஸ் கம்பெனி லிமிடெட் செய்யார் விரிவாக்கம் | 100 | 5,000 |
| 3. | சைனர்ஜி கேபிடல் பிரைவேட் லிமிடெட் | 275 | 500 |
| 4. | தீமா லங்கத் ஹோல்டிங் பெர்ஹாத் &எம்ரெயில், SDN, Bhd | 12,600 | 2,000 |
| 5. | JSW ஸ்டீல்ஸ் விரிவாக்கம் | 1,025 | 300 |
| 6. | அப்போலோ டயர்ஸ் | 2,700 | 450 |
| 7. | KEF,கிருட்டிணகிரி | 390 | 500 |
| 8. | செயின்ட் கோபைன் | 800 | 400 |
| 9. | ITC லிமிடெட், புதுக்கோட்டை | 1,077 | 1,998 |
| 10. | டெல்டா எலக்ட்ரானிக்ஸ், தைவான் | 4,000 | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 11. | SPEL செமிகண்டக்டர் லிமிடெட் | 500 | 2,000 |
| 12. | நாகார்ஜூனா ஆயில் கார்ப்பரேசன் | 18,000 | 1,500 |
| 13. | MRF லிமிடெட், விரிவாக்கம் | 4,500 | 2,300 |
| 14. | CPCL விரிவாக்கம் | 2,740 | 400 |
| 15. | ஆம்வே விரிவாக்கம் | 300+250 | -- |
| 16. | சுதன் ஸ்பின்னிங் லிமிடெட் பிரைவேட் லிமிடெட் | 284 | 200 |
| 17. | மஹிந்திரா & மஹிந்திரா | Phase I: 2,000<br>Phase II: 2,000 | Phase I: 2,500<br>Phase II: 1,000 |
| 18. | லோட்டஸ் ஃபுட்வேர், பர்கூர் | 360 | 10,000 |
| 19. | மேண்டோ ஹெல்லா | 250 | 566 |
| 20. | செக்குசுயி DLJM,ஜப்பான் | 110 | 225 |
| 21. | ஜின்ஹாப் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட், தென் கொரியா | 100 | 400 |
| 22. | TVS மோட்டார்ஸ் விரிவாக்கம் | 350 | 1,000 |
| 23. | எமரால்ட் ஹேவன் ரியாலிட்டி பி லிட் | 450 | -- |
| 24. | NCR கார்ப்பரேசன் இந்தியா பி லிட் | 250 | 850 |

| | | | |
|---|---|---|---|
| 25. | ஜனார் ரிஸோர்ஸஸ் SDN, Bhd, மலேசியா | 700 | 500 |
| 26. | அப்போலோ பாலிவினைல் பிரைவேட் லிமிடெட் | 146 | 250 |
| 27. | கபூர் இமேஜிங் | 168 | 250 |
| 28. | கோனே Finland | 375 | 400 |
| 29. | சோஜிட்ஸ் மதர்சன் தொழில் பூங்கா | 500 | 5,000 |
| 30. | TAFE | 150 | – |
| 31. | லியோ ப்ரைம் பேமன்ட் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 182 | 600 |
| 32. | கொடிசியா தொழில் பூங்கா | 226 | –– |
| 33. | மாருச்சான் அஜினோமோட்டோ இந்தியா பிரைவேட் லிமிடெட், ஜப்பான் | 100 | 45 |
| 34. | Takasago, ஜப்பான் | 61 | 100 |
| 35. | SPIC | 6,000 | 20,000 |
| 36. | MPL | 500 | 600 |
| 37. | க்ரீன்ஸ்டார் ஃபெர்ட்டிலைஸர் (SPICகுழுமம்) | 320 | 200 |
| 38. | வொண்டர்லா (Wonderla) | 500 | 900 |
| 39. | ரியால்லிஃபை ப்ராப்பர்ட்டீஸ் (Reallify Properties) | 300 | 4,000 |

| | | | |
|---|---|---|---|
| 40. | சித்தி வினாயகா ஸ்பின்னிங் மில்ஸ் | 52 | 1,625 |
| 41. | GOPIO Integrated தொழில் நகரியம் | 3,700 | 9,500 |
| 42. | எம்பஸ்ஸி லாஜிஸ்டிக்ஸ் பூங்கா | 900 | 5,000 |
| 43. | சாம்சங் | 800 | 2,500 |
| 44. | TCI | 270 | 500 |
| 45. | கல்ஃப் ஆயில் லூப்ரிகண்ட்ஸ் | 200 | 800 |
| 46. | மிசுஹோ வங்கி | -- | -- |
| 47. | டோக்யோ மிட்சுபிசி வங்கி | -- | -- |
| 48. | சுமிடோமோ மஹிந்திரா & மஹிந்திரா தொழிற்பூங்கா | 925 | 15,000 |
| 49. | அல் கராஃபி (Al Kharaffi) (Al Qebla Al Watya) | 30,000 | 7,000 |
| 50. | திருவாளர்கள் ஆன்தர் சுகர்ஸ் &கெமிக்கல்ஸ் லிமிடெட் | 500 | 2,500 |
| | **மொத்தம்** | **1,04,286** | **1,14,455** |

**8.2. புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாத திட்டங்கள்**

ஒற்றைச் சாளர முறையில் **2015-16**ஆம் ஆண்டில் தொழில் வழிகாட்டி நிறுவனம் ஈர்த்த புரிந்துணர்வு இல்லாத **12** திட்டங்களில் உத்தேசிக்கப்பட்ட முதலீடு ரூ.**1,473.18** கோடி ஆகும். தொழில் வழிகாட்டி நிறுவனம் இத்தகைய முதலீடுகளை ஈர்த்திட பெறும் முயற்சிகள் மேற்கொண்டது.

இந்த திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தயாரிப்பு | உத்தேசித்துள்ள முதலீடு (ரூ. கோடியில்) | உத்தேச வேலை வாய்ப்பு | இடம் |
|---|---|---|---|---|---|
| 1. | மன்னா உணவுகள் தனியார் நிறுவனம் | பேக்கரி தயாரிப்புகள் | 34.60 | 450 | வாடிப்பட்டி கிராமம், மதுரை |
| 2. | ஹீட் மற்றும் கண்ட்ரோல் (தெற்கு ஆசியா) பிரைவேட் லிமிடெட் | உணவு பதப்படுத்துதல் Packaging Equipments | 64.41 | 70 | மகேந்திரா வேல்டு சிட்டி, மறைமலை நகர் |
| 3. | மாடர்ன் பில்டிங் மெட்டிரில்ஸ் பிரைவேட் லிமிடெட் | சிமெண்ட் | 220.00 | 150 | தூத்துக்குடி மாவட்டம் |
| 4. | ஈச்சர் மோட்டார்ஸ் (யூனிட் – ராயல்என்பில்டு) (Eicher Motors) | இரு சக்கர வாகனங்கள், ஐசி இயந்திரங்கள் மற்றும் உதிரிபாகங்கள் போன்றவை | 355.00 | 1000 | சிப்காட் வல்லம் –வடகால் தொழிற் பூங்கா |
| 5. | TAGகார்ப்பரேஷன் | Transmission Line Hardware and accessories | 60.00 | 315 | சிட்கோ தொழிற் பேட்டை திருமுடிவாக்கம் |
| 6. | ஹர்ஷா எக்ஸ்ட்டோ இன்ஜினியரிங் | கண்ணாடி தயாரிப்புகள் | 91.00 | 120 | சிப்காட் தேர்வாய் கண்டிகை தொழிற் பூங்கா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | ஹனிவெல் டெக்னாலாஜி சொலுயூஷன்ஸ் லேப் பிரைவேட் நிறுவனம் | வானூர்தி மென் பொருள் தயாரிப்பு (Software for aerospace applications) | 64.79 | 530 | மதுரை எல்காட் இலந்தை குளம் தகவல் தொழிற்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலம் |
| 8. | பிரபா இன்டஸ்டீரிஸ் | Press Tolls | 19.76 | 45 | எனத்தூர் – பி கிராமம் காஞ்சிபுரம் மாவட்டம் |
| 9. | கீளாரியண்ட் மெடிக்கல் ஸ்பெஷாலிட்டிஸ் (இந்தியா) | Dessicant Canister for Medical Applications | 65.64 | 40 | கடலூார் |
| 10. | ஈச்சர் மோட்டார் | இரு சக்கர வாகன ஆய்வு மற்றும் ஆராய்ச்சி மையம் | 265.00 | 1,000 | சோழிங்கநல்லூர் சென்னை |
| 11. | KMCH சிறப்பு மருத்துவமனை | Super Specialty Hospital | 200.00 | 1,500 | சோழிங்கநல்லூர், சென்னை |
| 12. | இண்டர்நேஷனல் பேக்கரி தயாரிப்புகள் நிறுவனம் | பேக்கரி தயாரிப்புகள் | 32.98 | 150 | ஓரகடம் |
| | | **மொத்தம்** | **1,473.18** | **5,370** | |

## 8.3. 2016–17ஆம் ஆண்டிற்கான முதலீடுகள்

2016–17ஆம் ஆண்டு (ஏப்ரல் 2016 முதல் ஜுலை 2016 வரை) புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாத 4 பெரிய தொழில் திட்டங்களை ஒற்றைச் சாளர முறையின் கீழ் ரூ.6,169.4 கோடி அளவிலான முதலீடுகள் வழிகாட்டி நிறுவனத்தால் ஈர்க்கப்பட்டன. விவரங்கள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டம் | தயாரிப்பு | மூலதனம் (ரூ. கோடியில்) | வேலை வாய்ப்பு | இடம் |
|---|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள் பிரிடானியா இன்டஸ்டீரிஸ் நிறுவனம் | பேக்கரி தயாரிப்புகள் (பிஸ்கட், கேக் மற்றும் பாஸ்டீரிஸ்) | 61.00 | 794 | சிப்காட் பெருந்துறை |
| 2. | திருவாளர்கள் ஃபோர்டு மோட்டார் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் | Global R&D Product Development Centre | 1,300.00 | 12,500 | எல்காட் தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மையம், சோழிங்கநல்லூர் |
| 3. | திருவாளர்கள் DLF நிறுவனம் | IT / ITES | 491.40 | 10,438 | மணப்பாக்கம் |
| 4. | இந்தியன் ஆயில் நிறுவனம் | LNG இறக்குமதி முணையம், எண்ணூர் | 4,317.00 | 2,529 | எண்ணூர் |
| | **மொத்தம்** | | **6,169.40** | **26,261** | |

## 8.4. மைய அரசின் மாநிலங்களுக்கான ஏற்றுமதி உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியுதவி திட்டம் – ASIDE (Assistance to States for Infrastructure Development for Exports and Allied Activities)

வழிகாட்டி நிறுவனம் – உறுப்பினர் செயலர் மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு – அசைடு குழுவிடம் எல்லா நிதியுதவி சம்பந்தப்பட்ட விவரங்களை 15வது மாநில அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவிடம் 9.4.2015 அன்று வழங்கப்பட்ட, 6 திட்டங்களுக்கு ரூ.56.50 கோடி ஒப்புதல் பெறப்பட்டது.

## 8.5. ஜப்பானிய தொழில் மற்றும் வர்த்தக சபை – JCCI (Japanese Chamber of Commerce & Industry)

தமிழ்நாட்டில் ஜப்பானிய முதலீடுகள் தொடர்பாக JCCIஅளித்த ஆலோசனைகளை விவாதிக்க 28.07.2015, 20.11.2015 24.02.2016 மற்றும் 19.7.2016 அன்று கூட்டங்களை தொழில்துறை நடத்தியுள்ளது. கூட்டத்தின்போது, ஜப்பானிய முதலீட்டாளர்கள் தொடர்பான பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டு, தீர்வுகள் காணப்பட்டன.

## 8.6. இணை பணிக்குழு கூட்டங்கள் (JWC)

தமிழ்நாட்டில் ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு உதவும் பொருட்டு தலைமைச் செயலரை தலைவராகக் கொண்ட ஒரு இணை பணிக்குழு அமைக்கப்பட்டது. இதுவரை இந்த இணை பணிக்குழுவின் கூட்டம் ஆறு முறை நடைபெற்றுள்ளது.

## 8.7. எண்ணூர் துறைமுகம் இணைப்பு திட்டம் – கண்காணிப்புக் குழு கூட்டம்

2015–16ஆம் ஆண்டில் தொழில்துறை, தோஷிபா நிறுவன இடத்திலிருந்து எண்ணூர் துறைமுகம் வரையிலான சாலை இணைப்புக்கான கண்காணிப்புக் குழுவின் கூட்டங்களை பலமுறை நடத்தியுள்ளது. இதன் விளைவாக எண்ணூர் துறைமுகம் வரையிலான சாலை இணைப்பு மற்றும் மேம்பாட்டு வேலைகள் முடிக்கப்பட்டன.

# 9. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

தமிழ்நாடு அரசு மேக்னசைட் கனிமத்தை பாதுகாக்கவும் தகுந்த முறையில் வெட்டி எடுக்கவும் ஜனவரி திங்கள் 1979ஆம் ஆண்டு டான்மேக் என அழைக்கப்படும் இந்நிறுவனத்தை, திருவாளர்கள் சேலம் மேக்னசைட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கையகப்படுத்தி நிறுவியது. இந்நிறுவனம் ISO 9001–2008 (தர மேலாண்மை அமைப்பு) மற்றும் ISO 14001–2004 (சுற்றுச் சூழல் மேலாண்மை அமைப்பு) ஆகிய உலகத் தரச் சான்றிதழ்களை பெற்ற நிறுவனம் ஆகும்.

## 9.1. கொள்கை

- தேவையான கனிமத்தை பயன்படுத்தி அதிக அளவில் தரவாரியான பொருட்களை தயாரித்தல்.
- அறிவியல் ரீதியான சுரங்கப்பணி
- வாடிக்கையாளருடன் நீண்டகால நல்லுறவை ஏற்படுத்துதல்

## 9.2. குறிக்கோள்

- விஞ்ஞான ரீதியாக திட்டமிட்டு சுரங்கத்தினை இயக்குதல் மற்றும் சிறப்பான மேலாண்மை மூலம் கனிம வளத்தை பாதுகாத்தல்

- பாதுகாப்பான முறையில் கனிம வளத்தை பயன்படுத்துதல்
- சுற்றுச் சூழல் மாசுபடாமல் காத்தல்
- கடுமையான தரக் கட்டுபாட்டை பராமரித்தல்
- தொழில் துறை வளர்ச்சிக்காக கனிமவளத்தை முறையாக பயன்படுத்துதல்
- இப்பகுதியின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துதல்
- சுற்றுச் சூழல் மற்றும் இப்பகுதியின் சூழ்வியலை பாதுகாத்தல்.

## 9.3. நிறுவனத்தின் பிரிவுகள்

1. சுரங்கப் பிரிவு – மேக்னசைட் மற்றும் டுனைட் உற்பத்தி செய்தல்

2. சுழற் சூளைப்பிரிவு– முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரித்தல்

3. நிலைச் சூளைப்பிரிவு – மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரித்தல்

### 9.3.1. சுரங்கப் பிரிவு

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலை அடிவாரத்தில் சேர்வராயன் தெற்கு வனச்சரகம், குரும்பப்பட்டி காப்பு காட்டில் **96.34** ஹெக்டேர் **(238** ஏக்கர்**)** பரப்பளவில் **12.8.2008** முதல்

**20** ஆண்டுகளுக்கு சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையிடம் குத்தகையாகப் பெற்று, டேன்மேக் நிறுவனம் சுரங்கத்தினை இயக்கி வருகிறது.

மேக்னசைட் தாது உருக்கு ஆலைகள் தயாரிக்கும் வெப்பம் தாங்கும் எரிகற்களுக்கு மிக முக்கியமான மூலப்பொருள் ஆகும். தமிழ்நாட்டில், சேலம் மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய மதிப்புமிக்க தாது ஆகும். உத்திராஞ்சல், கர்நாடகா மற்றும் ஜம்மு–காஷ்மீர் போன்ற மாநிலங்களிலும் இத்தாது கிடைக்கின்றது.

இயந்திரங்கள் மற்றும் தொழிலாளர்களைப் பயன்படுத்தி, (Semi-Mechanised) திறந்தவெளி முறையில் சுரங்க பணிகளை டேன்மேக் நிறுவனம் செய்து வருகிறது. **2016–17**ஆம் ஆண்டிற்கு **1,14,000**டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இது முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் மற்றும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட்டுக்கு மூலப்பொருள் ஆகும். மேக்னசைட் கனிமத்தைதோண்டி எடுக்கும்போது டுனைட் என்ற கனிமம் துணைத்தாதுவாகக் கிடைக்கின்றது.

## 9.3.2. சுழற்சூளைப் பிரிவு (Rotary Kiln Division)

ஆண்டொன்றுக்கு **30,000** டன் உற்பத்தி திறன் கொண்ட முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்க நவீனமயமாக்கப்பட்ட சுழற்சூளைப் பிரிவு **1985**ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளது. மேக்னசைட் தாது, உலை எண்ணெயைக் (Furnace Oil) கொண்டு அதிக அளவு வெப்பமான **1,750** டிகிரி செல்சியசில் வெப்பப்படுத்தப்பட்டு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்கப்படுகின்றது.

இது உருக்கு ஆலைகளுக்குத் தேவைப்படும் வெப்பம் தாங்கி கற்கள் (Refractory Bricks) மற்றும் மோனோலித்திக்ஸ் (Monolithics ) தயாரிக்கப் பயன்படுகிறது. **2016–17**ஆம் ஆண்டிற்கு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் **30,000** டன் **(**100 TPD**)** உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு டன் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்க சுமார் **2.7** டன் கச்சா மேக்னசைட்டும் **220** லிட்டர் உலை எண்ணையும் தேவைப்படுகின்றது.

### 9.3.3. நிலைச்சூளைப் பிரிவு (Shaft Kiln Division)

இப்பிரிவின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 20,000 டன்னாகும். மேக்னசைட் தாது 1000 டிகிரி செல்சியஸ் முதல் 1,100 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்பத்தில் உலை எண்ணையைக் (Furnace Oil) கொண்டு வெப்பமயமாக்கப்பட்டு இரசாயன எதிர்வினைமூலம் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்கப்படுகிறது. ஒரு டன் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் தயாரிக்க சுமார் 2.20 டன் கச்சா மேக்னசைட்டும் 140 லிட்டர் உலை எண்ணையும் தேவைப்படுகின்றது.

இது கோதுமை அரைப்பதற்குப் பயன்படும் அரவைக் கற்கள், மேக்னசைட் இரசாயனங்கள், கால்நடைத் தீவனம், கிரானைட் மெருகூட்ட தேவைப்படும் மெருகுக் கற்கள், ரேயான் மற்றும் காகித ஆலைகள் போன்றவற்றிற்கு பயன்படுகிறது. நடப்பு ஆண்டில் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் 17,000 டன் அளவிற்கு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 9.4. சாதனைகள்

- இந்நிறுவன வரலாற்றில் முதல்முறையாக, **2014–15**ஆம் ஆண்டில் ரூ.**109.91** கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது. **2015–16**ஆம் ஆண்டில் விற்பனை ரூ.**100.35** கோடி (தணிக்கைக்கு உட்பட்டது) ஆகும்.

- **2015–16**ஆம் ஆண்டில், வரிக்கு முந்தைய இலாபமாகரூ.**33.23** கோடி (தணிக்கைக்கு உட்பட்டது) ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் ஈட்டிய அதிகபட்ச இலாபம் இதுவே ஆகும்.

- இந் நிறுவனம் **2015–16**ஆம் ஆண்டில் **29,300** டன் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை உற்பத்தி செய்துள்ளது. இது கடந்த ஆறு ஆண்டுகளின் அதிக உற்பத்தி ஆகும்.


- இந்நிறுவன வரலாற்றில் முதல் முறையாக **2015–16**ஆம் ஆண்டில், அரசுக்கு இடைக்கால ஈவுத் தொகையாக ரூ.**166.50** இலட்சம் வழங்கி உள்ளது.

## 9.5. 2016–17 மற்றும் 2017–18ஆம் ஆண்டுகளுக்கான செயல் திட்டம்


உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் பின்வருமாறு:

(மெட்ரிக் டன்னில்)

| விவரம் | 2016–17 | | 2017–18 | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி | விற்பனை/ சொந்த பயன்பாடு | உற்பத்தி | விற்பனை/ சொந்த பயன்பாடு |
| கச்சா மேக்னசைட் | 1,14,000 | 1,14,000 | 1,20,000 | 1,20,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 30,000 | 30,000 | 30,000 | 30,000 |
| மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 17,000 | 17,000 | 18,000 | 18,000 |



தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்
நிதிச் செயல்பாடு
(ரூபாய் கோடியில்)
வருமானம்
வரிக்கு முன் இலாபம்
116.31
108.43
96.31
91.21
88.06
33.22
24.22
15.3
13.04
11.22
120
100
80
60
40
20
0
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16




| | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 |
|---|---|---|---|---|---|
| கச்சா மேக்னசைட் | 112356 | 110440 | 90180 | 128829 | 108066 |
| எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 28808 | 22721 | 23005 | 28539 | 29300 |
| மிருது எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 15413 | 17292 | 15906 | 13555 | 12186 |
| டுனைட் | 29686 | 61491 | 53446 | 34360 | 28220 |

## 10. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் 1986ஆம் ஆண்டு வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம், வன்டறந்தாங்கல் கிராமத்தில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் வேலூர் மாவட்டத்தின் தொழில் முன்னேற்றத்திற்காகவும், வேலூர் மாவட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் சீரிய நோக்கத்தோடும் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம் 1986ஆம் ஆண்டு முதல் நைட்ரோ கிளிசரின் வெடிமருந்தும் பிறகு வெடியூக்கி, வெடித்திரி, கலவை வெடிமருந்து, எமல்ஷன் வெடிமருந்து மற்றும் எம்.எம்.ஏ.என். போன்ற உற்பத்தி பிரிவுகளை துவக்கி 1,100 நபர்களுக்கு நேரடியாகவும், 300 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளித்தது.

இந்நிறுவனம், வேலூர் மாவட்டம், வனத்துறைக்கு சொந்தமான 700 ஏக்கர் பரப்பளவில் பலவிதமான வெடி மருந்து பொருட்கள் மற்றும் அதனை சார்ந்த துணை பொருட்களை உற்பத்தி செய்வதற்கேற்ப பல்வகை உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு தேவையான நிதி தமிழக அரசு, நிதி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பங்குகளாக பெறப்பட்டு முதலீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய தமிழ்நாடு தொழில்

வெடிமருந்து நிறுவனத்தின் பங்கு முதலீடுகளாக ரூ.22.14 கோடியினை (82.14 சதவிகிதம்) தமிழக அரசும், ரூ.1.99 கோடியினை (7.42 சதவிகிதம்) தொழில் வளர்ச்சி பாரத வங்கி மற்றும் இந்திய தொழில் நிதி நிறுவனமும், ரூ.2.66 கோடியினை (9.86 சதவிகிதம்) பொது மக்களும், ரூ.2.87 இலட்சத்தினை (0.11 சதவிகிதம்) நிறுவன ஊழியர்களும் மற்றும் அயல்நாடு வாழ் இந்தியர்களும் ரூ.12.90 இலட்சத்தினை (0.47 சதவிகிதம்) கொண்டுள்ளனர்.

### 10.1. டெல் நிறுவனத்தின் உற்பத்தி பொருட்கள், திறன் மற்றும் பயன்பாடுகள்

| வ. எண் | உற்பத்தி பொருட்கள் | உற்பத்தி திறன்/ ஆண்டு | பயன்பாடு |
|---|---|---|---|
| 1. | வெடியூக்கி | 45 மில்லியன் | வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்கு தேவைப்படும் துணைப்பொருள். |
| 2. | வெடித்திரி | 12 மில்லியன் மீட்டர்கள் | வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்கு தேவைப்படும் துணைப்பொருள். |
| 3. | கலவை வெடிமருந்து | 10000 டன் | திறந்த வெளி சுரங்கங்களில் பயன்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| **4.** | எமல்ஷன் வெடிமருந்து | **9000** டன் | கிணறு தோண்டுதல், சுரங்கம் அமைத்தல் மற்றும் பாறை உடைத்தல் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது. |
| **5.** | மோனோ மீத்தைல் அமீன் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்) | **6000**டன் | அயல்நாடுகளில் தயாரிக்கப்படும் வெடிமருந்துகளுக்கு அடிப்படை வேதிப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. |

இந்நிறுவனம் நைட்ரோ கிளிசரின் வெடிமருந்து உற்பத்தியை **1986**ல் துவக்கி, **1,552** டன்னிலிருந்து **8,073** டன் என்கிற அளவில் **2002–03**ஆம் ஆண்டில் உற்பத்தியை பெருக்கி தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வெடி பொருட்களை விற்பனை செய்து இலாபம் ஈட்டி வந்தது. மத்திய அரசு, கடந்த **2004** ஏப்ரல் முதல் நைட்ரோ கிளிசரின் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு தடை செய்ததால், டெல் நிறுவனம், மாற்று வெடிபொருட்களான எமல்ஷன் மற்றும் எம்.எம்.ஏ.என். தயாரிக்க துவங்கியது.

**2006–07**ஆம் ஆண்டில் **25** டன்னாக தொடங்கிய எம்.எம்.ஏ.என் உற்பத்தி, **2013–14**ஆம் ஆண்டில் **1286** டன்னாக உயர்ந்துள்ளது.எமல்ஷன் வெடிபொருட்களுக்கு விற்பனையில்

போட்டி இருந்தபோதிலும், **2004**ஆம் ஆண்டில் **211** டன்னாக இருந்த உற்பத்தி **2014–15**ஆம் ஆண்டில்**3,997** டன்னாக உயர்ந்துள்ளது. இந்நிறுவனம் **2000–01**ஆம் ஆண்டில் ரூ.**0.31** கோடி ஏற்றுமதி விற்பனையை துவக்கி, **2015–16**ஆம் ஆண்டில் ரூ.**16.43** கோடி ஏற்றுமதி விற்பனையை அடைந்துள்ளது.

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், சுரங்கம் மற்றும் அது சார்ந்த தொழில்களுக்குத் தேவையான தரம் வாய்ந்த வெடிபொருட்களை உற்பத்தி செய்து, சந்தையில் நற்பெயரைத் தக்க வைத்துள்ளது. இந்நிறுவனம் மாநில மற்றும் மத்திய அரசிடமிருந்து பாதுகாப்பு மற்றும் சுற்று சூழல் பாதுகாப்புக்கான விருதுகளை பலமுறை பெற்றுள்ளது. இந்நிறுவனம், பொருட்களின் தரம், பாதுகாப்பான உற்பத்தி மற்றும் சுற்றுப்புறச் சூழல், மாசுக் கட்டுபாடு ஆகியவற்றிற்கான ISO 9001:2008, ISO 14001-2004 மற்றும் OHSAS 18001:1999 தர சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

இந்நிறுவனம் உற்பத்தி பொருட்களை பொதுத்துறை நிறுவனங்களான எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனம், சிங்கரேணி சுரங்க நிறுவனம், ஹட்டி தங்க சுரங்க நிறுவனம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், இந்துஸ்தான் காப்பர் நிறுவனம், விசாகப்பட்டினம் உருக்கு நிறுவனம், ராஜஸ்தான்

கனிம நிறுவனம், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடாகாவில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகிறது. உள்நாட்டு வெடிபொருட்களுக்கு சந்தையில் கடுமையான போட்டி நிலவுவதால், டெல் நிறுவனம் வெடிபொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. இந்நிறுவனம், ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. தற்பொழுது எகிப்து மற்றும் துருக்கி நாடுகளுக்கும் ஏற்றுமதியை தொடங்கி இருக்கிறது.

எழுபது விழுக்காட்டிற்கும் மேலாக விற்பனையை நிறுவனத்திற்கு பெற்றுத்தந்த நைட்ரோ கிளிசரின் (என்.ஜி) வெடி பொருட்களின் உற்பத்தி, உடைமை மற்றும் விற்பனையை **1.4.2004** முதல் மத்திய அரசு முழுவதுமாக தடை செய்ததால், உற்பத்தி திறன், விற்பனை வெகுவாக பாதிக்கப்பட்டு, **2003–04**ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனம் நட்டத்தில் இயங்கத் தொடங்கியது. முதன்மை வெடி பொருட்கள் கட்டுப்பாட்டு அதிகாரி அவர்கள் கடந்த **2015–16**ஆம் ஆண்டு முதல் அம்மோனியம் நைட்ரேட் உபயோகத்தினை சட்டப்படி செயலாக்க

கட்டாயப்படுத்தியதின் விளைவாக வெடியூக்கியின் உபயோகம் மிகவும் குறைந்ததால், அதன் சந்தை மதிப்பு இந்தியாவில் குறைந்து வெடியூக்கியின் விற்பனையும், விலையும் வீழ்ச்சியடைந்தது.

இந்நிறுவனத்தின், 2015–16ஆம் ஆண்டிற்கான விற்பனை அளவு ரூ.22 கோடியாகும். இது, 2014–15ஆம் ஆண்டின் விற்பனை அளவான ரூ.42 கோடியுடன் ஒப்பிடுகையில் சுமார் 50 சதவிகிதம் குறைவாகும். இதற்கு, வெடியூக்கியின் தேவை மற்றும் வெடியூக்கியின் விலை குறைந்ததே காரணமாகும். தற்சமயம் நடைமுறை மூலதனம் இல்லாத காரணத்தால் 2015–16ஆம் ஆண்டில் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. மேலும் இத்துறையில் உள்ள போட்டியாளர்கள் மிகவும் குறைந்த விலையில் வெடி பொருட்களை விற்க முன்வருகிறார்கள். அந்த விலையானது டெல் நிறுவனத்தின் மூலப் பொருட்களின் விலையைக்கூட ஈடுசெய்ய முடியாததால் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து கூட விற்பனை ஆணையை பெற இயலவில்லை. இந்நிறுவனம் 2015–16ஆம் ஆண்டில் ரூ.16.43 கோடி அளவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. இது மொத்த விற்பனையில் 70 சதவிகிதமாகும்.

## 10.2. டெல் நிறுவனத்தின் 2016–17 மற்றும் 2017–18ஆம் ஆண்டுகளுக்கான திட்டங்கள்

**(1)** டெல் நிறுவனம் **2016–17**ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி விற்பனை ரூ.20 கோடி என்ற அளவினை **2017–18**ஆம் ஆண்டில் ரூ.25 கோடியாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**(2)** மிகையாக உள்ள **150** தொழிலாளர்களை விருப்ப ஓய்வு திட்டத்தில் விடுவித்து உற்பத்தி செலவை குறைத்தல்.

**(3) உற்பத்தி செலவினத்தை குறைக்கும் நடவடிக்கை**

**எமல்ஷன் பிரிவு**

- முக்கிய மூலப்பொருளான அமோனியம் நைட்ரேட் அளவை குறைப்பது.
- அலுமினியம் கம்பிக்கு பதிலாக கேல்வனைஸ்டு இரும்பு கம்பி மாற்றுதல்.
- எமல்ஷன் வெடிமருந்தில், மோலிசான் / பிப்சா முழுவதுமாக நீக்குதல்.

**வெடியூக்கி பிரிவு**

- வெடி ஊக்கியில் பியூஸ்ஹெட், பிராஸ் ஸ்டிரிப் (Fusehead, Brass Strip) நீளத்தைக் குறைப்பது.
- குப்பிகளுக்காக நேரடியாக அன்ஈல்டு அலுமினியம் கம்பியை பயன்படுத்துவது.

## வெடித்திரிபிரிவு

- வெடித்திரிக்குண்டான அதிக திறன் கொண்ட Polyprophylene இழையை உபயோகிப்பது.

## கலவை வெடிமருந்து பிரிவு

- கலவை வெடிமருந்து பொருட்களின் தரம் குறையாமல் மூலப்பொருளான அம்மோனியா நைட்ரேட் அளவை குறைப்பது.
- அலுமினிய துகள்களை 2.3 சதவிகிதமாக குறைப்பது.
- கலவை வெடிமருந்தின் அலுமினியம் மணிகளை நீக்குவது.

# 11. தமிழ்நாடு கனிம நிறுவனம்

வளம் நிறைந்த அளப்பறிய செல்வங்களான, கனிம வளங்களை அறிவியல் முறையில் கண்டறிந்து, அவற்றை நவீன தொழில் நுட்ப முறையில் வெட்டி எடுத்து, இலாபகரமாக விற்பனை செய்யும் பணியினை ‘‘தமிழ்நாடு கனிம நிறுவனம்’’ (டாமின்) செய்து வருகிறது. அதிக அளவில் கிடைக்கக்கூடிய சிறுவகை கனிமங்களான கருப்பு, வெள்ளை, பாரடைஸோ, பல வண்ண கற்படிவங்கள் (கிரானைட்) சிலிகா மணல் மற்றும் பெருவகைக் கனிமங்களான கிராபைட், சுண்ணாம்புக்கல், மற்றும் வெர்மிகுலைட் ஆகிய கனிமங்களை சீரிய முறையில் வெட்டியெடுத்து அவற்றை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி நியாயமான முறையில் விற்பனை செய்வது தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பணியாகும்.

## 11.1. நோக்கம்

கனிம துறையில் முதன்மையான இடத்தை அடைதல் மற்றும் இயற்கையான கனிம வளங்களை அறிவியல் முறையில் கையாளுதல்.

## 11.2. குறிக்கோள்

- தொடர்ந்து புதிய கனிமவள பகுதிகளை கண்டறிதல்.

- சுரங்க செயல்பாடுகளில் நவீன உத்திகளை கையாள்வதன் மூலம் பாதுகாப்பான வகையில் தரமான கனிம உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல்.
- மதிப்பு கூட்டப்பட்ட கிரானைட் மற்றும் கனிமங்கள் ஏற்றுமதி மூலம் மாநிலத்திற்கும் மற்றும் நாட்டிற்கும் கனிசமான அன்னிய செலாவணி ஈட்டுதல்.
- குவாரிகள் மற்றும் சுரங்கங்களை மேம்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் பின் தங்கிய மற்றும் கிராமப்புற பகுதி மக்கள் பயனடையக்கூடிய வகையில் வேலைவாய்ப்பினையும் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தியில், தகுதி வாய்ந்த தொழில்நுட்பக் கல்வி பயின்றவர்களுக்கு தகுந்த வேலை வாய்ப்பினையும் ஏற்படுத்தி தருதல்.
- குவாரிகள் மற்றும் சுரங்கங்களை முறையான வகையில் செயல்படுத்துவதன் மூலம் அதிக மதிப்புள்ள கிரானைட் மற்றும் கனிமங்களை உற்பத்தி செய்தல்.

### 11.3. சுரங்க குத்தகை விவரம்

| வ.எண் | கிரானைட் வகைகள் | சுரங்க குத்தகை எண்ணிக்கை | பரப்புளவு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|
| 1 | கருப்பு கிரானைட் | 64 | 869.355 |
| 2 | பலவண்ண கிரானைட் | 45 | 696.855 |
| 3 | பெருங்கனிமங்கள் | 18 | 324.942 |
| | **மொத்தம்** | **127** | **1891.152** |

### 11.4. பணியாளர்கள் விவரம்

| | |
|---|---|
| அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் | 540 |
| தொழிலாளர்கள் | 643 |
| மொத்தம் | 1183 |

❖ தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. 2015–16ஆம் நிதியாண்டில் ரூ.149 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் இரண்டாவது அதிகபட்ச வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.23.06 கோடி (துணிக்கையாகாதது) ஈட்டப்பட்டுள்ளது (முதலாவது அதிகபட்ச இலாபம் 2013–14ஆம் ஆண்டில்

ஈட்டப்பட்டது). உலகப் பொருளாதாரத்தில் மந்தநிலை நிலவியபோதும், சிறந்த முறையில் பணியாற்றி விற்பனை மற்றும் இரண்டாவது மிக உயர்ந்த இலாபம் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து ஈட்டப்பட்டுள்ளது.

❖ 1978ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இல்லாத அதிகபட்ச விற்பனை வருவாயாக இந்திய தர மணல் விற்பனை ரூ.7.66 கோடி மதிப்பிற்கு 2015–16ஆம் நிதியாண்டில் ஈட்டப்பட்டுள்ளது.

❖ 1978ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இல்லாத அதிகபட்ச விற்பனை வருவாயாக விரிவுபடுத்தப்பட்ட வெரிமிகுலைட் விற்பனை ரூ.2.12 கோடி மதிப்பிற்கு 2015–16ஆம் நிதியாண்டில் ஈட்டப்பட்டுள்ளது.

❖ இந்நிறுவனம் துவக்கப்பட்டதிலிருந்து, அதிகப்பட்ச உற்பத்தியாக 2015–16ஆம் நிதியாண்டில் இந்திய தரமணல் உற்பத்தி 3,909 டன்னாகவும், கச்சா சிலிகா மணல் உற்பத்தி 7854 டன்னாகவும் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் உற்பத்தி 1460 டன்னாகவும் எட்டப்பட்டுள்ளது.

❖ கடந்த 2014–15ஆம் நிதியாண்டில், இந்நிறுவனம், ராயல்டி, உரிம வரி, முடக்கு வரி மற்றும் பங்கு ஈவுத்

தொகையாக ரூ.20.18 கோடியினை அரசுக்கு செலுத்தியுள்ளது.

## 11.5. 2015–16ஆம் நிதியாண்டில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்

- ❖ சென்னை எர்ணாவூரில் 'வெர்மிடைல்ஸ்' உற்பத்தி செய்ய ரூ.1 கோடி செலவில் ஒரு புதிய தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.
- ❖ சிவகங்கையில் கிராபைட் செழுமைபடுத்தும் தொழிற்சாலையை நவீனப்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- ❖ எண்ணூரில் உள்ள இந்திய தர மணல் உற்பத்தி தொழிற்கூடத்தை நவீனப்படுத்தவும் வேலூர் மாவட்டம், செவாத்தூரில் புதிய வெர்மிகுலைட் ஆலை ஒன்று அமைப்பதற்கும் முறையே ரூ.1.95 கோடி மற்றும் ரூ.1.80 கோடி செலவில் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் எண்ணூர் தர மணல் தொழிற்சாலை, நவீனப்படுத்தப்பட்டு உற்பத்தியை தொடங்கி உள்ளது.
- ❖ டாமின் நிறுவன வரலாற்றில் முதன்முறையாக, பல்வேறு புதிய கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சி செய்வதற்கும் அதை

செயல்படுத்துவதற்குமென ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளின் பயனாக, 'கழிவிலிருந்து செல்வம் பெருக்குதல்' என்ற கருத்தின் அடிப்படையில் 'வெர்மிடைல்ஸ்' (குளுமை கூரை ஓடுகள்) மற்றும் 'கிராபி பேவர் பிளாக்ஸ்' (தரை தள ஓடுகள்) போன்ற புதிய தயாரிப்புகளை உருவாக்கியுள்ளது. இந்த பொருட்கள் சந்தையில் வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய பொருட்கள், பசுமை கட்டிட கருத்திற்கு வலு சேர்ப்பதுடன், வருங்காலத்தில் கட்டுமான தொழிலில் ஒரு குறிப்பிடத்தகுந்த மாற்றத்திற்கும் வழிவகுக்கும்.

❖ டாமிகோல்ட் எனும் நான்காம் நிலை வெர்மிகுலைட் கனிமமானது வனத்துறைக்கும் மற்றும் சில தொழிற் கூடங்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. இச்சூழலில் இக்கனிமத்திற்கான புதிய சந்தை வாய்ப்புகள் ஆராயப்பட்டதின் விளைவாக, தோட்டக்கலை மற்றும் விவசாயத்துறைகளில் 'டாமிகோல்ட்' அறிமுகப்படுத்தப்பட்டு, மாடித்தோட்டம்

மற்றும் இயற்கை முறை தோட்டங்களுக்கு மிகவும் ஏற்றதாக கண்டறியப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் உற்பத்தி மணல் (M-Sand) தயாரிப்பிற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வசம் குத்தகை உரிமம் உள்ள நிலங்களிலேயே உற்பத்தி மணல் தயாரிப்பிற்கு உகந்த கருங்கற்கள் உள்ளன. இவற்றை வெட்டியெடுத்து உற்பத்தி மணல் தயாரிப்பதற்கு இந்நிறுவனம் முயற்சி மேற்கொண்டுள்ளது. இது தவிர, சிவகங்கை கிராபைட் கனிம உற்பத்தியின் போது ஏற்படும் கழிவுகளிலிருந்து கட்டுமானப் பணிக்கு தேவையான மணலைப் பிரித்தெடுப்பது தொடர்பாக மைய மின் வேதியியல் ஆய்வகத்தின் (CECRI, Karaikudi) உதவியுடன் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.6. சுரங்க மேலாண்மை மென்பொருள் (QMS) (Quarry Management System Software)


❖ 2012ஆம் ஆண்டு குவாரி மேலாண்மை அமைப்பு என்றழைக்கப்படும் மென்பொருள் ஒன்றை புதியதோர் முயற்சியாக இந்நிறுவனம் உருவாக்கியது. அதற்காக 2015ஆம் ஆண்டு மதிப்புமிக்க தேசிய மின்–ஆளுமை விருது (National e-governance Award) டாமின்


நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. அத்தகைய QMS பதிப்பு–1 புதிய மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் QMS பதிப்பு–2 என விரைவில் வெளியிடப்படவிருக்கிறது.

- QMS பதிப்பு–2ல் தயாரிப்பு, விற்பனை, கொள்முதல், இருப்பு, சரக்கு, மனிதவளம், சம்பளம் மற்றும் நிதி கணக்கியல் ஆகியவை அடங்கும். குவாரிகளையும் சுரங்கங்களையும் பயனுள்ள வகையில் கண்காணிக்கும் வகையில் ஒரு முழுமையான மேலாண்மை கருவியாக இது இருக்கும். இது தவிர, கைபேசி செயலி (Mobile App) ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் உதவியுடன் நிறுவனத்தின் தினசரி நடவடிக்கைகளை எளிதில் கண்காணிக்க இயலும்.

## 11.7. குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் நிர்வாகம்


தமிழ்நாடு கனிம நிறுவனம், தற்போது மிக நவீன உத்திகளை கையாண்டு உற்பத்தி பெருக்கத்தையும் மற்றும் காற்று, ஒலி மற்றும் நீர் நிலைகள் மாசுபடாமல் முறையாகவும் அறிவியல் பூர்வமாகவும், சுரங்கப் பணிகளை தற்பொழுது செய்து வருகிறது. மேலும் சுரங்கங்களில் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



தமிழ்நாடு கனிம நிறுவனம்
கிரானைட் பொருட்கள் விற்பனை
(ரூபாய் கோடியில்)
16
14
12
10
8
6
4
2
0
6.01
5.38
12.89
8.09
13.40
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16


தமிழ்நாடு கனிம நிறுவனம்
இந்திய தர மணல் உற்பத்தி
( ரூபாய் கோடியில்)
45
40
35
30
25
20
15
10
5
0
22.31
25.35
23.81
28.59
34.86
30.78
33.00
37.14
38.82
39.09
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16



தமிழ்நாடு கனிம நிறுவனம்
சிலிகா மணல் உற்பத்தி
( ரூபாய் கோடியில்)
90
80
70
60
50
40
30
20
10
0
27.07
30.94
31.29
33.29
39.01
32.06
42.12
75.00
76.47
78.54
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16


தமிழ்நாடு கனிம நிறுவனம்
இந்திய தரமணல் விற்பனை
( ரூபாய் கோடியில்)
9
8
7
6
5
4
3
2
1
0
1.20
1.35
1.91
2.03
2.44
3.46
4.56
6.13
7.10
7.67
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16



தமிழ்நாடு கனிம நிறுவனம்
கிரானைட் பொருட்கள் விற்பனை
( ரூபாய் கோடியில்)
16
14
12
10
8
6
4
2
0
6.01
5.38
12.89
8.09
13.40
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16


தமிழ்நாடு கனிம நிறுவனம்
விரிவுப்படுத்தப்பட்ட வெர்மிகுலைட் விற்பனை
(ரூபாய் கோடியில்)
2.50
2.00
1.50
1.00
0.50
0.00
0.64
0.83
0.93
0.96
1.24
1.10
1.24
1.85
1.93
2.12
2006-07
2007-08
2008-09
2009-10
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16

## 12. புவியியல் மற்றும் சுரங்கத்துறை

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது கனிமங்களாகும். பல தொழிற்சாலைகள் திறம்பட இயங்க தேவையான மூலப்பொருட்கள் கனிமங்கள் அகழ்ந்தெடுப்பதன் மூலம் கிடைக்கப்பெறுகின்றன. கட்டுமானப்பணி மற்றும் சாலைப்பணி ஆகிய உள்கட்டமைப்புகள் சிறந்து விளங்குவதற்கும் அதன்மூலம் வேலைவாய்ப்பு நேரடியாகவும் மறைமுகமாகவும் உருவாக்கப்படுகின்றன. எனவே, பொருளாதார வளர்ச்சிக்கு கனிமங்கள் உயிர்நாடியாகவும் அத்தியாவசியமானதாகவும் உள்ளன.

தமிழ்நாட்டில் தொழில் சார்ந்த கனிமங்களான பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், கார்னட் மணல், சிலிகா மணல், குவார்ட்ஸ், பெல்ஸ்பார், கிராபைட், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, மாக்னசைட், இரும்புத்தாது ஆகியவை கிடைக்கின்றன. இவை தவிர, பொதுவாக உபயோகப்படும் கருப்பு மற்றும் பலவண்ண கிரானைட் கற்கள் உள்ளிட்ட சிறுவகை கனிமங்களும் கிடைக்கின்றன.

கனிம வள ஆதாரங்கள் மீளப்பெற முடியாததும் குறைந்து அழியும் ஆதாரமாகவும் விளங்குவதால், கனிமங்களைப் பாதுகாத்தல் மற்றும் விவேகமாக அகழ்ந்தெடுத்தல் ஆகியவை கனிம நிர்வாகத்தின் முக்கிய பணியாகும். இதன் வாயிலாக மாநில அரசுக்கு கணிசமான வருவாயினை ஈட்டித்தருவதும் இத்துறையின் முக்கிய பொறுப்பாகும்.

## 12.1. துறையின் குறிக்கோள்கள்

1) நவீன கனிம ஆய்வு உத்திகளைக் கையாண்டு புதிய கனிம படிவங்களை கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்வதை துரிதப்படுத்துதல்.

2) கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவ முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு கனிம வளம் குறித்த தகவல்கள் மற்றும் விபரங்களை வழங்குதல்.

3) கனிமங்களை அதிக அளவு பயன்தரத்தக்க வகையில் பயன்படுத்துவதன் மூலம் கனிமத் தொழில் முனைவோர்களிடையே போட்டி மனப்பான்மையினை ஊக்குவித்தல்,

4) மாநிலத்தில்கனிம ஆய்வுப் பணிகள் மற்றும் சுரங்கப்பணிகள் மேற்கொள்ளும் பொழுதும் அதற்குப் பின்னரும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

5) சுரங்கப்பணிகள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிற்சாலைகளுக்குத் தேவையான மனித வளத்தினை மேம்படுத்தி ஊக்குவித்தல்.

6) சுரங்கப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு பாதுகாப்பும் நல்வாழ்வும் அளித்தல்.

7) சட்டவிரோதமான சுரங்கப்பணிகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் சட்டத்திற்கு புறம்பாக கனிமங்களை எடுத்துச்செல்பவர்கள் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.

8) சிறந்த கனிம நிர்வாகத்தின் மூலம் கனிம வருவாயினை அதிகரித்தல்.

## 12.2. புவியியல் மற்றும் சுரங்கத்துறை பின்வரும் பணிகளைச் செய்து வருகின்றது:

1. கனிம ஆய்வு மற்றும் கனிமங்களின் மதிப்பீடு.
2. நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புவி தொழில் நுட்ப ஆய்வுகள்.
3. கனிம நிர்வாகம்.

### 12.2.1. நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புவி தொழில்நுட்ப ஆய்வுகள்

நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் நிலச்சரிவு நிகழ வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்காணிக்கவும்

புவி தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளவும் அரசால் புவி தொழில் நுட்ப ஆய்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள், ஆய்வுகள் மேற்கொண்டு நிலச்சரிவு ஏற்பட சாத்தியமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து புவியியல் சிறப்பு வரைபடங்கள் மற்றும் மண்டல வரைபடங்கள் தயாரித்து மாவட்ட நிர்வாகத்திற்கு நிலச்சரிவு அழிவுகளை தடுக்கும் பணிகளுக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றன. மேலும் நிலச்சரிவினால் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் பொது மக்களின் உடைமைகள் மற்றும் உயிரைப் பாதுக்கும் வகையில் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் புனரமைப்பு சம்பந்தமாக தொழில் நுட்ப கருத்துருக்களை அளித்து வருகின்றன.

புவி தொழில் நுட்ப மையங்கள் மலைப்பகுதிகளில் கட்டுமான பணிகள் மேற்கொள்ள உள்ள பகுதிகளை, நிலச்சரிவு பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன் புவி தொழில் நுட்ப ஆய்வுகள் மேற்கொண்டு கட்டுமான பணிகளுக்குக்கான சாத்தியக்கூறு அறிக்கைகளை வழங்கி வருகின்றன. **2015–16**ஆம் ஆண்டில் இப்புவி தொழில் நுட்ப மையங்கள் **83** கட்டடங்கள் மற்றும் வீட்டு மனைகளுக்கு சாத்தியக்கூறு அறிக்கைகளை அளித்துள்ளன.

### 12.2.2. கனிம நிர்வாகம்

சிறு கனிமங்கள் மற்றும் பெருங்கனிமங்களுக்கான கனிமச் சலுகைகளை சட்டங்கள் மற்றும் விதிகளின்படி வழங்குவது கனிம நிர்வாகத்தில் அடங்கும். சுற்றுப்புறச் சூழ்நிலைகளை பாதிக்காத வண்ணம் அறிவியல் பூர்வமான முறையில் கனிமங்களை அகழ்ந்தெடுத்தலை உறுதிசெய்தல், கனிமங்களைப் பாதுகாத்தல் மற்றும் கனிம மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல், சட்டவிரோதமாக கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் எடுத்துச் செல்வதை தடுத்தல், உரிமக்கட்டணம், ராயல்டி மற்றும் இதர தொகைகளை வசூலித்தல் மூலமாக மாநிலத்தின் கனிம வருவாயினை அதிகரித்தல் போன்ற கனிம நிர்வாகப் பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகின்றது.

கனிம நிர்வாகத்தினை திறம்பட மேற்கொள்வதற்காக, இத்துறையில் துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் தலைமையில் **28** மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அலுவலகங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

நடைமுறையில் உள்ள பெருங்கனிமம் மற்றும் சிறுகனிம குத்தகைகளின் எண்ணிக்கை மற்றும் பரப்பளவு விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| **வ. எண்** | **கனிமத்தின் பெயர்** | **நடைமுறையில் உள்ளகுத்தகை உரிமங்களின் எண்ணிக்கை** | **பரப்பு ( ஹெக்டேரில்)** |
|---|---|---|---|
| **பெருங்கனிமங்கள்** | | | |
| 1 | கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு | **24** | **48,940.00.0** |
| 2 | பழுப்பு நிலக்கரி | **1** | **25,900.00.0** |
| 3 | சுண்ணாம்புக்கல், மேக்னசைட், பாக்சைட், கார்னட், இல்மனைட், ரூட்டைல், கார்னட், மற்றும் சமீபத்தில் சிறு கனிமங்களாக வகைப்படுத்தப்பட்ட குவார்ட்ஸ் மற்றும் பெல்ஸ்பார், ஜிப்சம், தீ களிமண், லைம்கன்கர், சிலிக்கா மணல் மற்றும் பல) | **898** | **10,057.39.0** |
| | **மொத்தம்** | **923** | **84,897.39.0** |

| | | | |
|---|---|---|---|
| **சிறு கனிமங்கள்** | | | |
| 1 | கிரானைட் | 902 | 3,610.23.0 |
| 2 | இதர சிறு கனிமங்கள் (கல், மண், கிராவல், சவுடு மற்றும் பல) | 2,274 | 4,615.64.0 |
| | **மொத்தம்** | **3,176** | **8,225.87.0** |
| | **நிகர மொத்தம்** | **4,099** | **93,123.26.0** |

### 12.3. கனிம வருவாய்

இத்துறை கனிம மேலாண்மையில் மேற்கொண்ட செம்மையான மற்றும் முனைப்பான நடவடிக்கையின் பலனாக மாநிலத்தின் கனிம வருவாய் தொடர்ந்து அதிகரித்து கொண்டே வந்துள்ளது. அரசுக்கு கிடைக்கும் கனிம வருவாயில் நல்ல முன்னேற்றம் காண்பிக்கும் வகையில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை கடினமான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. **1983–84**ஆம் ஆண்டில் ரூ.**2.83** கோடியாக இருந்த கனிம வருவாய் **2015–16**ஆம் ஆண்டில் மணல் வருவாய் நீங்கலாக ரூ.**1,007.74** கோடியாக பன்மடங்கு உயர்ந்துள்ளது. இது இத்துறை மேற்கொண்ட முயற்சிகளுக்கு நற்சான்றாக அமைந்துள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் பெறப்பட்ட கனிம வருவாய் (மணல் வருவாய் நீங்கலாக) பின்வருமாறு:

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2010–11 | 671.38 |
| 2011–12 | 835.84 |
| 2012–13 | 943.99 |
| 2013–14 | 969.70 |
| 2014–15 | 993.63 |
| 2015–16 | 1007.74 |

## 12.4. இணைய வழி சுரங்க குத்தகை பதிவேடு

இணையவழி சுரங்க பதிவேடு என்பது சுரங்க குத்தகை உரிம பகுதிகளை, புவி தகவல் அமைப்பின் அடிப்படையில் உரிய வரைபடங்களுடன் ஒத்திசைவு செய்து, செயற்கைகோள் நிழற்படங்களின் உதவியுடன் ஒப்பீடு செய்வதாகும். இத்திட்டத்தினை முழுமையாக செயல்படுத்துவதன் வாயிலாக மாநிலத்தின் அனைத்து கனிமவள அகழ்ந்தெடுக்கும் பகுதிகளை அறிந்து கொள்ளமுடியும்.

ரூ.108 லட்சம் அரசு ஒதுக்கீடு செய்ததன் மூலம் கனிம குத்தகை உரிமம் வழங்கப்பட்ட பகுதிகளை கணினி வாயிலாக பதிவுசெய்து இணைய வழி சுரங்க பதிவேடு (Online Mining Tenement Registry) தயாரிக்கும் பணி முதற்கட்டமாக

கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பணிகள் முடிவுற்றது. மாநில தகவல் மையத்தில் உள்ள இத்துறையின் கணினி சேவையகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்திற்கான இணையவழி சுரங்க குத்தகை பதிவேடு தயாரிப்பதற்கு முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.


புவியியல் மற்றும் சுரங்கத் துறை
கனிம வருவாய் (மணல்தவிர )
(ரூபாய் கோடியில்)
1050
1000
950
900
850
800
750
835.84
943.99
969.70
993.62
1007.74
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16

# 13. சர்க்கரைத் துறை

கரும்புப் பயிர் தமிழ்நாட்டின் முக்கியப் பயிர்களில் ஒன்றாகும். கரும்பு உற்பத்தியின் அடிப்படையில் செயல்படும் சர்க்கரை உற்பத்தித் தொழில், கரும்பு விவசாயிகள், ஆலை முதலீட்டாளர்கள், உறுப்பினர்கள், ஆலைத் தொழிலாளர்கள் ஆகியோரின் பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாக உதவி வருகிறது. ஊரகத் தொழிலாளர்கள், பெருமுகவர்கள், சிறு வியாபாரிகள், உப தொழில் புரிவோர்க்கு வாழ்வாதாரம் நல்கும் தொழிலாகவும் அமைந்துள்ளது. நாட்டின் சர்க்கரை உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் நான்காவதாக தமிழ்நாடு உள்ளது.

மாநிலத்தில் மொத்தம் உள்ள 46 சர்க்கரை ஆலைகளில் 43 சர்க்கரை ஆலைகள் தற்போது இயங்குகின்றன. இவற்றில், தனியார் துறையில் 25 ஆலைகளும் கூட்டுறவுத் துறையில் 16 ஆலைகளும் மற்றும் பொதுத்துறையில் 2 ஆலைகளும் இயங்கி வருகின்றன.

## 13.1. செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் இயங்கி வரும் 43 சர்க்கரை ஆலைகள் 2015–16அரவைப் பருவத்தில் சுமார் 144.31 இலட்சம் டன் கரும்பினை அரவை செய்து 9.06 சதவீத சராசரி

கட்டுமானத்துடன் 13.08 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளன. நடப்புப்பருவத்தில் தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் (15.7.2016 வரை) 128.30 இலட்சம் டன் கரும்பு அரவை செய்து 8.84 சதவீத சராசரி கட்டுமானத்துடன் 11.33 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன. 2014–15 அரவைப் பருவத்தில் கரும்பு அரவை செய்த விபரம் மற்றும் 2015–16 அரவைப் பருவத்தில் அரைக்கப்படவுள்ள கரும்பு அளவின் உத்தேச மதிப்பீடு விவரம் இத்துறையின் செயல்பாட்டு ஆய்வுரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

2014–15ஆம் ஆண்டில் அரசின் பரிந்துரை விலை ஒரு டன்னுக்கு ரூ.2,650 (போக்குவரத்துச் செலவு ரூ.100 உட்பட) ஆக இருந்தது. 2015–16ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு, ஒரு டன் கரும்புக்கு ரூ.100 போக்குவரத்து கட்டணத்துடன் ரூ.2,850 என மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவிக்கப்பட்டது.

உற்பத்தித்திறனை அதிகரித்து கரும்பு உற்பத்தியை பெருக்கவும் மற்றும் சர்க்கரை ஆலைகள் 100 சதவீதம் அரவைத் திறனை அடையும் நோக்கத்துடனும், புதிய தொழில் நுட்பங்களை அடிப்படையாக கொண்ட நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம், அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரையை விற்பனை செய்வதில் ஒருங்கிணைப்பு முகவராக செயல்பட்டு வருகிறது. 2015–16ஆம் நிதியாண்டில் 2.92 இலட்சம் டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.826.52 கோடியாகும். 2016–17ஆம் நிதியாண்டில் ஜுன் திங்கள் 2016 வரை 0.98 இலட்சம் டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.343.55 கோடியாகும்.

கரும்பின் உப உற்பத்திப் பொருளான கரும்புச் சக்கை, ஆலை செயல்பாட்டிற்குத் தேவையான நீராவி மற்றும் மின் உற்பத்திக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆலையின் தேவைக்கு மேல் உபரியாக உள்ள கரும்புச் சக்கை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பிற தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2015–16ஆம் நிதியாண்டில் 74,264 டன் கரும்புச் சக்கை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.13.24 கோடியாகும். 2016–17ஆம் நிதியாண்டில் ஜுன் திங்கள் 2016 வரை, 9,685 டன் கரும்பு சக்கை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.1.60 கோடியாகும்.

சர்க்கரை ஆலையின் மதிப்புமிக்க உப உற்பத்தி பொருளான கழிவுப்பாகானது, எரிசாராயம், இரசாயனப் பொருள்கள் மற்றும் கால்நடை தீவன உற்பத்திக்காக

பயன்படுத்தப்படுகிறது. இரண்டு கூட்டுறவு எரிசாராய ஆலைகளின் தேவைக்கு போக மீதமுள்ள கழிவுப்பாகு, வடிப்பாலைகள், இரசாயன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர தேவைக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2015–16ஆம் நிதியாண்டில் 1.59 இலட்சம் டன் கழிவுப்பாகு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.61.14 கோடியாகும். 2016–17ஆம் நிதியாண்டில் ஜூன் 2016 வரை, 0.43 இலட்சம் டன் கழிவுப்பாகு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.13.99 கோடியாகும்.

கழிவு மண், சர்க்கரை ஆலைகளின் ஒரு உப உற்பத்தி பொருளாகும். இது மண்புழு உரம் (வெர்மி கம்போஸ்ட் உரம்) தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. சில சர்க்கரை ஆலைகள், நுண் ஊட்டச்சத்து, நுண் உயிரினங்களைச் சேர்த்து மேம்படுத்தப்பட்ட கழிவு மண் தயாரிக்கவும் இக்கழிவு மண்ணை பயன்படுத்தி வருகின்றனர். மீதமுள்ள கழிவு மண்ணை சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு சலுகை விலையில் விற்பனை செய்கின்றன.

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் எரிசாராய ஆலைகள், 2015–16ஆம் நிதியாண்டில் ரூ.40.70 கோடி மதிப்பிலான 122.95 இலட்சம் லிட்டர் எத்தனால் மற்றும் எரிசாராயம் ஆகியவற்றை விற்பனை செய்துள்ளன.

2016–17ஆம் நிதியாண்டில் ஜுன் திங்கள் 2016 வரை ரூ.2.38 கோடி மதிப்பிலான 7.40 இலட்சம் லிட்டர் எத்தனால் மற்றும் எரிசாராயம் ஆகியவற்றை விற்பனை செய்துள்ளன.

பெட்ரோலுடன் 5 சதவீதம் எத்தனாலை கலப்பதற்கான அனுமதி உள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 9.60 கோடி லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட 8 எத்தனால் ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஆண்டுக்கு 1.80 கோடி லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் தற்போது கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில், எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் தலா 7.50 மெகாவாட் திறனிலும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 5 மெகாவாட் திறனிலும் இணை மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட உபரி மின்சாரம் மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு 2015–16ஆம் நிதியாண்டில் ரூ.1.07 கோடி அளவிற்கு வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

## 13.2. இணை மின் உற்பத்தி நிலையம் மற்றும் ஆலைகளை நவீனப்படுத்தும் திட்டம்

183 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள், மொத்தம் ரூ.964.88 கோடி செலவில் 12 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகின்றன.

### 13.2.1. இணை மின் திட்டத்தின் ஆலை வாரியான திட்ட மதிப்பீடு

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | மாவட்டம் | மெகா வாட் அளவு | திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | நாமக்கல் | 15 | 79.18 |
| 2 | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 15 | 78.83 |
| 3 | தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 12 | 60.20 |
| 4 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | வேலூர் | 15 | 79.51 |
| 5 | செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | திருவண்ணா மலை | 15 | 81.03 |
| 6 | கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 15 | 84.12 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | கள்ளக்குறிச்சி– 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 15 | 76.81 |
| 8 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 18 | 94.25 |
| 9 | எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை | கடலூா் | 15 | 75.54 |
| 10 | தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை | மதுரை | 15 | 80.61 |
| 11 | பெரம்பலூா் சர்க்கரை ஆலை | பெரம்பலூா் | 18 | 96.14 |
| 12 | அறிஞா் அண்ணா சர்க்கரை ஆலை | தஞ்சாவூா் | 15 | 78.66 |
| | மொத்தம் | | 183 | 964.88 |

இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் முடியும் தருவாயிலுள்ளன. செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மேற்கண்ட பணிகள் நிறைவடைந்து சோதனை ஓட்டம் 8.2.2016ல் துவங்கி 3.5.2016ல் முடிவுற்றது. 48,684 டன் கரும்பு அரவை செய்யப்பட்டு சுமார் 26.36 இலட்சம் யூனிட் மின்சாரம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

இணை மின் திட்டத்துடன், மேற்காணும் 12 சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்திக்குத் தேவையான மின்சக்தி

மற்றும் நீராவிப் பயன்பாட்டினைக் குறைத்து அதன் மூலம் மின் ஏற்றுமதி அளவினை அதிகரிக்க ரூ.276.27 கோடி செலவில் ஆலை இயந்திரங்களை நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 13.3. ஆலை நவீனமயமாக்கல் – திட்ட மதிப்பீடு

| வ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | மாவட்டம் | திட்டமதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | நாமக்கல் | 7.88 |
| 2 | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 11.15 |
| 3 | தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை | தர்மபுரி | 11.21 |
| 4 | வேலூார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | வேலூார் | 37.07 |
| 5 | செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை | திருவண்ணாமலை | 14.68 |
| 6 | கள்ளக்குறிச்சி–1 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 9.02 |
| 7 | கள்ளக்குறிச்சி–2 கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | 10.96 |

| | | | |
|---|---|---|---|
| 8 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை | விழுப்புரம் | **40.95** |
| 9 | எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை | கடலூார் | **13.63** |
| 10 | தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை | மதுரை | **39.94** |
| 11 | பெரம்பலூார் சர்க்கரை ஆலை | பெரம்பலூார் | **42.72** |
| 12 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | தஞ்சாவூர் | **37.06** |
| | மொத்தம் | | **276.27** |

சேலம், சுப்ரமணியசிவா, தர்மபுரி, கள்ளக்குறிச்சி–1, கள்ளக்குறிச்சி–2 மற்றும் செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இயந்திரங்களை நவீனப்படுத்தும் பணிகள் முடிவு பெற்றுள்ளன.

**13.4. எரிசாராய ஆலையுடன் கூடிய எத்தனால் ஆலை**

செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நாள் ஒன்றுக்கு 45 கி.லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலையுடன் கூடிய வடிப்பாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன. இதற்கான வன மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் தடையில்லாச் சான்றிதழ்

பெறப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 45 கி.லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட வடிப்பாலையுடன் கூடிய எத்தனால் ஆலைகளை கள்ளக்குறிச்சி–2 மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி கோருதல், பல்வேறு துறை அனுமதி பெறுதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 14. நிறைவுரை

சிறப்பான பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் துறையின் முக்கிய பங்கினை உணர்ந்து, ஆற்றல் மிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழல் உருவாக பல்வேறு கொள்கை சார்ந்த முயற்சிகளை மேற்கொண்டு, உற்பத்தி மற்றும் சேவைத்துறைகள் வளர்ச்சி அடைய மாநில அரசு வழிவகுத்தது. தொழில் வளர்ச்சியில், இந்திய மாநிலங்களுள் சிறந்த வளர்ச்சியடைந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. தாராளமயமாக்கலுக்குப்பின் அந்நிய நேரடி முதலீடு மற்றும் உள்நாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

சமீபகாலத்தில், மாநிலத்தின் வலுவான ஒன்றிணைந்த பொருளாதார வளர்ச்சிக்கு தொழில்மயமாதல் குறிப்பாக உதவியுள்ளது. மாநிலத்தின் வலிமை மிக்க உற்பத்தி கலாசாரம், இத்துறையில் குறிப்பாக, மோட்டார் மற்றும் மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், தோல், பொறியியல் மற்றும் ஜவுளி துறைகளில் முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாடு முன்னணி நிலையில் இருக்க முக்கிய காரணியாக உள்ளது. தொழில்மயமாவதன் தேவைகளுக்கேற்ப தொழில்

உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களுக்கு உகந்த கொள்கை முயற்சிகளான ஒற்றைச் சாளர வசதி, தொழில் துவங்கும் நடைமுறைகளை எளிமையாக்குதல், தொகுப்பு சலுகைகள் போன்றவற்றால் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் முதலீட்டாளர்களால் மிகவும் விரும்பப்படும் இடமாக தமிழ்நாடு விளங்குகிறது.

தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக மாற்றப்பட்டுள்ளதோடு, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித்துறையிலும் முன்னணியில் உள்ளது. கடந்த ஆண்டில் வெற்றிகரமாக முடிந்த **2015** உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு என்பது ஒரு மைல்கல் ஆகும். மேலும், முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழல் மற்றும் பயனுள்ள தொடர் நடவடிக்கைகள் தொழில் துறையில் எடுக்கப்பட்டு வருவதாலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உருவாக்கப்பட்டுள்ளது.

உலக பொருளாதார சூழ்நிலையில் தற்போது உள்ள ஏற்ற இறக்கமான நிலை மற்றும் பெரிய நாடுகளின் பொருளாதாரங்களின் பின்னடைவு ஆகிய இந்த பின்புலத்தில், இந்திய நாடு விரைவாக பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்து உயர்ந்த பட்ச 7 சதவீத பொருளாதார வளர்ச்சியினை அடைந்துள்ளது. இதனைவிட மேலான வளர்ச்சியுடன் தமிழ்நாடு, ஆற்றல் மிக்க நம்முடைய

மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு தலைமையின் கீழ் வலுவான உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளில் விரைவாக முன்னேற்றம் கண்டு வருகிறது. பல சீரிய முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதால் தமிழ்நாடு தொடர்ந்து முதன்மை மாநிலமாக உள்ள நிலையில் உற்பத்தி துறை, வருங்காலங்களிலும் அவ்வாறே இருக்கும் என நம்பப்படுகிறது.

மேலும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சி அதன் அனைத்து துறைகளிலும் ஏற்படுவதை உறுதி செய்ய, தொழில் துவங்கும் நடைமுறைகளில் எளிமையைப் புகுத்தி பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டும், தமிழ்நாடு மற்றும் அதன் குடிமக்கள் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும், தொழில் வளர்ச்சிக்கான சிறந்த உட்கட்டமைப்பினை உருவாக்கவும், பல்வேறு முகமைகளுடன் ஒன்றிணைந்து தொழில்துறை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

**எம்.சி. சம்பத்**
**தொழில் துறை அமைச்சர்**